# திருக்கோயில்

ஏப்ரல் 1976

ரூ. 1



23 JUN 1976

# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்கு கின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

RR NO. 196/76

(14)

முகப்பு :

இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமி கோயிலின் அழகிய தோற்றம்.

# திருக்கோயில்

மாலை : 18 இராக்கத—பங்குனி ஏப்ரல்—1976 மணி : 7

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

''திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தாதாரர்'களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

திரு. ஆணையர்.
*அறநிலைய ஆட்சித் துறை,*
*சென்னை—600 034*

என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு (12) அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-

## பொருளடக்கம்

பெருங்கவிஞர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

நம்மாழ்வாரும் திருவாய் மொழியும்
திருமந்திரமும், சிவஞான சித்தியாரும்
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
மெய்கண்ட தேவர் அருள்நெறி
—'தத்துவ வித்தகர்'
டாக்டர் திரு. வ. ஆ. தேவசேனாபதி, M.A., Ph.D.
இராமாயண நுண்பொருள்
கோயில் வழிபாடு
—கவியோகி சுத்தானந்த பாரதியார்
கன்னியாகுமரி —திரு. எஸ். பத்மநாபன்
அறஞ்செய விரும்பு —(முன்னாள்) நீதிபதி
திரு. R. சதாசிவம், M.A., M.L.
காளிதாசன் உவமையில் குமரன்
—'மும்மொழிக் கொண்டல்'
திரு. பெ. திருஞான சம்பந்தம், M.A., L.T.
சித்தாந்தச் செந்நெறி
—பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார்,
சிதம்பரம்.
நீர்வண்ணன் —'பத்மவிபூஷண்' 'மகாவித்துவான்'
திரு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள்,
காஞ்சிபுரம்.
கோடி தேவர்கள் கும்பிடும் நீடூர்
—திரு. வி. சிவபாதசேகர், B.Sc.,
அம்மை திருப்பல்லாண்டு
—கவிஞர் திரு. ரெ. முத்துகணேசன்
உலக இந்துமத மாநாட்டின் தலைமையுரை.
—மதுரை ஆதீனத் தலைவர்
சித்த மருத்துவம் —''முத்தமிழ்க் காவலர்''
திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திருச்சி.

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## "என் கடன் பணி செய்து கிடப்பதே"

JL
Q2m 811, N58
N76-18-7
158612

## பெருங்கவிஞர்

# மீனாட்சிசுந்தரம்பிள்ளை *

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை :**

நம் நாட்டில், சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில், தமிழ்ப் புலமை வானில் மிகவும் ஒளிபரப்பிப் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர்களுள், மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள் மூவர்! அவர்கள் முறையே பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1815—1876), வடலூர் வள்ளல் அருட்டிரு இராமலிங்க அடிகளார் (1823—1874), யாழ்ப்பாணநல்லூர் சீலத்திரு ஆறுமுக நாவலர் பெருமான் (1822—1979) என்பவர்கள் ஆவர். இம்மூவரையும் 19-ஆம் நூற்றாண்டின் ''முப்பெருஞ் சுடர் மணிகள்'' என்று கூறுதல் பொருந்தும்.

**கவிஞரும் நாடும் :**

ஒரு நாட்டின் பெருமைக்கும் புகழுக்கும் காரணமாவன பலவற்றுள் அந்நாட்டில் தோன்றும் புலவர் பெருமக்களின் சிறப்பும் ஒன்றாகும். 'இந்தியாவை இழந்தாலும் இழப்போம் ; எங்கள் ஷேக்ஸ்பியரை இழக்க ஒருபோதும் ஒருப்படோம்'' என்று தாமஸ் கார்லைல் (Thomas Carlyle) குறிப்பிட்டிருப்பதும், ஈண்டு நாம் நினைக்கத்தகுவது.

''பெருங் கவிஞர் ஹோமர் வாழ்ந்த பண்டைக் கிரேக்க அரசியலுலகம் அழிந்து பட்டதாயினும், அவர்தம் கவிதை இன்றும் உயிர்ப்புடன் உலவிவருகிறது. உரோம நாட்டின் பழம் பெருஞ் சிறப்பெல்லாம் மறைந்து போயிற்றெனினும், வர்ஜில் என்பவரின் கவிதைகள் இந்நாளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. எந்த உஜ்ஜயினி மாநகரம் காளிதாசர் பெருமானால் அணி செய்யப் பெற்றதோ, அந்த உஜ்ஜயினி மாநகரம், தன் நினைவைக் காளிதாசர்பால் ஒப்படைத்துவிட்டு நிலைகுலைந்து தளர்ந்தது; ஆனால் காளிதாசர் கண்ட கவிதைக் கற்பனைக் கனவுகள், உயிருடைய ஒருவனின் குரலொலியைப் போல, இன்றும் நம்மைக் கவர்ந்து இயக்கி நிற்கின்றன. இடைக் காலப் பெரு வேந்தர்கள் பலரும் இறந்து போனார்கள். ஆனால் தாந்தேயின் கவிதைகள் இன்றும் விரும்பிப் பயிலப் பெறுகின்றன. ஷேக்ஸ்பியர் காரணமாக, எலிசபெத் அரசியாரின் காலம் ஆங்கிலமொழி நிலைத்துள்ள அளவும் பாங்குற நினைத்துப் பாராட்டப்பெறும்''. †

**அழியாப் புகழாளர் :**

அந்நிலையில் தமிழ் நாடு உள்ள வரையில், தமிழ் நாட்டில் தலங்கள் உள்ள வரையில், அத்தலங்களில் கோயில்கள் உள்ள வரையில், தலங்களும் கோயில்களும் பற்றிய இலக்கியங்கள் உள்ள வரையில், அவ்விலக்கியங்களைக் கற்றுச் சுவைத்து மகிழ்ந்து போற்றச் சமய வுணர்வும் தமிழறிவும் உடைய மக்கள் உள்ள வரையில், பெரும் கவிஞர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் அருமை பெருமைகளும், அவர்தம் பேரும் புகழும், என்றும் நிலைபெற்று ஓங்குதல் திண்ணம்.

**உத்தமக் கவிஞர் :**

ஜான் ரஸ்கின் (John Ruskin) என்னும் மேலைநாட்டு அறிஞர் 'உண்மைக் குரலொலிகள்' (Genuine Voices) என்றும், 'வெறும் எதிரொலிகள்' (Mere Echoes) என்றும், கவிஞர்களை இரு வகையாகப் பிரித்துரைப்பார். அவர்களுள் முதல் வகையினரைச் சேர்ந்தவராய், முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமப் பெருங் கவிஞர், நம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்!

**மதிநுட்பம் நூலோடுடையார் :**

கற்றவர்கள் எல்லோருமே கவிஞர்களாக ஆகிவிடுவதில்லை ; கவிஞர்கள் என்போர் எல்லோருமே கற்றறிந்தவர்களாக இருப்பதில்லை. ஆனால் நம் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம்

---

† "The political world of *Homer* is dead while his song is living today. The splendour of Rome has perished but the poetry of *Virgil* is yet vital. The dreams of *Kalidasa* still move us like the cry of a living voice, with their poignant sense of tears in human relations while the Ujjain of which he was the ornament has left her memory of his keeping. The great mediaeval potentates are forgotten, but the song of *Dante* is still cherished ; and the Elezabethan age will be remembered as long as the English language lives on account of its *Shakespeare*."

—Dr. S. Radhakrishnan.

---

* பெருங்கவிஞர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் நூற்றாண்டுவிழா (6-4-1815—1-2-1876) நிகழ்ச்சியினை முன்னிட்டு, பூவாளூர்ச் சைவ சித்தாந்த சங்கத்தின் 66-ஆம் ஆண்டு விழாவில், திருவுருவப் பட்த்திறப்புச் செய்து, நிகழ்த்திய தலைமையுரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்.

பிள்ளை அவர்களோ, மில்ட்டன் போல ஆழ்ந்து அகன்றோங்கிய அரும்பெருங் கல்வியாளர்! ஷேக்ஸ்பியர் போன்று இயல்பாகவே பாடுந் திறம் பெற்ற இணையற்ற மாபெருங் கவிஞர்! கல்வி நலமும் கவிதைத் திறமும் இவர்கள் பால் ஒருங்கேசிறப்புறப் பொருந்தியிருந்தன! அதனாலேயே ''மதி நுட்பம் நூலோடுடை யார்க்கு அதி நுட்பம்யாவுள? முன் நிற்பவை'' என்னும் திருக்குறள் மொழிக்கு ஏற்ப, இவர் தமிழுலகில் தமக்கிணை தாமேயாகத் தலைசிறந்து விளங்கினார்!

பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் கடலனைய பெருமையை, எம் ஒரு நாவால் அளந்து கூறுதல் ஒல்லுமோ? அவர் தம் அரும்பெரும் நூல்கள் பலவற்றுள் ஒன்றே ஒன்றை மட்டும், தாலிபுலாக நியாயம் என்னும் முறை (Specimen) பற்றி ஈண்டுச் சுட்டியுரைத்து அமைதல் சாலும்!

**அவையடக்கம் :**

'அவையடக்கம்' என்பது, நம்முடைய தமிழிலக்கியங்கள் பலவற்றிலும், 'கடவுள் வாழ்த்து' என்னும் பகுதியை அடுத்து வரு கின்ற, ஒரு சிறப்பான—சுவைமிக்க—நல்ல பகுதியாகும். தொல்காப்பியம் திருக்குறள் சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற நூல்களில், 'அவையடக்கம்' என ஒரு பகுதி தனியாக இருக்கக் காண்கிலோம். எனினும், திருத்தக்க தேவர் இயற்றியருளிய சீவகசிந்தாமணி முதலிய பழைய விழுமிய தமிழ் இலக்கியங்களில், அவை யடக்கம் என்பது பயின்றுவரக் காண்கிறோம். தாம் இயற்றும் நூலில், பல குற்றங்குறைகள் காணப்படினும், அவற்றைப் பொறுத்தருளி, அறிவுடைய பெருமக்கள் தம்முடைய நூலை இகழாது ஏற்றுக் கோடல் வேண்டும் என வேண்டிக்கொள்ளும் முறையில், கவிஞர்கள் தம்மைப் பெரிதும் தாழ்த்திக்கொண்டு, இப் பகுதியிற் பல பாடல்களை அமைப்பர். அடிப் படைக் கருத்து ஒன்றேயாயினும், இதனை வெவ் வேறு வகைகளில், பல்வேறு உவமைகள் முத லியன காட்டி, அழகும் சுவையும் அருமையும் பெரிதமையக் கவிஞர்கள் வெளியிட்டிருக்கும் திறம், நினைத்தொறும் வியப்பும் மகிழ்ச்சியும் விளைவிப்பதாகும். அம்மட்டோ? அவையடக்கக் கவிதைகள், அவ்வக் கவிஞர்களின் குணநலங் களைப் புலப்படுத்துவதுடன், அவர்களின் சிறந்த பல புலமை நலக் கூறுகளுக்கு ஏற்றவண்ணம் அழகுற அமைகின்றன.

**பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை :**

சென்ற நூற்றாண்டில், திருவாவடுதுறை ஆதீனத்துப் பெருங்கவிஞரேறாக விளங்கியிருந்த மகாவித்துவான் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் அருமை பெருமைகளை, நம் தமிழு லகம் நன்கறியும். அவர்கள் பாடியருளிய அரும் பெறல் நூல்கள் எத்தனையோ பல. அவற்றுள் ஒன்றாகிய திருவம்பர்த் தலபுராணத்தில் வரும் அவையடக்கச் செய்யுட்கள் சிலவற்றின் பொருளை மட்டும், இங்குச் சுருக்கமாகக் கண்டு சுவைத்து இன்புறுவோம் :

**கேனோப நிடதம் :**

(1) பிரமதேவர் வழிபட்ட திருவம்பர்ப் பிரமபுரேசரின் புராணம் பாடுவதற்கு உனக்குத் தகுதியில்லை என்று சிலர் கூறக்கூடும். ஒரு காலத்தில் திருமால் முதலிய தேவர்களும் கூடத் தன்னை அசைக்க முடியாதபடி நிலைபெற்று நின்று, ஒரு துரும்பும் கூட வெற்றி பெற்றது என்னும் வரலாற்றைக் கேனபநிடதம் கூறு கின்றது. ஆதலின் இறையருள் பெற்றால், இறையருளைத் துணையாகப் பற்றினால், எளிய வன் ஆகிய யானும் இந்நூலைப் பாடுதல்இயலும்.

''பிரமனார் பூசை கொண்டு
    பெருந்திருக் கோயில் மேய
பரமனார் புராணம் பாடும்
    பண்புஉனக் கில்லை என்னில்,
உரமனார் அணங்கி னோர்முன்
    னேரைவெல் துரும்பு போலத்
திரமனார் அருள் இலேசம்
    சேர்தரின் உண்டாம் அன்றே''

**குறிலும் நெடிலும் :**

(2) தமிழில் உயிர் எழுத்துக்கள் குறில் நெடில் என இரு வகைப்படும். குறுகிய ஓசை யையுடைய குற்றெழுத்துக்கள் இருத்தல் பற்றியே, நீண்ட ஓசையை யுடையன என்னும் பொருளில், மற்றைய எழுத்துக்கள், நெட் டெழுத்துக்கள் எனப் பெயர் பெற்றன. நெட்டெழுத்துக்களுள் ஆ ஈ ஊ ஏ ஓ என்ற ஐந்திற்கு மட்டுமே, அ இ உ எ ஒ என்னும் ஐந்து இணைக்குற்றெழுத்துக்கள் முறையே உள்ளன. ஐ ஔ என்னும் இரண் டுக்கும் இணையான குற்றெழுத்துக்கள் இல்லை.

''ஐஔ இஉச் செறிய முதல் எழுத்து
இவ்விரண்டு ஓர்இன மாய்வரல் முறையே''

என்பது நன்னூல். ஆயினும் இரண்டு மாத்தி ரையளவு ஒலித்தல் ஆகிய காரணம் பற்றி ஒரு வகையில் ஐ ஔ என்னும் இரண்டும் கூட நெட்டெழுத்துக்களேயாகும் என்று இலக்கண நூலார் கொள்வர். அம்முறைப்படி அறிவில்லாத என்னுடைய இழிந்த கவிதைகளையும் கூட, இறைவனுடைய புகழ் பற்றியனவாக இருக்கும் காரணம் பற்றி, அறிவுடையோர்களின் சிறந்த பாடல்களோடு சேர்த்துப் பெரியோர்கள் மகிழ்ந்து ஏற்றுக் கொள்வார்கள்.

''செறிகுறில் உடைஐந் தோடு
    குறில்இலா இரண்டும் சேர்த்து
மறிவில்நெட் டுயிர்ஏழ் என்று
    மாத்திரை நோக்கிக் கொள்வார்;
அறியிய லுடைய பாவோடு
    இயலிலா அடியேன் பாவும்
குறியிலான் சரிதம் நோக்கிக்
    குறிகொள்பா என்றே கொள்வார்''

**மூர்த்தி நாயனார் :**

(2) நல்ல சிறந்த சொற்களைக் கொண்டு இறைவனைத் துதிப்பதுதான் முறை. அங்ஙனம்

இயலாமல் முட்டுப்பாடு நேர்ந்தால், புல்லிய இழிந்த சொற்களையேனும் கொண்டு போற்ற முற்படுதல் கடமையேயாகும். மூர்த்தி நாய ஞர் சிறந்த நல்ல சந்தனக் குறடுகளால், சாந்து அரைத்து இறைவனுக்குச் சாத்தி வழிபட்டு வந்தவராயினும், அவை கிடைக்கப் பெருமல் முட்டுப்பாடு நேர்ந்த வழி, தம்முடைய முழங் கையையே தேய்த்தார் அன்றே?

நன்சொலே கொண்டு போற்றல்
நன்மையாம்; அதுமுட் டுற்ருல்
புன்சொலாய் வந்த கொண்டு
போற்றலும் கடன்மை யாகும்;
கொன்சொலார் நறிய சந்தக்
குறடுமுட் டுற்ற தாலே
முன்சொல்வார் மூர்த்தி யார்தம்
முழங்கைதேய்த் திட்டார் அன்றே

**மன்ற மராட்டவன் :**

(4) விராட் (உலகமே உருவமாகக் கொண்டவன்), சாம்ராட் (பெருந்தலைவன்) என்னும் பெயர்களோடு, சுராட் (தனி முதற் பெருந்தலைவன்) என்னும் சிறப்புப் பெயரையும் கொண்ட 'மன்ற மராட்டவன்' (மன்று அமர் ஆட்டவன்—அம்பலத்தில் நடனம் புரிபவன்) ஆகிய சிவபெருமான், விரும்பத் தக்க சந்திர னோடுவிரும்பத்தகாத பாம்பினையும் கூடச் சடை யில் அணிந்து கொண்டிருக்கிருன். அஃது எதற் குத் தெரியுமா? 'ஒன்ருேடு இராட்டையில்' (ஒன் ருேடு இரு ஆட்டையின்; அஃதாவது ஒன்ருேடு இரண்டு சேர்ந்த மூன்ரும் ஆண்டில்) எழுந்த, திருஞானசம்பந்தரின் சிறந்த பாடல்களோடு, என்னுடைய இழிந்த பாடல்களையும் விருப்பு வெறுப்பு இல்லாமல், உயர்வு தாழ்வு நோக்கா மல், ஏற்றுக்கொண்டு அருள் புரிதலை யுணர்த்து வதற்கேயாகும்.

''விராட்டொடு சாம்ராட் என்னும்
நாமத்தும் விசேட மாகச்
சுராட்டெனும் நாமம் பூண்ட
சுயம்பிர காசன், மன்ற
மராட்டவன் மதியொ டும்பாம்பு
அணிந்தமை மதிக்கின், ஒன்ருேடு
இராட்டையின் எழும்முற் பாவோடு
என்னதும் ஏற்றற்கு அன்ருே?

**எறும்பும் ஈயும் :**

(5) சிறந்த பெரிய கவிஞர்களைப் போல ஒன்றுக்கும் பற்ருத எளியவன் ஆகிய யானும், திரு அம்பர்ப் பிரமபுரீசர் மீது புராணம் பாடத் தலைப்பட்ட தன்மையினை ஆராய்ந்தால், திரு மாலைப் போல யானும் உலகம் முழுவதையும் உண்பேன் என்று ஒரு சிற்றெறும்பு எழுந்ததனை யும்; மலர்களிலுள்ள சிறிய தேனைத் தேடி யுண்ணும் தேனீயானது, அகத்திய முனிவரைப் போலக் கடல் முழுவதையும் யான் பருகுவேன் என்று கூறிப் புறப்படுதலையுமே போலும்.

பெரியர்போல் யானும் பெம்மான்
பேரருட் புராணம் கூறல்
தெரிதரின், மாயோன் போல்சிற்
றெறும்புமண் முழுதும் உண்பான்
புரிவொடும் எழுஞ்சற் ருய
போதில்தேன் உண்ணல் நீத்துப்
பரிவின்ஈ முனிபோல் ஆழி
யுண்ணவும் படரும் அன்றே

**உயர்திணையும் அஃறிணையும் :**

(6) தனித் தனியே கருதிய வழி அஃறிணை யாகக் குறிப்பிடப் பெறும் உயிரும் உடலும் தம்முள் ஒன்று சேர்ந்து அறிவு நலனும் எய்தப் பெற்ருல், அஃறிணை என்னும் குறைபாடு ஒழிந்து, உயர்திணை என்னும் சிறப்புப் பெறும்.

''காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் தீனன வருஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வருஉம் கிளவி எல்லாம்
பால்பிரிந்து இசையா உயர்திணை மேன''

''உயர்திணை என்மனர் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனர் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே''

எனவரும் தொல்காப்பியச் சூத்திரங்கள் இதனை உணர்த்தும். இங்ஙனம் அஃறிணை எனப்படும் உயிரும் உடலும் அறிவுடன் ஒன்று கூடுதலால் உயர் திணையாகிச் சிறப்புறுதல் போன்று, இழிதகவு மிக்க என்னுடைய சொற்பொருள் களும்கூட, இறைவனின் சரிதத்தோடு முழுவ தும் சேர்தலினல் சிறப்பை அடையும் என்ப தற்கு ஐயம் உண்டோ?

இழிதிணை உயிரும் மெய்யும்
இலங்கு அறிவொடும் இயைந்தே
இழிபு உயர்பு உற்ருற்போல்,
இறைவன் சரிதத் தோடும்
அழிதக வுடையேன் சொல்லும்
பொருளும் முற்றுற இயைந்தே
இழிபு ஒழித்து உயர்வு பூணும்
என்பதற்கு ஐயம் என்னே?

இங்ஙனம், தம்முடைய பணிவுடைமைதோன்றப் பாடுவதற்குரிய, எளிய பொதுவான அவையடக் கச் செய்தியினைக்கூட, தமது ஒப்புயர்வற்ற புலமைநலனும், அற்புதம் மிக்க கற்பனைத் திறனும், இலக்கண இலக்கிய நுண்ணுணர்வும், பத்திமைப் பண்பாடும் தோன்றப் பாடியுள்ள திருவாவடுதுறை ஆதீனத்துப் பெருங்கவிஞர் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின், அருமை பெருமைகள் அறிந்து வியந்து பெரிதும் போற்றி மகிழ்தற்குரியன அன்ருே?

**எளிமையன்று கடினம் :**

கட்டுரையோ கவிதைகளோ எழுதுவது என்பது எளிதான காரியம் அன்று! மிகவும் கடினமான—இடர்ப்பாடான செயல்களுள் ஒன்று அது! பிற பருப்பொருள்களை நாம் கருவிகள் கொண்டு செய்து உருவாக்குதல்

போல, நாம் நம் முயற்சியினால் கருத்துக்களை உருவாக்குதல் இயலாது. அவைகள் தாமாகவே நம் உள்ளத்தில் உதித்து உருப்பெறுதல் வேண்டும்! மேலை நாட்டு அறிஞர்கள் பலர், தத்தம் நூல்களில், தாம் கட்டுரையோ கவிதையோ எழுதத் தலைப்பட்டு அடைந்த பல இன்னல்களையும் அனுபவங்களையும், தாம் அடைந்தவாறே பிற்கால மக்களுக்குப் பயன்படும் பொருட்டுக் கிளந்து கூறி விளக்கி மொழிந்திருக்கின்றனர்.

(1) "வாசகர்கள், தாம் அரை மணி நேரத்திலோ, அல்லது ஐந்து மணித்துளிகளிலோ படித்து முடித்துவிடும் ஒரு பகுதி, ஆசிரியரின் இருதயக் குருதியினின்று உருவாகி, அரிதின் வெளிவந்த திறனை உணர்வதில்லை. வாசகர்களுக்கு உண்மையெனப் பட்டு அவர்களின் உள்ளத்தைத் தொடும் ஓர் உணர்ச்சியை வெளிப்படுத்த, ஆசிரியர் அவ்வுணர்ச்சி வயப்பட்டுப் பல இரவுகளில் உருகி அழுது, அதன் மயமாக ஒன்றி யுறைந்திருப்பர்."

(2) ஏ. ஜி. கார்டினர் என்னும் புகழோங்கிய ஆங்கில எழுத்தாளர், தாம் எழுதிய "கடற்கரையிற் கூழாங்கற்கள்" என்னும் நூலின் கட்டுரை ஒன்றில், "எழுதுவது என்பது மட்டுமே கடினம் அன்று! அதற்குரிய பொருளையோ—தலைப்பையோ தேர்ந்தெடுப்பதும்கூட மிகவும் கடினமான ஒரு செயல்! ஏதேனும் எழுத விரும்பி முயலும் போதெல்லாம் அதற்குரிய பொருளோ கருத்தோ ஒன்றும் தோன்றாமையால், கைந்நகங்களைத் திருத்துவதும், எழுதுகோல்களைக் கூர்மையாக்குவதுமாகவே பெரும்பாலும் காலங் கழிகின்றது. இவற்றால் மேலும் மேலும் திகைப்பு உண்டாகின்றதேயன்றிக்கருத் தொன்றும் உதித்திலது" எனக் குறிப்பிடுகின்றார்.

(3) கஸ்டாவ் ஃபிளாபர்ட் என்னும் பிரசித்திபெற்ற பிரெஞ்சு நூலாசிரியர், "ஏதேனும் ஒரு சிறு சொல் தடைப்பட்டுவிட்டால், அதனைக் கண்டுபிடித்தற்காகக் கைகளில் தலையை வைத்துக் கொண்டு, வறண்டுபோன நற்பேறற்ற மூளையினின்று அச்சொல்லை வலிந்து கசக்கிப் பிசைந்து முயன்று வருவித்தற் பொருட்டு, ஒரு நாள் முழுவதும் உட்கார்ந்திருக்க நேரும் துன்பம் எத்தகையதென்று நீ அறிய மாட்டாய்! கலைத் துறையிற் கடினமான உழைப்பு இன்றியமையாததாக இருக்கின்றது. ஆ! உண்மையிலேயே எழுதுதலால் நேரும் வேதனைகளை யான் நன்குணர்ந்திருக்கின்றேன்" எனத் தம் நெருங்கிய நண்பர் ஆகிய ஜார்ஜ் சேண்ட் என்பவருக்குத் தெரிவிக்கின்றார்.

(4) இவரே மற்றொரு சமயம், தமது பிறிதொரு நண்பரும் பெருங் கவிஞரும் ஆகிய லூயி பூயிலெட் என்பவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், "நான் தன்னந்தனியாக ஒரு துறவி போலவும், இறைவனைப் போல அமைதியாகவும், நல்லதொரு வார காலத்தைக் கழித்தேன். இலக்கிய உன்மத்தம் என்னைப் பற்றிக் கொண்டு விட்டமையால், என்னை யானே இழந்து கைதுறந்து போனேன். நடுப்பகலில் அமர்ந்தேன். காலை நான்கு மணிக்குப் படுக்கச் சென்றேன். டாக்னோவுடன் உணவு உண்டேன். 15 முறை புகை பிடித்தேன். இதுவரையில் 8 பக்கங்கள் மட்டுமே எழுதியிருக்கிறேன்" எனக் கூறுகின்றார்.

(5) ஏ. இ. அவுஸ்மன் என்னும் ஆங்கிலக் கவிஞர், பின்வருமாறு தம்முடைய அனுபவம் ஒன்றை, எழுதுகின்றார். "யான் ஒரு சமயம் ஒரு கவிதை எழுத நினைத்துத் தொடங்கினேன். முதல் இரண்டு செய்யுட்களை (Stanzas) ஒருவாறு எழுதி முடித்தேன். மூன்றாவது செய்யுள் ஒன்றை எழுத முயன்றேன். அஃது எளிதில் வருவதாக இல்லை. சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு, தேநீர் அருந்திய பின்னர் மிகவும் இடர்ப்பட்டு அம்மூன்றாம் செய்யுளை எழுதி முடித்தேன். கவிதை முடிவதற்கு நான்காவதாக ஒரு செய்யுளும் தேவைப்பட்டது. அதனை எழுத எவ்வளவோ முயன்று பார்த்தேன். அஃது அறவே வர மறுத்துவிட்டது. எங்ஙனமேனும் எழுதியே தீர வேண்டியிருந்தமையால், அது மிகவும் தொல்லையான வேலையாகவே இருந்தது. அதனை யான் 13 முறைகள் திருத்தித் திருத்தித் திரும்பத் திரும்ப எழுதிப் பார்த்தேன். அப்போதும் அது செவ்விதாக அமையவே இல்லை. பின்னர்ப் பன்னிரண்டு மாதங்கள் வரை காத்திருந்து மிகவும் முயன்றே அதனை முடிக்க வேண்டி நேர்ந்தது. அதற்குப் பின்னர்தான் அஃது ஓரளவு திருத்தமாக அமைவதாயிற்று".

---

(1) "Readers do not know that the passage which they read in half-an-hour, or in five minutes, has been evolved out of the heart's blood of the author. The emotion which strikes them as 'so true' he has lived through with nights of bitter tears."

—*Somerset Mangham*, A Writer's Note-book.

(2) "Now if you are accustomed to writing articles for a living, you will know that sometimes the difficulty is not writing the article, but choosing a subject...... I had pared my nails several times with absent-minded industry, and sharpened every pencil I had on me with elaborate care. But the more I sharpened my pencils, the more perlexed I grew as to the theme for an article."

—*A. G. Gardiner*.
On Writing An Article in 'Pebbles on the Shore.'

(3) "You don't know what it is to stay a whole day with your head in your hands trying to squeezeyour unfortunate brain so as to find a word. Ah! I certainly know the agonies of writing."

—*Gustave Flaubert* to Louis Bouhilet.

(4) "I have spent a good week, alone like a hermit, as calm as a god. I got up at midday, abandoned myself to a frenzy of literature. I went to bed at four in the morning. I dined with Dakno. I smoked fifteen pipes in a day. I have written only eight pages."

—*Gustave Flaubert* to Louis Bouhilet.

(5) "......A third stanza came with a little coaxing after tea. One more was needed, but it did not come. I had to turn to and compose it myself and that was a laborious business. I wrote it *thirteen* times, and it was more than *twelve* months before I got it right."

—A. E. Housman

(6) இவ்வாறே மிகவும் புகழ்பெற்றவரும், உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவராக மதிக்கப் பெறுபவரும் ஆகிய வில்லியம் வோர்ட்ஸ்வொர்த் என்பவர் (1770—1850) ''குயிலுக்கு'' (To the Cuckoo) என்னும் தலைப்பில் தாம் எழுத முற்பட்ட கவிதையில், அக் குயிலின் குரல் பற்றிக் கொடுக்கத் தக்க பொருத்தமான அடைமொழி (Epithet) ஒன்றனைக் காணமட்டாமல், எத்தனையோ சொற்களை மாற்றிமாற்றித் திருத்தி அமைத்துப் பார்த்தும், அவைகளுள் ஒன்றேனும் செவ்விய தாக அமையாமையால், மன நிறைவு கொள்ளாதவராய்ப் பல ஆண்டுகள் வருந்தி முயன்று வந்தனர். கடைசியாக 43 ஆண்டுகள் கழித்துத் திடீரென ஒரு நாள் 'அலைந்து திரியும் குரல்' (Wandering Voice) என்னும் அடைமொழித் தொடர், அவர் உள்ளத்தில் உதித்தது. அதனையே அக்கவிதையில் அவர் பின்னர்த் திருத்தி அமைத்துப் பதிப்பித்தார் என, அவர் தம் சகோதரியார் ஆகிய டொரத்தி வோர்ட்ஸ் வொர்த் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கலைப்படைப்பும் இடர்ப்பாடும் :

இன்னோரனைய மேலை நாட்டுப் பேரறிஞர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் அனுபவங்களையும் பற்றி, நாம் இனிதறிந்து உணர்ந்துகொண்டு கருதுவோமாயின், மகா வித்துவான் பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் அரும்பெறல் மாட்சிமைகளையெல்லாம், நாம் செவ்விதில் தெளிந்து உணர்ந்து கொண்டு, மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்து வியந்து நிற்போம் என்பது திண்ணம்.

நம்முடைய கவிஞர் பெருமான் அவர்கள் பாடிய நூல்கள் பற்பல. அவைகள் பல வகைப் பட்டவைகளாகவும், பல அமைப்புடையனவாகவும் விளங்குகின்றன.

| | | |
|---|---|---|
| உலா | ... ... | 1 |
| தூது | ... ... | 1 |
| யமக அந்தாதி | ... ... | 3 |
| கலம்பகங்கள் | ... ... | 2 |
| பதிகங்கள் | ... ... | 3 |
| கோவைகள் | ... ... | 3 |
| மாலைகள் | ... ... | 6 |
| பிள்ளைத் தமிழ்கள் | ... | 9 |
| தல புராணங்கள்... | ... | 16 |

ஆகிய பற்பல நூல்களை நம் கவிஞர் பெருந்தகை அவர்கள் இயற்றியிருக்கின்றார்கள். இவைகளில் அடங்காமல் விடுபட்டுப் போன மற்றும் எத்துணையோ பலப்பல பாடல்களும், சிறு சிறு நூல்களும் வேறே இருக்கின்றன.

### முடிவுரை :

கலைப் படைப்பு என்பது, உழைப்பு மிகுதியும், களைப்படைவும், இடர்ப்பாடும் இன்றி யாண்டும் நிகழ்தல் இல்லை. இத்துணை நூல்களையும் இயற்றியக்கால், அவர்கள் எத்துணை இடர்ப்பாடும் துன்பங்களும் அடைந்திருப்பார்கள்? எவ்வளவு முயற்சியும் உழைப்பும் மேற்கொண்டிருப்பார்கள்? என்று கருதி யுணர்ந்தால், அவர்களின் கடலனைய பெருமையை நாம் ஒரு சிறிதேனும் உணரப் பெறலாம்! இனைய பல இணையற்ற மாட்சிமை மிக்க பெருங் கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் அருமை பெருமைகளை உணர்ந்து, நாம் நமது தமிழகத் திருக்கோயில்களிலெல்லாம், அப் பெருந்தகையாரின் நினைவு நாள் விழாவினை ஆண்டுதோறும் மிகவும் சிறப்புறக் கொண்டாடி, அவர்தம் அரிய இனிய கவிதை நூல்களைப் பயின்று போற்றிப் பாராட்டி, நலம் பெற முற்படுவோமாக!

* *

(6) "Dorothy Wordsworth records in her 'Journal,' that her brother William had tried to seek an epithet for the Cuckoo, and only after *forty-three years* found himself able to express the sound of the Cuckoo's as the 'Wandering Voice'."

—*John Livingston Lowes*, Convention & Revolt in Poetry, p.6.

## செய்திச் சுருக்கம்

நாகர்கோவில், கோட்டாறு, 57 பசனைமடம் குறுந்தெருவில் வசித்துவரும் அன்பர் ''சைவப் புலவர்'' திரு. சு. திருமலையப்பன் அவர்களின் ஐந்து வயதுக் குழந்தை, **மங்கையர்க்கரசி**, பெரிய புராணத்தில் இருந்து, திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், அப்பூதியடிகள், இளையான் குடிமாறர், காரைக்கால் அம்மையார் வரலாறுகளைத் தனது மழலை மொழியில், ஆங்காங்கே சொற்பொழிவுகள் செய்து வருகின்றது.

அண்மையில், திருவாவடுதுறை ஆதீனத்தில் நடைபெற்ற ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் '**குருபூசை விழா**'வில், இக்குழந்தை தன் அழகிய இனிய மழலைமொழியில் ''பெரிய புராணக் கதாகாலட்சேபம்'' செய்து, அன்பர்களை வியப்பிலும், மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது. திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள், இக்குழந்தையைப் பெரிதும் கருணைகூர்ந்து, ஆசீர்வதித்தருளினார்கள்.

—**ஆசிரியர்.**

# நம்மாழ்வாரும், திருவாய் மொழியும்

**முன்னுரை :**

ஆழ்வார்கள் அனைவருமே சிறப்புடைய வர்களாயினும், அவர்களுள்ளும் மிகவும் சிறப்பு உடையவராகப் பெரிதும் போற்றப் பெறுபவர் நம்மாழ்வார். நம்மாழ்வாருடைய காலத்தி லேயே, அவருடைய மாணவராக இருந்த மதுர கவிகள் என்பவர், நம்மாழ்வாரையும் அவ ருடைய நூல்களையும் சிறப்பித்துக் ''கண்ணி நுண் சிறுத்தாம்பு'' என்னும் பத்துப் பாசு ரங்கள் அடங்கிய ஒரு நூல் அருளிச் செய்தார். வைணவப் பெருமக்கள் பிரபந்நஜன கூடஸ்தர் என நம்மாழ்வாரைப் பெரிதும் போற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுவர். 'பிரபத்திநெறியைப் பின்பற்றும் வைஷ்ணவப் பெருமக்கள் எல்லோ ருக்கும் தலைவர்' என்பது அதன் பொருள். நம்பெருமாள்-நம்மாழ்வார்-நம்சீயர்-நம்பிள்ளை என்பர் அவரவர்தம் ஏற்றத்தால்'' எனவரும் உபதேச ரத்தின மாலைச் செய்யுளும் நம்மாழ்வாரின் மாட்சிமையினை விளக்கி நன்குணர்த்தும்.

**நம்மாழ்வார் :**

பாண்டிய நாட்டில், திருநெல்வேலி மாவட் டத்தில், தாமிரபரணி நதிக் கரையில், ஆழ் வார் திருநகரி என வழங்கும் திருக்குருகூர் என்னும் தலத்தில், வேளாளர் குலத்தில் காரி யார் என்ற ஒரு வைணவப் பெருஞ் செல்வருக் கும், திருவண் பரிசாரம் என்னும் ஊரில் வாழ்ந்த திருவாழ்மார்பர் என்பவரின் மகளா கிய உடையநங்கையார் என்னும் அம்மையா ருக்கும், திருக்குறுங்குடி என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமாள் திருவருளால் மைந்தராக நம்மாழ்வார் திருவவதாரம் செய்தருளினர்.

**பிரபந்தங்கள் :**

பெற்றோர்கள் இவருக்கு மாறன் எனப் பெயர் இட்டுத் திருககுறுங்குடிப் பெருமாள் முன்னிலையில், எடுத்துக் கொண்டு சென்று, விட்டனர். குழந்தையாகிய நம்மாழ்வார் அங்கே இருந்த ஒரு புளிய மரத்தடியிற் சென்று அமர்ந்தார். 16 ஆண்டுகள் வரையிற் கண் விழித்துப் பார்த்தல், பேசுதல் முதலியன ஒன்றுமின்றி, இறைவனையே தியானித்துக் கொண்டு இருந்தார். சடகோபன் என்னும் மற்றொரு சிறப்புப் பெயர் அமையும்படி, இங் ஙனம் உலகியலுணர்வு சிறிதுமின்றி இறை யுணர்விலேயே முழுவதும் தலைப்பட்டு அழுந்தி நின்று, தியானத்திலேயே பெரிதும் ஈடுபட்டு நின்றதனால், எல்லையற்ற பெருமகிழ்ச்சியும் பேரா னந்தமும் அவர்க்கு மேலிட்டு ஓங்கின. அதனால் அவர் அழகிய இனிய அருளியற் கவிதைகளைப் பாடலாயினர். அவ்வருளியற் கவிதைகளே திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திரு வந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு பிரபந்தங்களாக வழங்கி வருகின்றன.

**பொருளியல்புகள் :**

இந்நான்கு பிரபந்தங்களுள்ளே திருவிருத் தத்தில், நம்மாழ்வார், எம்பெருமானை அநு பவிப்பதற்குத் தடையாக உள்ள உலகியல் தொடர்பினை அறுத்தொழித் தருள வேண்டு கின்றார். திருவாசிரியத்தில், எம்பெருமான் தன் வடிவழகினைக் காட்டியருள, அதனை முழுவ தாக அநுபவித்து இன்புறுகின்றார். திருவந் தாதியில், எம்பெருமானை அநுபவித்தலால் அதற்குத் தக்க வேட்கை பிறந்து, அவ்வேட் கைக்குத் தக்கபடி அதனைப் புகழ்ந்தும் நினைத்தும் மகிழ்கின்றார். திருவாய்மொழியில், எம்பெரு மான் தானே தன் அனந்த கல்யாண குணகண வைபவங்களுடன், தன்னை நிர்ஹேதுக கிரு பையினால் காட்டியருளக் கண்டு அநுபவித்து, தம்முடைய உலக வாழ்க்கைத் தொடர்பு ஆகிய தடை நீங்கி, எம்பெருமானைப் பெற்றுத் தலைக்கூடி இன்புற்று இயைந்து முடிக்கின்றார்.

**வேறொருவகை விளக்கம்:**

இனிய இப்பிரபந்தங்களின் நிலையினை, வேறொரு வகையாகவும் உரையாசிரியர்கள் விளக்கியருளி யிருக்கின்றனர்.

*(1)* இராமபிரானுக்கு அடிமைத் தொண்டு செய்ய விரும்பும் பரதாழ்வான் கைகேயி தன்னை 'ராஜந்' என்று கூப்பிட்ட சொற்கேட்டுப் பட்டபாடுபோல இருக்கின்றது திருவிருத்தம்.

(2) இராமபிரான் சித்திரகூட மலை யிலே எழுந்தருளியிருக்கின்றார் எனக் கேள்வி யுற்ற பரதன், 'என் ஒருவனுடைய கண்ணீ ரையே கண்டு பொறுக்கமாட்டாதவர், இத் தனை பேரும் படும் அளவிறந்த ஆற்றாமையைக்

கண்டால், அயோத்திக்கு மீளாது ஒழிவரோ?' என்று எண்ணமிட்டுக் கொண்டு, அவரைக் கானகத்தினின்று அழைத்துக் கொண்டு வரச் செல்லுகின்ற காலத்துத் தரித்திருந்த நிலையைப் போல உள்ளது திருவாசிரியம்.

(3) இராமபிரான் கானகம் சென்றாலும் விரைவில் திரும்பி வந்து விடுவான் என்ற நம்பிக்கையுடன், நந்திக்கிராமத்தில் தங்கி இருந்து இராமனின் வரவினையே எதிர்நோக்கி நின்று பரதன் தன் பேராவலையும் பேரன்பினையும் வளர்த்துக் கொண்டு வாழ்ந்து வந்தாற்போல அமைந்தது, பெரிய திருவந்தாதி.

(4) இராமபிரான் மீண்டுபோந்து முடி சூடிக்கொள்ள, அதுபோது தன் இயல்புக்குத் தகுதியான பேற்றினைப் பெற்றுப் பரதாழ்வான் மகிழ்ந்து இன்புற்றிருந்தாற் போலத் திருவாய்மொழி சிறந்தினிது திகழ்கின்றது.

**திருவாய்மொழி:**

நம்மாழ்வார் அருளிச் செய்த இத்திருவாய்மொழியானது, அடியார்களுக்கு அமிர்தமாய்த் திகழ்வது. எல்லோரையும் இன்பமுறச் செய்வது. எல்லா உறுதிப் பொருள்களையும் கொடுக்கவல்லது. ஆயிரக்கணக்கான கிளைகளையுடைய உபநிடதங்களின் தொகுதிகளாக இருப்பது; தமிழ்வேதம் என்னும் பெருமை சான்றது. கடல்போன்று விரிந்து பரந்து, சிறந்த பொருள் நலங்களை யுடையது.

(1) ஸ்ரீமந் நாராயணனே அறப்பெரிய முதல்வன், (2) ஆத்மாவிற்குச் சொரூபம் அடியேன் என்பதே. (3) சரணாகதியே இறைவனைப் பெறுவதற்குரிய வழி, (4) பொய்ந்நின்ற ஞானமும், பொல்லா ஒழுக்கும், அழுக்குடம்பும் ஆகிய இவையே, விரோதிகள், (5) ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வதுவே பரம புருஷார்த்தம் என்னும் இவ்வைந்து பொருள்களுமே, திருவாய் மொழியிற் சிறப்புற எடுத்துச் சொல்லப்படுகின்றன.

*மிக்க இறைநிலையும், மெய்யாம் உயிர்நிலையும்*
*தக்க நெறியும், தடையாகித்—தொக்கியலும்*
*ஊழ்வினையும், வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்*
*யாழின் இசை வேதத்து இயல்.*

**திருவாய்மொழிச் சிறப்பு:**

திருவாய்மொழி, உறுதிப் பொருள்களைத் தெளிவுறக் கூறுகின்ற பிரபந்தங்களில் மிகவும் முதன்மை பெற்றது; பகவானுடைய குணங்களை அனுபவித்தலால் உண்டான பெருமகிழ்ச்சியின் விளைவாக வெளியிடப் பெற்றது; திருவருளால் விளைந்த ஞானத்தின் பயனாகத் தோன்றியது; வேதப் பொருள்களை அறிந்த பெரியோர் அனைவரும் அங்கீகரித்தது; திருமகள் கேள்வனே இப்பிரபந்தங்களுக்குத் தலைவன்; எம்பெருமானின் திருவடிகளுக்குத் தொண்டு செய்ய விழைந்திருப்போர் எவரும் கற்கத் தகுவது இது; முமுட்சுக்களும் முத்தரும் நித்தியரும் எம்பெருமானும் இவற்றின் சுவையை அநுபவிக்கின்றவர்கள்; பகவானுக்குச் செய்யப்படும் கைங்கரியம் ஆகிய நிரதிசய புருஷார்த்தம் இத்தகையதாக இருக்கும் என்பதனைத் திருவாய்மொழியினால் யாவரும் தெளிய உணரலாம்.

மேலும், திருவாய்மொழி யானது வேதப் பொருள்களை யெல்லாம் தமிழ் மொழியினால் எளிது இனிது அருளிச் செய்வது; தெளியாத மறைநிலங்களையெல்லாம் தெளிய விளக்கி நலஞ் செய்வது; எம்பெருமான் தானே பல பிறவிகள் எதிர்சூழல்புக்குத் தொடர்ந்து பற்றுதற்குரிய நற்பேறு மிக்கவரும், எப்பொழுதும் பகவானின் திருவருளுக்குக் கொள்கலமாக விளங்குபவரும், தத்துவ இதங்களில்வல்லவராய், அவற்றினுடைய உபதேசத்தில் மூண்டவருமாய்த் திகழ்ந்த நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தது; பெரியோர்கள் மிக்குள்ள நாடுகள் எங்கும் வழங்குவது; பிறதேசங்களிலே பிறந்து சிறப்பு வாய்ந்தவராக உள்ள பெரியோரும் இவற்றின் வேறொன்றற்கில்லாத சிறப்பைக் கேட்டு, 'இதனைக் கற்கைக்குத் தகுதியாக இம்மொழி வழங்கும் நாட்டிலே பிறக்கும் பேறு பெற்றிலோமே!' என வியந்து புகழ்வது; எம்பெருமானின் பெருமைகளைக் கூறி, அவரை உள்ளங்கை நெல்லிக்கனியைப் போன்று நாம் அறிந்து கொள்ளும்படி செய்வது; பக்தியைத் தோற்றுவிப்பதுடன், தோன்றிய பக்தியினை மேன்மேலும் வளர்த்துப் பெருகுவிப்பது; கற்றல் கேட்டல் செய்யும் பொழுதே எல்லையற்ற பெருவியப்பை யுண்டாக்குவது. இவ்வாற்றால் திருவாய்மொழியின் அருமை பெருமைகளை யாவரும் இனிதுணரலாம்.

—ஆசிரியர்.

# மதிப்புரை

**(1) சைவப்புண்ணியக் கண்கள்:**—இந்நூல், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் என்னும் சைவசமய ஆசிரியர்கள் இருவரின், அருமைபெருமைகளை விளக்குவது. சைவத் திருமுறைகள் தோன்றிய காலம், அக்காலத்தில் விளங்கியிருந்த பல்வேறு அரசர்கள், முதலிய பல வரலாற்றுக் குறிப்புக்களும், இந்நூலில் ஆராய்ந்து தொகுக்கப் பெற்றுள்ளன. திரு கோ. மு. முத்துசாமி பிள்ளை, I.A.S. அவர்களால் எழுதப்பெற்ற இந்நூல், சென்னைச் சைவசித்தாந்த மகாசமாசத்தின் 70-ஆம் ஆண்டு நிறைவு விழாவில், வெளியிடப்பெற்றது! பயன்மிக்க நல்ல ஆராய்ச்சி நூல்! கிடைக்குமிடம். ''சைவசித்தாந்த மகாசமாசம், 12, கிழக்குமாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4'' —விலை ரூ. 3.50.

# திருமந்திரமும் சிவஞான சித்தியாரும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

### முன்னுரை

அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியின்கண் உள்ள, தலைசிறந்த நூல்களின் வரிசையில், முன்னணியில் வைத்துப் போற்றத்தக்க முதன்மை மிக்க நூல்களுள், திருமூலர் அருளிய திருமந்திரமும், அருள்நந்தி சிவாசாரியர் அருளிய சிவஞான சித்தியாரும், தனிப்பெருஞ் சிறப்புடையனவாகும். சைவ சித்தாந்த தத்துவச் செம்பொருள் நலங்களைச் சிறந்த முறையில், செவ்விதின் உணர்த்தும் நிலையில், திருமந்திரமும், சிவஞான சித்தியாரும் தமக்கு நிகரற்று விளங்குகின்றன.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்ருகத் திருமந்திரம் திகழ்கின்றது. சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கனுள் ஒன்ருகச் சிவஞான சித்தியார் மிளிர்கின்றது. ''சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேன்'' என்று, திருமூலர் சிவாகமங்களின் பொருளையே தமது திருமந்திர நூலில் விளக்குவதாகக் கூறுகின்ருர். இங்ஙனமே அருள்நந்தி சிவாசாரியரும், ''சிவாகமங்கள் சித்தாந்தமாகும்'' (8—15) என்று, சிவாகமங்களின் பொருளையே, தாமும் தமது சிவஞான சித்தியாரில் விளக்குவதாகக் குறிப்பிட்டிருக்கின்ருர். இவ்விரு நூல்களுமே, தமக்கெனச் சிறந்த ஒரு தனி நடையினையுடையனவாய் அமைந்திருத்தல், பெரிதும் வியந்து போற்றத்தக்கதாக உள்ளது.

### திருமந்திரம்

இம்மை மறுமைக்குரிய மறைபொருள் நுட்பங்கள் அனைத்தையும் ஒருங்கெடுத்துத் திரட்டித் தெளித்துரைப்பதில், திருமந்திரம் ஒப்புயர்வற்று இலங்குகின்றது. ஓதற்கு எளியதாய், உணர்தற்கு, அரியதாய் உள்ள திருமந்திர நூல், மறைமுடிவான மந்திரங்களையும், அவற்றை உருவேற்றிக் கணிக்கும் முறைகளையும், அவற்றை அமைக்கும் சக்கரங்களையும், அம்மந்திரங்களுக்கும் இயந்திரங்களுக்கும் உரிய மாபெரும் தெய்வங்களையும், அத்தெய்வங்களெல்லாம் முழுமுதற் கடவுளான சிவபரம் பொருளின் ஆணை வழி நின்று, தம்மை வழிபடுவார்க்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும் வகைகளையும், தவ ஒழுக்கத்தின் பாகுபாடுகளையும், அவற்றை மேற்கொண்டு கடைப்பிடித்து ஒழுகும் வழி வகைகளையும், அழிவிலாப் பேரின்பப் பேரும் இறையருள் இன்ப அனுபவ நலனையும் எல்லாம், ஒருங்கு தொகுத்து விளக்குகின்றது.

### சிவஞான சித்தியார்

இவ்வாறே, சிவஞான சித்தியார் என்னும் செந்தமிழ்த் தத்துவ ஞானநூலும், ''இறைவனையும், இறைவனுல் இயம்பும் நூலும், ஈண்டு அளவும் பொருளியல்பும், வேண்டும் செய்தி முறைமைகளும், பெத்தமொடு முத்தியெல்லாம், மார்க்கத் துறை பலவும் கடாவிடையால் சொல்லிப் போக்கித், தர்க்கமொடு உத்தரங்களினல் சமயம் சாதித்து, துகள் தீர'' விளக்குகின்றது. 'சிவத்துக்குமேல் இல்லை தெய்வம், சிவஞான சித்திக்குமேல் இல்லை நூல்' என்பது பழமொழி.

தமிழில் இலக்கணத் துறையில் தொல்காப்பியமும், நீதி நூல் துறையில் திருக்குறளும், காப்பியத் துறையில் சிலப்பதிகாரமும், பக்தித் துறையில் திருவாசகமும், வரலாற்றுத் துறையில் பெரியபுராணமும், கவிதைத் துறையில் கம்பராமாயணமும் போல, யோக ஞான அனுபவத் துறையில் திருமந்திரமும், தத்துவஞானத் துறையில் சிவஞான சித்தியாரும், ஒப்புயர்வற்றுத் தலைசிறந்து திகழ்கின்றன எனச் சுருங்கக் கூறுதல் பொருந்தும். இத்தகைய சிறப்புமிக்க இவ்விரு பெரு நூல்களையும், பல வகைகளில் நாம் ஆராய்ந்து பயன்கொள்ளுதல் வேண்டும். அந்நெறியில் இங்குச் சிவஞான சித்தியார், திருமந்திர நூலினை அடியொற்றி, ஆங்காங்கே பெரிதும் தழுவி அமைந்திருக்கும் தன்மையினை, இயன்ற அளவு ஒரு சிறிது சுருக்கமாகக் காண்போம்.

### (1) நூற்ருெடக்கம்

சிவஞான சித்தியார் இயற்றியருளிய அருள்நந்தி சிவாசாரியர், திருமூலர் அருளிய திருமந்திரத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தவர் எனத் தெரிகின்றது. திருமூலர் தமது திருமந்திர நூலைத் தொடங்குங்கால், ''முழுமுதல் வனுகிய இறைவன் ஒருவனே; அவன் அம்மை அப்பர் என இரண்டாக விளங்குவான் ; அவன் அவள் அது (குரு லிங்கம் சங்கமம்—அருவம் உருவம் அருவுருவம்). என்னும் மூன்று நிலைகளில் நிற்பான்; சீலம் நோன்பு செறிவு அறிவு (சரியை கிரியை யோகம் ஞானம்) என்னும் நான்கையும் உணர்ந்தான்; பொறிவாயில் ஐந்து அவித்தான்; பதம் எழுத்து மந்திரம் கலை தத்துவம் புவனம் என்னும் ஆறு அத்துவாக்களாகவும் விரிந்து பரந்துள்ளான் ; ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி என்னும் ஏழு அண்டங்களுக்கும் அப்பாற்

பட்டு நின்ருன்; நிலம் நீர் நெருப்பு காற்று விசும்பு நிலா பகலோன் புலனுயமைந்தன் என்னும் எண் வகையாய்ப் புணர்ந்து நின்ருன்'' என்று, எண் அலங்காரம் என்னும் அணி அமையத் தம் நூலைத் தொடங்குகின்ருர்.

ஒன்றவன் தானே; இரண்டவன் இன்னருள்;
நின்றனன் மூன்றினுள்; நான்குணர்ந்தான், ஐந்து
வென்றனன்; ஆறு விரிந்தனன்; ஏழ்உம்பர்ச்
சென்றனன்; தான்இருந் தான்உணர்ந்து எட்டே.
—திருமந்திரம் 1

இதனை அடியொற்றி ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியரும், தமது நூலையும் எண்ணலங்காரம் பொருந்தத் தொடங்குகின்ருர். ''ஒரு தந்தத்தையும், பிரணவம் போலும் இரண்டு செவிகளையும், இச்சை ஞானம் கிரியை என்னும் மும்மலங்களையும், தொங்குகின்ற (நால்) வாயினையும், ஐந்து திருக் கைகளையும் உடையவனை, ஆறு (கங்கை) அணிந்த சடையையுடைய சிவபெருமான் அளித்தருளிய, யானை முகத்தையுடைய விநாயகப் பெருமானின் திருவடிகள், தம்மை அன்புடன் வணங்கி இரவு பகல் தியானித்துத் தொழுபவர்களின் மனமயக்கத்தைப் போக்கும்; அயன் திருமால் முதலியோர் வாழ்வும் ஒரு பொருளன்று என வெறுப்ப, அவர்களுக்குச் சிவமாம் தன்மைப் பெரு வாழ்வைத் தரும்'' என்னும் கருத்தமையவும், எண் அலங்காரம் பொருந்தவும், பின்வருமாறு தமது நூலைத் தொடங்குகின்ருர்.

''ஒரு கோட்டன்; இருசெவியன்; மும்மதத்தன்;
நால்வாய், ஐங்கரத்தன்; ஆறு
தருகோட்டு அம்பிறை இதழித்தாழ் சடையான்
தரும்ஒரு வாரணத்தின் தாள்கள்''
—சி. சு. 1

## (2) நூற்பாயிரம்

சிவஞான சித்தியாரில் பாயிரம் அமைந்துள்ள தன்மையே, ஒரு தனிச் சிறப்புடன் விளங்குகின்றது. தாம் அந்த நூலை யாருக்காக இயற்றினுர் என்பதை ஆசிரியர்விளக்குகின்ருர். ''சிவ ஞான சித்தியார் என்னும் இந்த ஞான நூலை, அறிவு நலம் நிறைந்தவர்களுக்காக யான் இயற்றவில்லை. ஏனெனில், அவர்கள் அறிய வேண்டுவனவெல்லாம் அறிந்தவர்கள்; அவர்கள் புதியதாக அறிந்து கொள்ள வேண்டுவது ஏதும் இல்லை. அறிவு நலம் சிறிதும் இல்லாத மூடர்களுக்காகவும் இந்நூல்இயற்றப்படவில்லை. ஏனெனில், அவர்கள் எதனையும் தெரிந்து கொள்ளும் ஆற்றலோ ஆவலோ இல்லாதவர்கள். ஆதலின் இவ்விருவருக்கும் இடைப்பட்ட நிலையினராய், இறைவனின் அருட்பேறு எய்துதற்கு நெறி யாது? என்று அறிய விரும்புகிறவர்களுக்காகவே, இந்நூலை இயற்றுகின்றேன்.''

''போதம் மிகுத்தோர், தொகுத்த பேதைமைக்கே
பொருந்தினேர், இவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல
ஏதுநெறி எனுமவர்கட்கு அறிய......
தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி என்றே''
—சி. ப.

என்று அருள்நந்தி சிவாசாரியர் குறிப்பிட்டருளியிருக்கின்ருர். இவர் இங்ஙனம் குறிப்பிட்டருளியமைக்கு இனியதொரு முன்னேடி போல், பின்வரும் திருமந்திரப் பாடல் அமைந்திருத்தல் அறிந்து இன்புறுதற்குரியது.

''அறிவிக்க வேண்டாம் அறிவற் றயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவுற் றுயர்வோர்க்கும்
அறிவுற் றறியாமை எய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்மறி வார்அறி வோரே.''
—திருமந்திரம் 2327

## (3) நூல் வகைகள்

''இறைவனுல் அருளிச் செய்யப் பெற்றவை, வேதம் சிவாகமம் என்னும் இரண்டுமேயாம். ஏனையவெல்லாம் இவற்றின் வழி நூல், சார்பு நூல், பூர்வபக்க நூல்களேயாகும், வேதம் பொது நூல், சிவாகமங்கள் சிறப்பு நூல். வேதம் உலகவர் பொருட்டும், சிவாகமம் சத்திநிபாதர் பொருட்டும் அருளிச் செய்யப்பட்டன. வேதம் சூத்திரம் போன்றது, சிவாகமங்கள் விரிவுரை போல்வன. வேதத்தின் கரும காண்டப் பொருள்களை விளக்குவன பூர்வபக்க நூல்கள்; வேதத்துள் கூறப்படாமல் எஞ்சி நின்ற பொருள்களையும், வேதமுடிபாகிய உபநிடதங்களின் பொருள்களையும், இனிது விளக்குவன ஆதலின், சிவாகமங்கள் சித்தாந்தம் எனப்படும்''. இதனை,

''வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்;
வேறு உரைக்கும் நூல், இவற்றின் விரிந்த
நூல்கள்;
ஆதிநூல், அநாதி அமலன்தரும் நூல் இரண்டும்;
ஆரண நூல்பொது, சைவம்அருஞ்சிறப்புநூலாம்;
நீதியினுல் உலகர்க்கும், சத்திநிபாதர்க்கும்
நிகழ்த்தியது;
நீள்மறையின் ஒழிபொருள், வேதாந்தத்
தீதில் பொருள்கொண்டு உரைக்கும் நூல் சைவம்;
பிறநூல்
திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்''

என வரும் சிவஞான சித்தியார் (8—15) பாடல் தெரிவிக்கின்றது. இக் கருத்திற்கு அரண் செய்யும் வகையில், பின்வரும் திருமந்திரப் பாடல் அமைந்துள்ளது.

''வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்;
ஓதும் பொதுவும் சிறப்பும்என் றுள்ளன;
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதமது என்பர்; பெரியோர்க்கு அபேதமே.''
—திருமந்திரம் 2397.

## (4) மும்மலங்கள்

உயிர்களை ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்று மலங்கள் பற்றியுள்ளன. ஆணவ மலம் உயிர்களுக்கு அறியாமையை விளைவித்து நிற்கும். மாயாமலம் உயிர்களுக்குரிய தனு கரண புவன போகங்களைத் தோற்றுவிக்கும். கன்மமலம் உயிர்களின் இன்ப துன்ப நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக அமையும். உயிர்களை இம் மும்மலங்களும் பற்றி நிற்கும் தன்மை, நெல்லில் உமியும் தவிடும் முளையும் பொருந்தியிருப்பது போலும். நெல், மலங்களால் பிணிப்புண்ட உயிர் (பெத்தான்மா). ஆணவம், நெல்

வின் உள்ள உமிபோலும். உமி அரிசியின் வடிவம் தெரியாமல் அதனை முழுவதும் மறைக்கும்; அதுபோல ஆணவ மலம் உயிரறிவை முழுவதும் மறைத்து நிற்கும். மாயை தவிடு போலும். தவிடு அரிசியின் இயல்பைச் சிறிது விளக்கும்; அதுபோல மாயா மலம் உயிரின் அறிவைச் சிறிது விளங்கச் செய்யும். கன்மம், நெல்லினின்று தோன்றும் முளை போலும். முளை தோன்றுமிடத்து அரிசியின் தன்மை விளங்காத வாறு போல, கன்ம மலமாகிய நல்வினை தீவினைகள் செய்யப்படுங்கால், உயிர் அவற்றில் மயங்கிக் கிடத்தலால், அதன் இயல்பு விளங்காது நிற்கும். நெல்லினின்று உமியும் தவிடும் முளையும் நீங்கிய நிலையில் உள்ள அரிசி, முறையே ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களும் நீங்கித் தூய்மை அடைந்து வீடு பேறு எய்திய நல்லுயிர் (முத்தான்மா) போலும். இவ்வுண்மையினை,

''மும்மலம் நெல்லி னுக்கு முளையொடு தவிடு மிப் போல்
மம்மர்செய்து அணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று;
பொய்ம்மைசெய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணும்''.

எனவரும் சிவஞான சித்தியார் (2—86) செய்யுள், இனிது விளக்கிக் கூறுகின்றது. இக் கருத்திற்கு அடிப்படையும் சான்றுமாகப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளங்குகின்றது.

''ஆணவம் மாயையும் கன்மமும் ஆம்மலம்
காணும் முளைக்குத் தவிடுமி ஆன்மாவும்
தாணுவை ஒவ்வாமல் தண்டுலமாய் நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே''.
—திருமந்திரம் 2192

## (5) குருவருள் :

உயிர்களுக்குக் குருவின் அருள் இன்றியமையாதது. இருளை அருளாற் போக்குபவனே, குரு (கு—இருள்; ரு—அருள்) எனப்படுவான். குருவருள் இன்றித் திருவருள் இல்லை. இறைவன் அருளை நாம் நேரே பெற முடியாது. குருவின் மூலமாகத்தான், நாம் இறையருளைப் பெறமுடியும்; நம்மைப் பற்றியுள்ள மலங்களைப் போக்கிக் கொள்ள முடியும். மலம் பஞ்சு போன்றது; எரிக்கத் தக்கது. இறைவன் சூரியனைப் போன்றவன்; இறைவன் நமக்கு எட்டாத நிலையில் தொலைவில் உள்ளான். சூரியன் தானே நேராகப் பஞ்சை எரிக்க முடியாது. சூரியகாந்தக் கல்லின் வழியாகவே, சூரியன் பஞ்சை எரிக்க முடியும். எனவே சூரியகாந்தக் கல், குருவைப் போன்றது. சூரியகாந்தக் கல், சூரியனின் வெப்பத்தைத் தன்பால் ஏற்கத் தக்கது. அதுபோலக் குரு இறைவனின் அருளைத் தன்பால் தேக்கி நிற்பவன். சூரிய காந்தக் கல்லின் வாயிலாகவே, சூரியனின் வெப்பம் ஊடுருவி நின்று, பஞ்சை எரிக்கும். அதுபோலக் குருவின் வாயிலாகவே, இறைவனின் திருவருள், உயிர்களின் மும்மலங்களைப் போக்குதல் இயலும். குருவின் உதவியின்றி உயிர்களும் இறைவனருளைப் பெறமுடியாது. இறைவனும் குருவின் வாயிலாக அன்றி, உயிர்களுக்கு நேரே அருள் செய்தல் இயலாது. சூரியன், இறைவன்; சூரியனின் வெப்பம் அல்லது நெருப்பு திருவருள்; சூரியகாந்தக் கல், குரு; பஞ்சு எரிக்கத் தக்க மும்மலங்கள். இவ்வுண்மையினை,

''சூரியகாந் தக்கல்லின் இடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோல்,
ஆரியனும் ஆசான்வந் தருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்...'' —8.28

எனச் சிவஞான சித்தியார் கூறுகின்றது. இச் சித்தியார் செய்யுளுக்குப் பின்வரும் திருமந்திரப்பாடலே, மூலமும் முதலும் ஆகும் எனலாம்.

''சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே''.
—திருமந்திரம் 117.

## (6) கருட தியானம் :

கருட தியானத்தில் வல்லவர்கள், உலகிற் பாம்பு கடியுண்டவர்க்கு, அப்பாம்பின் விடத்தைப் போக்கி, நலம்புரிதல் காண்கின்றோம். ஆதி பௌதிக கருடன், ஆதி தைவிக கருடன். ஆத்தியான்மிக கருடன், எனக் கருடன் மூன்று வகைப்படும். இவற்றுள் உலகத்திற் காணப்படுவது ஆதிபௌதிக கருடன். அதற்கு அதி தெய்வமாய் மாந்திரிகனுல் தன் உள்ளத்தில், அது போலப் பாவனை செய்து தியானித்துக் கணிக்கப்படும் மந்திரம், ஆதிதைவிக கருடன். அம்மந்திரத்தின் இடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசக்தி, ஆத்தியான்மிக கருடன். மாந்திரிகன் தன் உள்ளத்தில் மந்திர ரூபமாகிய ஆதி தைவிக கருடனை, நாள்தோறும் பாவனை செய்து பழகி, அப்பயிற்சியின் ஆற்றலால், அம்மந்திர ரூபமே தானுக அநந்நிய பாவனை செய்து, தன் அறிவு அதன் வயமாகும்படி உறைத்து நிற்பான். அந் நிலையில் அவன் மந்திர வலிமை கொண்ட தனது கண் கொண்டு நோக்கினுல், பாம்பு கடியுண்டோருக்கு அப்பாம்பின் கடுவிடம் தணிந்து நீங்கும். அது போல ஞானசிரியன் 'சிவோயம்' எனத் தன்னுள்ளே பாவித்து, 'சிவத்துவமசி' (சிவம் நீ ஆகின்ருய்) என்று உபதேசிக்கும் சித்தாந்த மகா வாக்கியப் பொருளை நாடோறும்பயின்று, சிவோகம் (சிவம் நான்) எனப் பாவிப்பானுயின், அந்தப் பாவகத்தின் விளங்கும் முதல்வனுல், ஒருவன் தன் மலமாயாகன்மங்கள் நீங்கப் பெறுவன். இவ்வுயரிய உண்மையினைச் சிவஞான சித்தியார் (9—7) ''கருடதியானத்தால் விடம் ஒழியும்; அதுபோலச் சிவோகம் எனப் பாவிக்க, விண்டகலும் மலங்கள் எலாம்; விமலதையும் அடையும்'' என்று தெளிவுறுத்துகின்றது. இக் கருத்தும் திருமூலர் பெருமானுல், திருமந்திரத்தில் பின்வருமாறு அருளிச் செய்யப் பெற்றிருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

''கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவின் உருவம் குறித்தஅப் போதே
திரிமலம் தீர்ந்து சிவனவன் ஆமே''
—திருமந்திரம் 2659

## (7) இருவினையொப்பு :

இருவினையொப்பு என்பது, சஞ்சிதமாய் ஈட்டப்பட்டுக் கிடந்த நல்வினை, தீவினைகள் இரண்டும், பக்குவ முறையாற் பயனுக வரும் வழி, பரிவேள்விப் புண்ணியமும் பிரமக் கொலைப் பாவமும் தம்முள் ஒன்றுன் ஒன்று சுந்தோபசுந்த நியாயமாய் அடிபட்டு ஒத்துக் கெட்டொழிதல் என்று சிலரும் ; சஞ்சிதமாய்ச் சேர்ந்து கிடந்த புண்ணியங்களும் பாவங்களும் மிகுதி குறைவின்றிச் சரிநிகர் சமானமாய்த் தம்முள் ஒத்து நிற்றல் என்று சிலரும் கூறுவர். அவை பொருந்தா. ஒன்றில் விருப்பும் மற்றொன்றில் வெறுப்பும் இன்றிப் புண்ணியபாவம் இரண்டிலும், அவற்றின் பயன்களிலும் ஒப்ப உவர்ப்பு நிகழ்ந்து விடுபவனது அறிவின்கண், அவ்விருவினையும் ஒப்ப நிகழ்தலே இருவினையொப்பு எனப்படும். போற்றினும் தூற்றினும், செத்தினும் போழினும் செஞ்சாந்து பூசினும், நெஞ்சோர்ந்து ஓடா நிலைமையாகிய இவ்விருவினையொப்புநிலை நிகழ்ந்த வழி, மலம் தனது வலிமை தேய்வதற்குரிய துணைக் காரணங்கள் எல்லாவற்றேடும் கூடுதலே, மலபரிபாகம் ஆகும். மலபரிபாகமே, உயிர்கள்பால் இறைவனின் திருவருள் பதிதல் ஆகிய சத்திநிபாதம் நிகழ்வதற்குக் காரணம் ஆகும். அந்நிலையில் மலத்திற்குத் துணையாய் நின்று நடாத்தி வந்த திரோதான சத்தியாகிய மறைப்பாற்றல், பராசக்தியாகிய அருளாற்றலாக மாறி நலம் புரியும்.

''இருவினைச் செயல்கள் ஒப்பின், ஈசன்றன் சக்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி, முன்னைத்
திரிமலம் அறுத்துப், பண்டைச் சிற்றறி வொழிந்து, ஞானம்
பெருகி, நாயகன்றன் பாதம் பெறுவது சுத்தம் ஆமே''

எனவரும் சிவஞான சித்தியார் (4—40) செய்யுள் இக்கருத்துக்களைத் தெரிவிக்கின்றன. இவற்றைப் பின்வரும் திருமந்திரச் செய்யுள் சுட்டுதல் காணலாம்.

''இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தரும்எனும் ஞானத்தால் தன்செயல் அற்றுல்
திரிமலம் தீர்ந்து சிவனவ ஞமே''

—திருமந்திரம் 1527.

## (8) ஐவகை அவத்தைகள் :

உயிரானது உடலின்கண் பலவகைக் கருவிகளோடு கூடி நின்று, முறையே சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐவகை அவத்தைகளை அடைந்து வரும். இவற்றை முறையே நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் எனவும் வழங்குவர். இவை முறையே புருவநடு கழுத்து நெஞ்சு கொப்பூழ் மூலம் என்னும் இடங்களில், நிகழும். சாக்கிரத்தில், பொறிகள் 10, புலன்கள் 10, பிராணன் அபானன் முதலிய வளிகள் 10, அதன் கருவிகள் 4, புருட தத்துவம் 1, ஆக 35 கருவிகள் தொழிற்படும். கனவு நிலையில் இவற்றுள் பொறிகள் 10 நீங்கலாக, ஏனைய 25 கருவிகள் தொழிற்படும். உறக்க நிலையில் பிராணன் சித்தம் புருடன் என்னும் 3 கருவிகளும், பேருறக்கத்தில் பிராணன் புருடன் என்னும் 2 கருவிகளும், உயிர்ப்படக்கத்தில் புருடன் ஆகிய கருவி ஒன்று மட்டும் தொழிற்படும்.

''சாக்கிரம் முப்பத் தைந்து நுதலினில்; கனவு தன்னில்
ஆக்கிய இருபத் தைந்து களத்தினில்; சுழுனை மூன்று
நீக்கிய இதயம் தன்னில்; துரியத்தில் இரண்டு நாபி;
நோக்கிய துரியா தீதம் நுவலின் மூலத்தில் ஒன்றே''

எனவரும் சிவஞான சித்தியார் (4—35) செய்யுள், அரிய இந்த அனுபவச் செய்திகளைக் கூறுகின்றது. இச்செய்யுளுக்கு மூலமும் மேற்கோளுமாகப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளங்குதல் காணலாம்.

''ஐயைந்து பத்துடன் ஆனது சாக்கிரம்;
கைகண்ட ஐயைந்திற் கண்டம் கனஎன்பர்;
பொய்கண்ட மூவர் புருடன் சுழுனையில்;
மெய்கண் டவன்உந்தி மேவல் இருவரே.''

—திருமந்திரம் 2200.

## (9) சிவானுபவத் திறம் :

இறைவனுடைய திருவருள் அனுபவத்தைப் பக்குவ மில்லாதவர்கள் அறியவோ நுகரவோ இயலாது. பக்குவமுடையவராய்ச் சிறப்புமிக்க தக்கவர்களும்கூட, இறையருள் இன்ப அநுபவத்தை அறியவும் நுகரவும் இயலுமேயன்றி, அதனைப் பிறருக்கு எடுத்து உரைத்தல் இயலாது. ஆதல்பற்றியே அதனைப் ''பேசா அநுபூதி'' என்பர். மணிவாசகரும் ''சொல்லுவது அறியேன் வாழி'' என்றுர். இத்தகைய சொல்லிறந்த இன்பமாகிய சிவாநுபவத் திறத்தினைச் சிவஞான சித்தியார் ''கன்னிகைதான் காமரசம் காணுள்; மருவி இருவரும் புணர வந்த இன்பம் வாயினுற் பேசரிது; மணந்தவர்தாம்உணர்வர்'' (8—36) எனக் குறிப்பிடுகின்றது. இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில், பின்வரும் திருமந்திரப் பாடல் அமைந்திருத்தல் காணலாம்.

''முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணளனே டாடிய
சுகத்தைச் சொல்லென்றுற் சொல்லுமா றெங்ஙனே?

—திருமந்திரம்2944

## (10) சிவாயநம எனும் குளிகை :

உயிர் செம்பு போன்றது. உயிரைப் பற்றியுள்ள ஆணவ மலம், செம்பைப் பற்றி நிற்கும் களிம்பு போன்றது. மலத்தால் பிணிப்புண்ட உயிர், களிம்பு கலந்த செம்பு போல்வதாகும். செம்பில் களிம்பு நீங்கினுல், பொன்னுக மாறும். அப்போது அது, செம்பொன்னேடு சேர்தல்

இயலும். மலநீக்கம் எய்தி வீடுபேற்று இன்பம் எய்தி நிற்கும் முத்தர்கள், செம்பொன் போல்வர். சிவபெருமான் செம்பினின்று களிம்பை நீக்கும் இரத குளிகை போல்வன். இரத குளிகை செம்பொன் ஆகாது! செம்பொன் இரதகுளிகை ஆகாது! அதுபோல இறைவன் உயிர் ஆகான்; உயிர்கள் இறைவன் ஆகமாட்டா. செம்பு களிம்பு நீங்கிச் செம்பொன் ஆனாலும், தன்னைச் செம்பொன்னாக்கிய இரத குளிகைக்குச் சமமாகாது. அதுபோல மலப் பிணிப்புண்ட உயிர்களாகிய பெத்தான்மாக்கள், மலநீக்கம் பெற்றுத் தூய்மையுற்ற முத்தான்மாக்கள் ஆயினும், தம்மை மலநீக்கம் பெறச் செய்த முழுமுதற் பெரும்பொருளாகிய சிவபெருமானுக்கு ஒரு போதும் சமமாக மாட்டா. ஆதலின் மல நீக்கம் எய்தி முத்தி பெற்ற உயிர்கள், சிவபெருமானைப் போல ஐந்தொழில் இயற்றும் திறம் இன்றி, சிவபிரானின் திருவருள் இன்பத்தை அனுபவிப்பதற்கு மட்டுமே உரிமையுடையனவாகும்.

''செம்பு இரதகுளிகையினால்களிம்பு அற்றுப் பொன்னாய்ச்
செம்பொனுடன் சேரும்; மலம் சிதைந்தால் சீவன்
நம்பனுடன் கூடும் எனில், பொன்போல் அல்லன்;
நற்குளிகைபோல, அரன் நணுகும் மலம்போக்கி,
அம்பொன் அடிக்கீழ் வைப்பன்; அருங்களங்கம் அறுக்கும்
அக்குளிகை தானும் பொன் ஆகா தாகும்.
உம்பர்பிரான் உற்பத்தி ஆதிகளுக்கு உரியன்;
உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே.''

என்பது சிவஞான சித்தியார் (11—10) செய்யுள். இதன்கண் உயிர்களின் மலத்தைப் போக்கும் சிவபெருமானைச் செம்பின் களிம்பைப் போக்கும் இரத குளிகையாகக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். பின்வரும் திருமந்திரப் பாடல் சிவபெருமானுக்குரிய திருவைந்தெழுத்தை இரத குளிகையாகக் கூறியிருத்தல், ஒப்பு நோக்கி மகிழத் தக்கதாகும்.

''எளிய வாதுசெய் வார்எங்கள் ஈசனை
ஒளியை உன்னி உருகும் மனத்தராய்த்
தெளிய ஓதிச் சிவாய நமஎன்னும்
குளிகை யிட்டுப்பொன் ஆக்குவன் கூட்டையே
—திருமந்திரம் 2709.

## (11) மூவகை நிலைகள்

உயிர்கள், கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று நிலைகளைப் பொருந்தும். கேவலமாவது, இச்சை ஞானம் கிரியை என்னும் ஆற்றல்கள் சிறிதும் தொழிற்படாமல், உயிர்கள் ஆணவ மலத்துடன் கூடி மயங்கி நிற்கும் நிலை. சகலமாவது, ஆணவ மலத்தோடு கூடி நின்ற உயிர்கள், பின்பு இறைவனால் தனுகரண புவன போகங்கள் கூட்டப் பெற்று, இச்சை ஞானக் கிரியைகள் ஒரு சிறிது விளங்கி நிற்கும் நிலை. சுத்தமாவது, தனுகரண புவன போகங்களுடன் கூடி நின்ற உயிர்கள், ஆணவம் முதலிய மலங்கள் நீங்கிப் பிறவியொழிந்து, சிவத்துடன் கூடி, இச்சை ஞானக் கிரியைகள் எங்குமாய்ப் பரவி நிற்கும் நிலை. இம்மூன்றனையும் காரண அவத்தைகள் என்பர்.

இவற்றுள், காரண கேவல அவத்தை நிலையில் உயிர்கள் உடம்பின்றியும், கலை முதலிய தத்துவங்களோடு கூடி அறிதலின்றியும், முத்தியின் குணமாகிய தருமம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியம் அதர்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியம் ஆகிய எட்டுமின்றியும், இச்சை அறிவு செயல்கள் இல்லாமலும், தமக்கென ஓர் உரிமையில்லாமலும், போக நுகர்ச்சியில் விருப்பமில்லாமலும், உடலின் தோற்றக் கேடுகள் இல்லாமலும், ஓரிடத்திற்குரியவாகாமலும், ஆணவ மலத்துடன் விரவி வியாபித்து நிற்கும். இதன் இயல்பினை,

''அறிவிலன் அமூர்த்தன் நித்தன்,
அராகாதி குணங்களோடும்
செறிவிலன், கலாதி யோடும்
சேர்விலன், செயல்கள் இல்லான்,
குறியிலன், கருத்தா அல்லன்,
போகத்திற் கொள்கை யில்லான்,
பிறிவிலன், மலத்தி னோடும்
வியாபி, கேவலத்தில் ஆன்மா''

என்று சிவஞான சித்தியார் (4—58) விளக்குகின்றது. இங்ஙனம் கேவல நிலையில் உயிர்களுக்கு உரியனவாகிய இப்பத்து வகை இயல்புகளையும், சிவஞான சித்தியார் கூறுமாறு போலவே, பின்வரும் திருமந்திரப் பாடலும் குறிப்பிடுதல், ஒப்புநோக்கி மகிழ்தற்குரியது.

''அறிவின் றமூர்த்தன் அராகாதி சேரான்
குடியொன் றிலாநித்தன் கூடான் கலாதி
செறியும் செயல்இலான் தினங்கற்ற வல்லோன்
சிறியன் மலவியாபி கேவலம் தானே''
—திருமந்திரம் 2247

## (12) சிவஞானியர் கொடைப் பயன்

உயிர்கள் வீடுபேறு எய்துதற்குரிய நெறிகள் பலப்பல. அவைகள் சரியை கிரியை யோகம் ஞானம் என்பனவும், கன்ம வேள்வி தவவேள்வி செபவேள்வி தியானவேள்வி ஞானவேள்வி என்பனவும், தானம் யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவம் சாந்தி விரதம் கன்மம் யோகம் என்பனவும், பிறவுமாம். இவைகளுள், சிவஞானிகளுக்குச் செய்யும் தானமும் ஒன்றாகும். இறையருட் பேறு எய்துதற்கு, நாம் விதி நெறியிலும், பக்தி நெறியிலும் முயலலாம். அங்ஙனம் நாம் பக்தி நெறியில் நின்று சிவஞானியர்க்குத் திலம் (எள்) அளவு தானம் செய்தாலும், அதன் பயன் நிலமும் மலையும் போல் மிகப் பெரியதாக வளர்ந்தோங்கி, நம்மைப் பிறவிக் கடலினின்று எடுத்து, பர போகம் துய்ப்பித்துப் பாசத்தை அறுக்கும் ; தவமாரும் பிறப்பொன்றில் சாரப்பண்ணும் ; நவமாரும் தத்துவ ஞானத்தை நல்கும் ; நம்மை எளிதில் நாதன் அடிக்கமலங்கள் நணுகுவிக்கும். இதனை,

''சிவஞானச் செயலுடையோர் கையில் தானம்
திலம்அளவே செய்திடினும், நிலமலைபோல்திகழ்ந்து
பவமாயக் கடலின்அழுந் தாதவகை எடுத்துப்
பரபோகம் துய்ப்பித்துப் பாசத்தை அறுக்கும்''

எனவரும் சிவஞான சித்தியார் (8—26) செய்யுள், சிறப்புறத் தெளிவுறுத்துகின்றது. இக்கருத்தினை வலியுறுத்தி அறிவுறுத்தும் முறையில், பின்வரும் திருமந்திரச் செய்யுள் பெரிதும் அழகுற விளங்குகின்றது.

''திலமத் தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்;
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமற் றேபர போகமுங் குன்றுமே''.

—திருமந்திரம் 501.

## முடிவுரை

'தண்டமிழின் மேலாந் தரம்' என்று போற்றத்தக்க நிலையில் சிறந்து விளங்கும் திருமந்திரம், சிவஞானசித்தியார் என்னும் இரு பெரு நூல்களிலும், இங்ஙனம் எத்தனையோ பற்பல ஒப்புமைத் தன்மை மிக்க செய்யுட்கள் பற்பல, அழகுற அமைந்து காணப்படுகின்றன. ''கடல் கண்டோம் என்பார் யாவரே முடிவுறக் கண்டார்?'' அவைகளை யெல்லாம் நுனித்தாய்ந்து நோக்கி நுண்ணிதின் எண்ணியுணர்தல், அறிஞர்களுக்கு ஆராப் பெருவிருந்தாகும். இத்தகைய ஒப்புயர்வற்ற திருமந்திரம்—சிவஞான சித்தியார் முதலிய தெய்விகத் தமிழ்ப் பெருநூல்களை, நாம் அனைவரும் கற்றுணர்ந்து பயன்கொண்டு உய்ய முற்படுவோமாக!

''.........வேதாகமத் துணிபு
இரண்டில்லை ஒன்று என்னவே
வந்த குருவே! வீறு சிவஞான சித்தி நெறி
மௌனோபதேச குருவே!
மந்த்ர குருவே! யோக தந்த்ர குருவே! மூலன்
மரபில் வந்த மௌன குருவே!''

— *தாயுமானவர்.*



திருவம்பலச் சக்கரம்



புவனேசுவரி சக்கரம்



சாம்பஜி மண்டலச் சக்கரம்



நவாக்கரி சக்கரம்

# மெய்கண்ட தேவர் அருள்நெறி

'தத்துவ வித்தகர்'
[ டாக்டர் திரு. வ. ஆ. தேவசேனபதி, M.A., Ph.D. ]

இறைவனுடன் இரண்டற நிற்றலே சமய வாழ்வின் சிறந்த பேருகும். இரண்டன்மை யாகிய அத்துவிதம் என்பதற்கு மெய்ப்பொருள் கண்டவர் மெய்கண்டார் என்று தாயுமானவர் அவரைப் போற்றி வணங்குகின்ருர். 'அத்துவித மென்ற சொல்லானே ஏகமென்று சுட்டுவதுண் மையில் அத்துவிதமென்ற சொல்லே அந்நிய நாத்தியை யுணர்த்துமாயிட்டு' என்று சிவஞான போதம் கூறுகிறது. மறைகளெல்லாம் ஒன்றென முழங்க, இரண்டன்மை என்னும் பொருள் கொண்டு உயிர்களைப் பலவாகப் பேசுதல் பொருந்துமாவெனில், மெய்கண்டார் கூறும் விடை சமய உண்மைகளைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தருவதாக உள்ளது.

''ஒன்றென்ற தொன்றேகாண்; ஒன்றே பதி;
பசுவாம்
ஒன்றென்ற நீ;பாசத்தோடுளைகாண்;—ஒன்றின்
ருல்
அக்கரங்கள் இன்ரும் அகர உயிர்இன்றேல்;
இக்கிரமத் தென்னும் இருக்கு''

ஒன்றென மறைகளில் கூறப்பெறுவது இறைவன் ஒன்றே என்னும் உண்மை. முழு முதற்பொருள் ஒன்றே. மறைகளையொட்டி ஒன்றெனக் கூறும் உயிர், கட்டுண்ட நிலையிலிருப் பதாகும். பாசத்தால் பிணிப்புற்றுள்ள உயிர் பசுவெனப்படும். உயிரின் இருப்பு நிலை மூவகை யாக உளது. பாசத்தால் அறவே கட்டுண்டிருக் கும் நிலை இருள் நிலையாகும். இந்தக் கட்டு நீங்குவதற்கென உடல், கருவிகள், நுகர் பொருள்களாகியவற்றை இறைவன் உயிருக்குக் கொடுத்துதவ, கட்டு சற்றே நெகிழ்ந்துள்ள நிலை மருள் நிலையாகும். இருள் நீங்கிய அள விற்கு முன்னேற்றம் உளதெனினும் பெற்றுள்ள பொருள்களைக் கொண்டு இறைவனை வழிபடாத உயிர் தன் முனைப்போடு புலனெறி சென்று இருவினை ஈட்டுவதால் மருள் நிலை ஏற்படுகின் றது. 'பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்குமன்பின் வெற்றடியேன்' என்று மாணிக்க வாசகர் கூறுவது ஈண்டு நினைவிற்கு வருகிறது. இனி,

''அவனே தானே யாகியஅந்நெறி
ஏகனகி இறைபணி நிற்க
மலமாயை தன்னெடு வல்வினை யின்றே''

என்பதற்கிணங்க, உயிர் கட்டுற்ற காலத்தில் இறைவன் அதனேடு அத்துவிதமாய்க் கலந்து நின்ற அம்முறையே உயிர் முதல்வனேடு ஒற் றித்து நின்று தானென வேறு காணப்படுமா றில்லாமல் இறைவன் ஆணைவழி ஒழுக, ஆண வம் மாயை என்பவற்ருேடு கொடிய வினையும் நில்லாது நீங்கும் ஏகனுகிய இறைபணி நிற்றலே அருள் நிலையாகும்.

இவ்வாறு இருள், மருள், அருள் என்னும் மூன்று நிலைகள், உயிருக்கு உண்டென விளக்கி அவற்றுள் முதலிரண்டினையும் நீக்கிமூன்ருமதனை எய்தும் நெறியை மெய்கண்டார் உணர்த்திச் செல்வதால், மெய்கண்டார் காட்டிய நெறி அருள் நெறியெனக் கூறுதல் மிகப் பொருத்த மாகும்.

அவையடக்கச் செய்யுளிலேயே மெய் கண்டார் சைவசித்தாந்தச் செந்நெறியின் மையக் கருத்தை வைத்து அவையடக்கம் கூறுகிருர்.

''தம்மை யுணர்ந்து தமையுடைய
தன்னுணர்வார்
எம்மை யுடைமை யெமை இகழார்
—தம்மை
யுணரார் உணரார் உடங்கியைந்து
தம்மிற்
புணராமை கேளாம் புறன்''

இதன் பொருள் வருமாறு : ''உடைமைப் பொருளாகிய தம்மியல்பினை யுணர்ந்து தம்மை உடையவனுகிய தலைவனை யுணர்ந்தவர்கள் தமக்கு உடைமையாக எம்மை உடையவர்களா தலில் எம்மை இகழமாட்டார்கள். தம்மை உணராதவர்கள் தலைவனையும் உணராதவர் களே. அவர்கள் ஒருங்கு சேர்ந்து தம்முள் ஒற்றுமைப்பட மாட்டாராகையால் அவர்களது புறங்கூற்று மொழியைப் பொருளாகக் கொள்ள மாட்டோம்.

''நான் யார்?' என்னும் கேள்விக்கு விடை பலதிறப்பட்டது. 'நான்' என ஒரு பொருள் இல்லை யென்பது முதல் 'உடலே நான்', 'பொறி களே நான்' என்றெல்லாம் ஆழ்ந்தும் அகன்றும் ஆராய்ச்சி நிகழ்கிறது. இவ்வனைத்துக்கும் வேருக 'நான்' என ஓர் அறிவுப்பொருள் உண்

டென்போருள்ளும் இரு திறத்தினரைக் காண் கிறோம். ஆன்மா அல்லது அறிவுப்பொருள் ஒன்றே என்போர் ஒரு திறத்தினர். தானே அறியும் பொருளாக ஒரு பேருயிரும், அறிவிக்க அறியும் பொருள்களாகச் சிற்றுயிர்கள் பலவு மாக, உயிர்கள் பல என்போர் மறு திறத்தினர். உயிர்கள் பல என்னும் கொள்கையைச் சுருக்க மாகவும் திறம்படவும் எடுத்துக் கூறுவது சிவ ஞான போதமாகும். இதனாலன்றோ, பெரிய மலையையும் தன்னிடத்தே தெளிவாகக் காட்டும் சிறிய கண்ணாடியைப் போன்று இந்நூல் மிகப் பரந்த பொருள்களைப் பற்றிப் பேசுவதாயினும் மிகச் சிறிய அளவில் அமைந்துள்ளது என்னும் ஒப்புமை கூறப்பட்டது.

''மன்னுயிர்' என்று சொல்வதற்கேற்ப நிலைத்து நிற்கும் பொருளாக உயிர்கள் இல்லை யெனில் அருள்நெறி தேவைப்படாது. அவ்வாறு நிலைத்து நிற்கும் உயிர் உண்டு; ஆயின், அது ஒன்றே. அதற்கு வேறாகப் பிறிதொன்று இல்லை என்று கூறினும் அருள்நெறி அமையாது. உயிர்கள் பலவென்று சொன்னதால் அருளை வேண்டி நிற்கும் உயிர்களெனவும் அருள்பாலிக் கும் உயிரெனவும் இரு வகை உயிர்கள் பெறப் பட்டு அருள்நெறியின் தேவை புலப்படுகிறது. இறைவனே அருள் பாலிப்பவன்; ஏனைய உயிர் கள் அவனருளால் வாழ்வன என்பது உண்மை தான். ஆயினும் உயிர்கள் கட்டினின்றும் விடு பட்டு நன்னிலை அடைவதற்கு நல்வழி, அன்பை வளர்த்து அதன் வழியாக அருளுள்ளம் பெற்று அருளே உருவாகிவிடுவதுதான். சமயச் சான் றோர்கள் இவ்வாறுதான் அருளாளர்களாகக் காட்சியளிக்கின்றனர். மன்னவன் மகன் வேட ரிடத்தே தங்கி அவர்களைப் போல வளர்ந்து வந்தாலும் மன்னனால் தன் பிறப்பினுண்மை தெரிவிக்கப் பெற்றவுடன் இளவரசுக்குரிய தன்னியல்பில் வாழ்வதைப் போல, உயிர்களும் சமய வாழ்க்கையில் முன்னேறிச் சென்று இறை வனைப் போலாகி விடுகின்றனர். 'யான்', 'எனது' என்னும் அகப்புறப் பற்றுக்களினின் றும் விடுபட்டு அனைத்துயிர்களுக்கும் தொண்டு செய்வதே அவர்களியல்பாகிவிடுகிறது. இவ் வாறு உயிர்கள் அருளாளர்களாக வேண்டும் என்பதே இறைவன் திருவுள்ளம். தன்னலத்தில் தொடங்கி அன்பாக அரும்பி அருளாக மலரும் வாழ்க்கையே படைப்பின் குறிக்கோளாகும்.

இத்தகைய உயிர் வளர்ச்சி முறை சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய மனோன்மணீயத்தில் வற்புறுத்தப் பெறுகின்றது. பின்வரும் அடிகள் நினைவு கூரற்பாலது.

''பூரிய உயிரிஃ தாயினும் தனது
சீரிய வலையிற் சிக்குண் டிறந்த
ஈயினை ஈதோ இனியதன் குஞ்சுகள்
ஆயிரம் அருந்த அருகிருந்தூட்டி
மிக்கநல் அன்பெனும் விரிந்தநூல் தெளிய
அக்கரம் பயில்வ ததிசயம்! அதிசயம்!
இப்படி முதற்படி இதுமுதலா நம்
ஒப்பறும் யாக்கையாம் உயர்படி வரையும்
கற்பதிங் கிந்நூற் கருத்தே அதனால்
இத்தனி உலகில் எத்துயர் காணினும்
அத்துணை துயரும்நம் அழுக்கெலாம் எரித்துச்
சுத்தநற் சுவர்ணமாச் சோதித்தெடுக்க
வைத்த அக்கினியென மதித்தலே உயிர்கட்கு
உத்தம பத்தியென் றுள்ளுவர் உயர்ந்தோர்!
எல்லாம் அவனருள் அல்லாதில்லை
என்னனுபவமிது; மன்னிய இவ்வருள்
தன்னிடை மூழ்கித் தானெனல் மறந்து
நெருப்பிடை இழுதென நெக்கு நெக்குருகி
இருப்பவர் பிறர்க்காய் இராப்பகல் உழைப்பர்.
ஒருபயன்கருதார் அருள் கருதுவதென்?
அகிலமுந் தாங்கும் அருளிலோர் அங்கமாச்
சகலமும் செய்வர் அஃதவர் சமாதி
எங்கெலாம் துக்கம் காணினும் அங்கெலாம்
அங்கம் கரைய நின்றரற்றி ''ஐயோ!
எம்மையும் காத்த இவ்வருள் இவரையும்
செம்மையிற்காக்க'' எனமொழிகுளறி
அழுதுவேண்டுவதே அன்றி
விழுமியமுத்தியும் வேண்டார்தமக்கே''

மெய்கண்டார் காட்டும் அருள்நெறி சைவ நன்னெறியன்றோ? சிற்றுயிர்க்கிரங்கித் தான் நஞ்சுண்டு அவற்றை வாழவைக்கும் அருளாளன் நெறி இவ்வாறுதானே அமையும்!

---


மதிப்புரை

## முப்பொருள் இயல்பு

சைவசித்தாந்த தத்துவக் கொள்கைக்குரிய பதி-பசு-பாசம் என்னும் முப்பொருள்கள் பற்றி, எளிய இனிய தெளிவான நடையில், இந்நூல் அழகுற விளக்குகிறது. காஞ்சிபுரம் மகாவித்துவான் சித்தாந்தகலைமணி திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் இந்நூலை எழுதியுதவியுள்ளார். சைவசித்தாந்தம் பயில விரும்பும் அன்பர்களுக்கு இந்நூல் பெரிதும் துணைபுரியும். **விலை ரூ. 1—25**

புத்தகம் கிடைக்குமிடம் :

**சைவசித்தாந்த மகாசமாசம்**
12, கிழக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை—600 004.

# இராமாயண நுண்பொருள்

இந்து மதத்தைச் சார்ந்தவர்களாகிய நமக்கு உரிய, சிறப்பு மிக்க இதிகாசங்களுள், இராமாயணம் என்பது ஒன்று. அதன் அருமை பெருமைகள் அளப்பரியன. இராமாயண கதையை அறியாத எவரும், நமது இந்திய நாட்டில் இரார். எத்தனையோ பல நூற்றாண்டுகளாக, எத்தனையோ பல கோடிக் கணக்கான மக்களின் உள்ளங்களை, இராமாயணக் கதை கொள்ளை கொண்டு இன்புறுத்தி வருகின்றது. இத்தகைய எல்லையற்ற சிறப்புடைய இராமாயணக் கதையினின்று, நாம் எண்ணற்ற பலதிற உண்மைகளை, பல கோணங்களில் இருந்து அறிதல் கூடும். தத்துவ நோக்குக் கொண்டு ஆராயும் அறிஞர்கள், இராமாயணத்தின் நுண்பொருள்களைப் பலவகைகளில் விளக்குகின்றனர்.

ஆன்மாவானது இன்பமயமாகிய விண்ணுலகினின்று, ஆவலும் காமமும் நிறைந்த இம்மண்ணுலகிற்கு இறங்கி வருகின்றது. நான் என்னும் அகந்தையினிடமிருந்து மனச்சான்று என்னும் தூதுவன் வருகின்றான். தீமைக்கும் ஆன்மாவிற்கும் இடையே, பெரும் போர் நிகழ்கின்றது. இறுதியில் தீமை தோல்வியுற்றுத் திருந்துகின்றது. அதன் பின்னர் ஆன்மா, தன் தந்தையின் இல்லமாகிய சுவர்க்கத்திற்குத் திரும்பிச் செல்லத் தொடங்குகிறது. அப்பயணத்தின் முடிவில், அது மீண்டும் இன்ப உலகத்திற் சென்று சேருகின்றது. இத்தத்துவ உண்மையினையே இராமாயணக் கதை குறிப்பிடுகின்றது எனலாம்.

இராமன்தான், ஆன்மா. அதனால்தான் அவருடைய தோற்றம் இயற்கைக்கு அப்பாற்பட்டதாய் நிகழ்கின்றது. சீதைதான், உயிருக்குரிய உடம்பு. அது பற்றியே அவள் நம்மைப் போல ஒரு பெண்ணினிடமிருந்து தோன்றவில்லை. ஜனக முனிவர் வேள்வியின் பொருட்டு நிலத்தை உழுவதற்கு முற்பட்டபோது, அவள் தோன்றியருளினாள்.

இராமனும் சீதையும் அயோத்தி நகரத்திலிருந்து காட்டிற்கு அனுப்பப் பெற்றனர். அயோத்தி விண்ணுலகத்தைக் குறிக்கின்றது. இராமனும் சீதையும் முறையே, உயிரையும் உடலையும் குறிக்கின்றனர். இருவரும் தண்டகாரண்யத்தைஅடைகின்றனர். தண்டகாரண்யம் என்பது இம்மண்ணுலகம். சீதை அங்கு இராவணனால் கவர்ந்து செல்லப்படுகின்றாள். அஃது, ஆன்மா காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மார்ச்சரியம் முதலிய தீமைகளின் வயப்பட்டுத் துன்புறுதலை உணர்த்துகின்றது.

சீதை இலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றாள். ஆன்மா உலகியல் மாயச் சேற்றில் அழுந்தி வருந்துதலை, இஃது உணர்த்துகின்றது. இராமன் சீதையைத் தேடி வர அனுமனை அனுப்புகின்றான். சீதையைத் தேட அனுமான் பெரிதும் முயன்று வருந்துகின்றான். இஃது ஆன்மாவினது மனச்சான்று, உலகியல் ஆகிய மாயச் சேற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளச் செய்யும் முயற்சியினைச் சுட்டுகின்றது. இராமபிரானுக்கும் இராவணனுக்கும் போர் ஏற்படுகின்றது. தீமையை அடக்கி வெற்றி கொள்ள ஆன்மா போராடுதலை, இப்போர் நிகழ்ச்சி இனிது உணர்த்துகிறது.

சிதை இலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றாள். ஆன்மா உலகியல் மாயச் சேற்றில் அழுந்தி வருந்துதலை, இஃது உணர்த்துகின்றது. இராமன் சீதையைத் தேடி வர அனுமனை அனுப்புகின்றான். சீதையைத் தேட அனுமான் பெரிதும் முயன்று வருந்துகின்றான். இஃது ஆன்மாவின மனச்சான்று உலகியல் ஆகிய மாயைச் சேற்றிலிருந்து விடுவித்துக் காத்தற்குச் செய்யும் முயற்சியினைச் சுட்டுகின்றது. இராமபிரானுக்கும் இராவணனுக்கும் போர் ஏற்படுகின்றது. சிந்தையை அடக்கி வெற்றி கொள்ள ஆன்மா போராடுதலை, இப்போர் நிகழ்ச்சி இனிது உணர்த்துகின்றது.

இராவணன் கும்பகர்ணனின் உதவியைப் பெறுகிறான். ஆன்மா தீமையை எதிர்த்துப் போரிடும் போது, தூக்கம்—சோம்பல் முதலிய தீயகுணங்கள் இடை இடையே வந்து தொல்லை விளைத்தலை, இது குறிப்பிடுகின்றது. கும்பகர்ணன் கொல்லப்பட்ட பிறகு, இந்திரசித்து தொடர்ந்து சண்டை புரிகின்றான். அவனுடைய அம்புகள் பாம்புகளாக மாறுகின்றன. சில சமயங்களில் நன்மையிலும் தீமையே வலிமை பெற்றுநிற்றலை அதனால் அறிகின்றோம்.

அந்நிலையில் அனுமான் மகாமேரு மலையிலிருந்து சஞ்சீவி மூலிகையைக் கொண்டு வருகின்றான். இந்திரசித்தின் நாகாஸ்திரத்தினால் ஏற்பட்ட தீங்குகள் நீங்குகின்றன. தீய சக்திகள், ஆன்மாவுக்குக் கேடு சூழ முற்படும் பொழுது பூசை, தியானம், செபம் தவம் முதலியன, அத்தகைய தீய சக்திகளை அழித்து, ஆன்மாவுக்கு நன்மை புரிகின்றது என்னும் உண்மையை, இது தெரிவிக்கின்றது.

பின்னர் இராமனுக்கும் இராவணனுக்கும் இறுதிப் போர் நடைபெறுகின்றது. இராவணன் பத்துத் தலைகளும், இருபது தோள்களும் கொண்டவன். இராமபிரான் அவனது தலை ஒவ்வொன்றையும் அறுக்கின்றார். ஆயினும் அவைகள் திரும்பத் திரும்ப முளைக்கின்றன. இஃது ஒரு நல்ல ஆன்மா, தான் ஈடேறுவதற்கு எண்ணற்ற பல தீய சக்திகளை எதிர்த்துப் போரிட்டு, வெற்றி கொள்ள வேண்டியிருக்கின்றது என்பதனைப் புலப்படுத்துகின்றது. ஒரு தீய குணத்தை நாம் அரை குறையாக ஒழித்தால் போதாது; அது மீண்டும் மீண்டும் பெருகி வளர்ந்து வருமாதலின், தீய பழக்க வழக்கங்களை, நாம் அறவே முற்றாக வெறுத்து விலக்கி அழித்து விடுதல் வேண்டும் என்பதனை இதனால் அறியலாம்.

இராமபிரான் பிரம்மாஸ்திரம் கொண்டு, இராவணனை வென்று கொன்றழிக்கின்றார். ஒரு

ஆன்மா தனது துன்பங்களைக் கடந்து வெல்லுவதற்கு இறைவனின் திருவருளைத் துணையாகக்கொள்ளுதல் வேண்டும் என்பது இதன் கருத்து.

இராமபிரான் சீதைக்கு ஏற்பட்ட பழி குறித்து வருந்துகின்றார். சீதை தான் ஒரு குற்றமும் அற்றவள் என்பதனை, உலகறியத் தீப்புகுந்து எழுந்து மெய்ப்பிக்கின்றாள். இறையருட் பேறு விரும்பும் ஒரு தூய நல்ல ஆன்மா, பொல்லாப் புலாற் குரம்பையாகிய உடம்பின் புன்மையினை உணர்ந்து வெறுத்து, அதனை நீக்கிக் கொள்ள விரும்பி முயல்கின்றது. அப்புன் புலால் யாக்கையே, இறையருளாற் பின்னர் பொன்னெடுங் கோயிலாக மாறுகின்றது என்பதனை, இஃது உணர்த்துகின்றது.

தீப்புகுந்து எழுந்து தூயவளாய் நின்ற சீதையும், இராமபிரானும் பின்னர் ஒன்று சேர்ந்து மகிழ்கின்றனர். அயோத்திக்குச் சென்று இன்பமுற்று வாழ்கின்றனர். இஃது, ஆன்மா பரமான்மாவுடன் கூடி, வீடுபேற்று நிலையில் ஒன்றி நின்று இன்புற்று நிற்றலைத் தெளிவுறுத்துகின்றது.

இங்ஙனம் மிகச் சிறந்த இதிகாசமாகிய இராமாயணக் கதையினை ஊன்றி நோக்கி உணர்ந்தால், நாம் எத்தனையோ பல தத்துவ நுண்பொருள்களை அறிந்து பயன் பெறலாம். இத்தகைய நுண்ணுணர்வு கொண்டு ஆராயுந்தோறும், நமது உள்ளம் தூய்மையடையும், பக்தி உணர்வு பொங்கும். மிகச் சிறந்த புனித நலன்களையும், தெய்விக உணர்வுகளையும் நாம் எய்தலாம். இனைய பெருஞ் சிறப்பியல்புடைமை பற்றியே, நமது முன்னோர்கள் ''இராமாயணம் என்னும் பக்தி வெள்ளம்'' என்று, இதனைப் பெரிதும் புகழ்ந்து போற்றிப் பாராட்டி மகிழ்ந்து இன்புற்றனர்.

—ஆசிரியர்.



திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியின் தங்கத்தேர் வெள்ளோட்ட விழாவில், வணிகவரி மற்றும் அறநிலையத் துறைச் செயலர் திரு. ஜி.எஸ். சேஷாத்திரி, ஐ.ஏ.எஸ். அவர்களும், அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். அவர்களும், நிர்வாக அதிகாரி திரு. சோமசுந்தரம், பி.ஏ.பி.எல். அவர்களும், பிறரும் கலந்து கொண்டு சிறப்பித்தல் (14-4-76.)

# கோயில் வழிபாடு

கவியோகி சுத்தானந்த பாரதியார்

## 1. கோயில் நாடு

நமது நாட்டை நினைத்தால் அழகான கோயில்கள் முன்னிற்கின்றன. மரங்கள் அடர்ந்த காடுகளில்—ஓங்கி நிவந்த மலைகளிற் கோயில்; சலசலத்தோடும் ஆற்றங்கரைகளிற் கோயில்; அலை வீசியார்க்கும் கடற்கரைகளிற் கோயில்; ஆல், அரசு, புன்னை, வன்னி, வில்வ மரத்தடிகளிலெல்லாம் கோயில். எங்கும் கோயில்; எல்லாம் கோயில். உலகமே உயிர் மேனிப் பெருமான் உலாவும் கோயில்; உள்ளம் பெருங்கோயில்; ஊனுடல் ஆலயம். எல்லாவுயிர்க்கும் இறைவன் ஒருவனே; எல்லாவுடலும் இறைவன் ஆலயமே. நமது நாட்டில் வடக்கெல்லையான இமாலயத்தில் கைலாசநாதரும், கௌரியன்னையும் கோயில் கொண்டிருக்கின்றனர். தெற்கே குமரியன்னை தவம் புரிகிறாள் ; இராமநாதர் கோயில் கொண்டிருக்கிறார். கிழக்கே காசி விசுவநாதர் கோயில் கொண்டு காட்சியளிக்கிறார். மேற்கே சோமநாதர் துலங்குகிறார். திரைப்படங்கள் புலன்களைக் கவரும் இந்நாட்களிலும், கோவிலுக்குத்தான் கூட்டம் வருகிறது. காசி, துவாரகை, காஞ்சி, திருப்பதி, சீரங்கம், சிதம்பரம், மதுரை, பழனி, வேளூர், சீர்காழி, ஆரூர், இராமேசுவரம், திருச்செந்தூர் விழாக்களில் ஏராளமான மக்கள் கூடிக் கும்பிடுகின்றனர். நமது நாடு புண்ணியக் கோயில் நாடு.

## 2. கோயிற் பண்பாடே வாழ்வு

இந்தியப் பண்பாடே, கோயிற் பண்பாடு. இந்தியாவின் பெருமை கோயிற் பெருமை; நாம் வணங்கும் அடியாரும், குருமாரும், கோயிலார்களே; நாம் பாடும் பக்திப் பாடல்களெல்லாம் கோயிலிசைகளே ; நாம் காலையும் மாலையும் கேட்பது கோயில் மணிகளே; இந்தியர் வாழ்வு கோயிலுணர்வில் கூடிக் குழைந்து நிற்கிறது. கோயிலைச் சுற்றியே நமது வாழ்க்கை அமைந்து விளங்குகிறது. கோயிற் கருவறையிலிருந்தே நமக்கு அறிவும் அமைதியின்பமும் வருகின்றன.

''நிலைபெறுமாறு எண்ணுதியேல், நெஞ்சே ஆரூரா என்றென்றே அலறாநில்லே'' என்கிறார் அப்பர். ''ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே'' என்கிறார் மெய்கண்டார். ''ஆலயமாக அமர்ந்திருந்தானே'' ''ஐந்தன் பெருமையே ஆலயமாவதும்'' என்று இறைவனைக் குறிக்கின்றார் திருமூலர்.

## 3. ஆலயமே சமய விளக்கம்

ஆலயமே சமய விளக்கம்; ஆலயமே ஆன்ம வித்தியா, சீவசிவ—தத்துவ விளக்கம். ஆலயமே உயிர்—இறை—தளை (சீவ—சக—பரம்) ஆகிய முப்பொருளியல்பின் வைப்பு. வேதாகமபுராண இதிகாசங்களின், சமய சாத்திரங்களின், பாதுகாப்பு நிலையம் கோயில்களே. அப்பர், சுந்தரர், சம்பந்தர், சேக்கிழார், திருமூலர் பாடல்களெல்லாம் கோயில் காப்பறைகளினின்று நமக்குக் கிடைத்தனக்வ. திருத்தொண்டர்களெல்லாம் கோயில் கோயிலாகச் சென்றே பாடினர் ; ஆடினர்; தொண்டு பரவினர். அருட்பெருமை காட்டி மக்களுக்கு இறைவன் உண்மையை விளக்கினர். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தொழுதால் வார்த்தை சொல்ல அருளாசான் வாய்க்கிறான். கோயிலில் குருந்த மர நிழலிலேதான் சிவகுரு வாதவூரரை ஆண்டு கொண்டு, மாணிக்கவாசகராக்கினார். மாணிக்கவாசகரின் திருவாசகம், சிதம்பரம் கோயிலில் எழுதப்பெற்றுப் பஞ்சாட்சரப்படியிலிருந்து நமக்குக் கிடைத்தது. எச்சமயத்திற்கும் இதய நிலையமாயிருப்பது கோயில்.

## 4. கோயிலே பேரின்ப வாயில்

கிறித்து சமயம் சர்ச்சிலேதான் கருக்கொண்டு உருக்கொண்டு பரவுகிறது. இஸ்லாமியம் மசூதியிலிருந்து ''அல்லாஹூ அக்பர்'' என ஆர்க்கிறது. பௌத்த சமயம் அழகான அமைதியான ஸ்தூபாக்களிலிருந்து உலகெல்லாம் பரவிப் பொலிகிறது. சமணம் தீர்த்தங்கரர் கோயில்களிலிருந்து திகழ்கிறது. ஜரதஷ்டிரம் தணலோங்கும் கோட்டங்களிலிருந்து பொலிகிறது. ஒவ்வொரு சமயத்தவரும் உள் அமைதிக்காகத் தம்தம் கோயில்களில் வழிபடுகின்றனர். ஞாயிறன்று கிறித்துலகம் சர்ச்சுகளில் வணங்குகிறது. மணியடித்ததும் வரிசையாக நடந்து சென்று கிருத்துவரும் இஸ்லாமியரும் கோயில் புகுந்து கூட்டமாகத் தொழுகின்றனர். கூட்டத் தொழுகையால் சமயம் வளர்கிறது. சன்மார்க்கம் வளர்கிறது.

## 5. அருட்கலை நிலையம்

சீர்காழிக் கோயிலை நினைத்தால், சம்பந்தப் பிள்ளைக்குச் சிவ சக்தி புகட்டிய ஞானப்பால் நம் ஆன்மாவில் ஊறுகிறது. புள்ளிருக்கு வேளூரை நினைத்தால் முத்துக்குமாரர் சந்நிதி சக்திச் கனல் பொழிந்து மனநோயை வாட்டு

கிறது. திருக்கடவூர் அபிராமியன்னையை நினைத்தால், அபிராமி பட்டரின் அந்தாதி செவிகுளிர ஒலிக்கிறது. திருவீரட்டானத்தை நினைத்தால் கூற்றென வந்த சூலைநோய் விலகுகிறது. ''கோமாற்கே ஆளன்றி நாமார்க்கும் குடியல்லோம்'' என்று நெஞ்சம் துடிக்கிறது. சிதம்பரத்தை நினைத்தால் கூத்தப் பெருமான், அம்பலத்தாடி, உலகக் கோயிலில் உயிர்மேனி கொண்டு ஐந்தொழிலாடல் புரியும் அற்புதம் காண்கிறது. ஆலவாயின் புகழ் ஞாலமெல்லாம் நிகழ்கிறது. பாரத நாட்டுக்கு வரும் பிறநாட்டாரும் நமது கோயிற் கலையைக் கண்டே வியக்கின்றனர். இத்தகைய கோயில்களில், மக்கள் மனங்குவிந்து நினைவொடுங்கி, வழிபட்ட காலத்திலேதான் நமது நாடு நிகரற்ற நன்னாடாக விளங்கியது; நமது கல்வி, செல்வம், நாகரிகம் எல்லாம் தழைத்துச் செழித்தன. கோயில் மணியே நமது சமயப் பண்பாட்டின் வெற்றியை ஒலித்துக் காட்டியது. கோயில் வழிபாடு குன்றக் குன்ற நமது வாழ்வும், வளமும் குன்றிப் போயின. கோயில் வழிபாட்டை மீண்டும் பொலிவுறுத்தினலே நமது சமயம் பெருகும், இன்றேல் பிற சமயங்கள் நமது திருவருட் சமயத்தை இருளில் ஒதுக்கி மறைத்துவிடும்.

## 6. கோயில் தத்துவம்

கோயில் தத்துவத்தை இனி அறிவோம். நான் உலகெங்கும் எல்லா நாடுகளிலும் பல முறை சுற்றி நமது சமய உண்மைகளையும், நடைமுறைகளையும் பல்லாயிரம் மக்களுக்கு விளக்கியுள்ளேன். சமயத்தை நம்பாத சோவியத் நாட்டிற்கூட நமது கோயிலின் அமைப்பைக் கேட்டு அறிஞர் வியந்தனர். நம்முள் விளங்கும் தூய தத்துவங்களின் புற விளக்கமாகவே கோயில்கள் விளங்குகின்றன. உள்ளத்தே உள்ளமாய் உள்ள ஒளி மணியை உருவாகக் காட்டி, கல்லாரும் கண்ணுரக் காணச்செய்வது நமது கோயிலின் அமைப்பு. அது பத்தியின் வித்தாகி முத்தியில் சித்தாக விளங்குகிறது. இருபத்தெட்டு ஆகமங்களின் பொருளும் கோயிலுருக் கொண்டு விளங்குகின்றன. அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்த மயம் ஆகிய பஞ்சகோசங்களும் ஐந்து பிராகாரங்களாக, சுற்று வட்டங்களாக விளங்குகின்றன. சித்து சத்து ஆகிய தத்துவங்கள் மூர்த்திகளாக விளங்குகின்றன. சத்தான மெய்ப்பொருள் என்றும் உள்ளது; பெயர் வடிவே வேறுபாடற்று எல்லாமாயிருப்பது; இருந்தபடி இருப்பது. அதையே இலிங்காகாரமாக ஆகமச் சித்தர் கருவறையில் அமைத்தனர்.

## 7. இலிங்க தத்துவம்

இலிங்கத்தில் அடிப்பகுதி ஐம்பூதம், தன் மாத்திரை, ஞானேந்திரியம், கர்மேந்திரியம், நான்கு அந்தக்கரணம் ஆகிய ஆன்ம தத்துவ விளக்கம். இதுவே சிருட்டி தத்துவம், பிரம்மாகாரம். இது சென்று சென்று அணு அணுவாகத் தேய்ந்து, சூக்குமமாகி—வித்தியா தத்துவத்துடன் ஒன்றுகிறது. காலம், கலை, நியதி, அராகம், வித்தை, புருடன், மாயை ஆகிய வித்தியாதத்துவமாகிறது. வித்தியா தத்துவம் ஆக்கத் திறனுடையது; விஷ்ணு மயமானது. இதற்கு மேலே சிவ தத்துவம் விளங்கும். இதை ''எழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின்தன்மை'' என்று விளக்குகிறார் மாணிக்க சிவம். இதில் தூய அறிவான சுத்த வித்தை, அருளாட்சித் திறனான ஈசுவரம், என்றும் ஒருமை கொண்ட சாதாக்கியம், நாதமான சக்தி; பிந்துவான சிவம்—ஆகிய ஐந்து தத்துவங்கள் விளங்கும். இந்த நாதவிந்துக்களை உன்மினி சமனி என்பர். நாதம் அறிவுணர்த்தும். விந்து செயல்வீறுரும்.

## 8. ஐந்தொழிற்கலை

இவையே ஐந்தொழிற் கலையாக வளரும்: (1) ஆக்கம்; சிருஷ்டி; (2) காப்பு, நிசி; (3) நீக்கம், சங்காரம்; (4) அமைதி, மறைப்பு, திரோபவம்; (5) அருளல், அனுக்கிரகம். இந்த ஐந்தொழிலுக்கும் ஐந்து தெய்வ விளக்கங்கள் உள்ளன. அவற்றிற்கு ஐந்து சக்திகள் உண்டு. பிரம்மா கலைமகள்—விஷ்ணு, திருமகள்—உருத்திரன், மகாகாளி—மகேசுவரன், மகேசுவரி—சதாசிவன் மனோன்மனியுடன் விளங்கி உலகாடல்புரிவர். சிவசக்தியான பிந்து—நாதக்கலை விளக்கமே உலகம். அரு, அருவுரு, உரு என்று விளக்கம் மூவகையாகும். சிவம், சக்தி, நாதம், விந்து இவை அருவாகும். சதாசிவம் அருவுருவாகும். மகேசுவரன், உருத்திரன், அயன்மால் எல்லாம் உருவாகும்.

> ''உருவைத் தொழுதெண்ணி
> உள்ளொளியைக் கண்டே
> உருவில்ஒரு தேவை உணர்''

சிவனுக்கு ஐந்து முகங்கள்: அவையாவன, வாமம், அகோரம், தத்புருஷம், ஈசானம், சத்தியோஜாதம். இவை சத்தி நிலையங்கள். சத்தியோஜாதத்தினின்றே ஆகமம் வந்தது; சரிகமபதநி என்ற ஏழிசைக் கலை பிறந்தது. கோயில்களில், சோமாஸ்கந்தர், லிங்கோத்பவர் முதலிய இருபத்தைந்து திருவுருக்கள் அமைந்திருக்கும்.

## 9. அருட்கலை விளக்கம்

அழகுச் சிற்பத்துடன் பழகும் அருட்கலை விளக்கமே நமது கோயில்களாம். ஆகம சாத்திரப்படி ஒரு கோயில் 64 பாகமாகப் பகுத்திருக்கும். 32 அகம் உட்கட்டம், 32 புறம், வெளிக்கட்டம். இவற்றில் தேவதைகளை நம்மவர் நாட்டுவர். ''ஆதித்யம், அம்பிகாம், விஷ்ணும், கணநாதம், மகேச்வரம்'' என்பன பஞ்சாயதனங்கம். இவற்றை வழிபடும் முறைகள் உண்டு. ஒவ்வொரு கோயில் மூர்த்திக்கும் யந்திர தந்திர மந்திரங்கள்உண்டு. யந்திர சக்தியால் கோயில் பெருமை பெறும். எடுத்துக் காட்டாகத் திருப்பதியில் ஜனகர்ஷண தனகர்ஷண யந்திரம் உள்ளன. அதனால் அன்பர் கூடுகின்றனர்; பணம் குவிகிறது. சிதம்பரத்தில் சுவர்ணகர்ஷண யந்திரமும், பழநியில் ஞானகர்ஷண யந்திரமும் உள்ளன.

யந்திர சக்தியால் அங்கங்கே அருள் விளையாடுகிறது. ஒவ்வொரு கோயிலிலும் அருந்தவ முனிவரின் அருட்காந்தம் நிலவுகிறது. கோயில்களில் முனிவர் தவமும், ஆகம வழிபாடுகளும் முறையாக நடந்தால், சக்தி விறுவிறுக்கச் சுழலும். அங்கே வந்து வணங்குவோர் அமைதி யின்பமும் ஆற்றலும் பெறுவர்.

## 10. அன்பும் அருளும்

கோயில் கோபுரம் ஜீவர்களின் பரிணும விளக்கமாகும். அதிற் காணும் உருக்களெல்லாம் உட்பொருளுடையன. கோயிற் கொடிமரம் யோக சக்தி விளக்கமாகும். இடாபிங்கலா சுழுமுன நாடிதாரணையால், ஸஹஸ்ராரத்தை எட்டி, பசுவானது பாசமகன்று, பதி நிலைபெறும் சாதன விளக்கமாகும். பலிபீடத்தில் ஆசையான மாசுகளைப் பலியாக்கி, அதன் முன் உள்ள பசுபோல சந்நிதியை நோக்கித்தியானித்திருத்தல் வேண்டும். பசுவுக்கும் பதிக்கும் இடையே பர்சத் திரையுள்ளது. தீபாராதனை காட்டும்போது திரை விலகும். கருவறைதான் நமது நுண்ணிய உள்ளம். அதிற் சிவம் துலங்கும். சீவன் சிவமயமாவதே வழிபாட்டின் கருத்து. சரியையான ஒழுக்கத்தால் தூய்மையுற்று, கிரியையான வழிபாட்டால் அருள் கூடி, யோகமான தியானத்தால் ஒருமைகூடி, ஞானமான அறிவால் சிவமயமாகும். அன்பும் அருளும் பெருகப் பெருக ஓம் ஒலிக்கும். புருவ நடுவில் ஒளி நிலவும், உள்ளத்தில் திருவடி நடனம் காணும், உச்சியிலே சத்தி பொழியும், முதலில் கோபுர தரிசனம், பிறகு கொடி மரம், நந்தி, பிறகு கணபதி, மூலவர், அம்பிகை, முருகன் ஆகிய மூர்த்திகளை வணங்கித் தட்சிணுமூர்த்தியின் முன் மௌனமாக உட்குவிந்து தியானம் செய்ய வேண்டும். பிறகு அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய அருளடியாரைக் கண்டு சண்டேசரை வணங்கி, தலவிருட்சத்தருகே ஜபம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யச் செய்யப் பக்தி வைராக்கியம் பழுத்து, பாசவினை நீங்கிச் சீவன் சிவமயமாகிப் பேரின்ப வெள்ளம் பெருகும்; நாளடைவில் பூசலார் போல நம் உள்ளே கோயில்காணலாம்; உள்ளத்தின் உள்ளேயுள்ள கருவறைக் கடவுளை உணரலாம். புறச்சாதனம் அகச்சாதனமாகி, வழிபாடே, யோகமாகி யோகமே ஞானமாகி, ''ஞானமே மோனமாகி அமைதி சேரும்''.

''உலகெலாம் கோயிலாய், ஒவ்வொருவர் உள்ளமும்
உள்ளிறைவன் சந்நிதியதாய்
உள்ளன்பு மலராக, உண்மைமந் திரமாக
உள்ளலே பூசையாக,
பலசாதி மதமற்ற பொதுவான பரமனே
பரிவான மூர்த்தியாக,
பலனிலே பற்றற்ற நற்ருெண்டு பரவலே
பழுதற்ற கிரியையாக
நலமான சன்மார்க்க நாதமே தங்கமாய்
நாமசப மேபெரியாய்
நானென்ற நடுவிலே நீயென்ற போதத்தை
நாட்டலே யோகமாக
இலகான்ம நேயத்தில் எல்லாரும் ஒன்ருய்
இருத்தலே ஞானமாகும்
எண்ணரிய சாதனம் பண்ணலே இன்பமாம்
இதயத்தில் உள்ளபொருளே''

''அருவாம் சிவனருள் அன்னைமுலைப் பால்போல்
உருவாகும் அன்பர் உளம்''
ஓம் சிவம், சிவோகம், சிவமயம்.


# அருள்மிகு சிவலோகநாதர் ஆலயம்

கீரனூர் — நன்னிலம் வட்டம்

## தஞ்சை மாவட்டம்.

அநாதிபெத்த சித்துருக்களாகிய ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்தற் பொருட்டு இத்தலத்தில் சோதிலிங்கச் சுயம்புவாய் வீற்றிருந்து, பூதேவர்களில் ஒருவரான அக்கினி பகவானுக்குத் தட்சன் யாகத்தில் ஏற்பட்ட கிளி உருவமான சாப நிவர்த்தி அளித்தும், சோழ மன்னனுடைய உதர ரோகத்தைச் சிவபெருமான் போக்கியும் அருளினர் என்பதாக ஐதீகம்.

இறைவன் : சிவலோகநாதர்

இறைவி : ஸ்ரீராம்பிகை

வணங்குவோர் எல்லா நலன்களும் பெறுவர், வருக! வணங்கி அருள் பெறுக!!

தி. நரபதிராமன்,
செயல் அலுவலர்.

# கன்னியாகுமரி

திரு. எஸ். பத்மநாபன்

"நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரி" யம்மனின் பெயரால் அமைந்தது கன்னியாகுமரி. பாரதத் தாயின் பாதச் சிலம்பொலி என முக்கடல்கள் இங்கே கூடி முழங்குகின்றன. உலகின் அமைப்பை உற்று நோக்கினால் கன்னியாகுமரி கூர்மையாக இருப்பதை நாம் காணலாம். அறிவு கூர்மையாக இருக்கும். "அரம் போன்ற கூர்மையர்" என்றார் திருவள்ளுவர். "கூர்த்த மெய்ஞ்ஞானம்" என்றார் மாணிக்கவாசகர். அறிவு என்பது ஞானாம்பிகை. "சக்திதான் யாதோ என்னில் தடையிலா ஞானமாகும்" என்பது சிவஞான சித்தியார். பாரத நாட்டில் கூரான பகுதி குமரிமுனை. இங்குதான் அன்னை ஞானாம்பிகை எழுந்தருளியுள்ளார்.

கன்னியாகுமரியில் சூரியன் தோன்றுவதையும் அவன் மறைவதையும் நாம் காணலாம். இச்சிறப்பினை வேறெங்கும்நாம் காணமுடியாது. பௌர்ணமியன்று ஒரே நேரத்தில் சூரியன் மறைவதும் சந்திரன் தோன்றுவதும் இங்கே கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இவ்வாறு இயற்கையன்னையின் அருள்பெற்ற புண்ணியத் தலம்தான் கன்னியாகுமரி.

"பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என்று சிலப்பதிகாரம் கூறுகின்ற, கடல் கொண்ட குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதிதான் இன்றைய கன்னியாகுமரி. இந்த நிலப்பரப்பினை மேலும் கடல் கொள்ளாதிருக்க அன்னை பராசக்தி தவக்கோலத்திலே இங்கு நின்று நம்மையெல்லாம் காத்து அருள் புரிகின்றாள்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் கன்னியாகுமரியைப் பற்றிய குறிப்புகள் பல இடங்களில் வருகின்றன. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்பது தொல்காப்பியம். "குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி" என்பது புறநானூறு. "தென் குமரிவடபெருங்கல், குணகுடகடலாவெல்லை" என்பது மதுரைக் காஞ்சி.

கன்னியாகுமரி புனித நீராடும் ஒரு புண்ணியத்தலமாகத் தொன்று தொட்டுச் சிறந்து விளங்கி வருகின்றது. கந்த புராணத்திலே "இவ்வரையில் குமரி தீதற ஆடுற வந்தனம்" என்று குமரித் துறையிலே பாவம் நீங்க நீராட என்றும், கன்னியோடு இடர் நீங்கி இன்பமுற என்றும், இரண்டு பொருள்பட வள்ளியை நோக்கி விருத்தனாக வந்த முருகப் பெருமான் கூறியது நம் குமரியம் பெருந்துறையைத்தான். கி.பி. முதல் நூற்றாண்டில் தோன்றிய பெரிப்ளஸ் என்ற நூல் கன்னியாகுமரியைப் பற்றிய சிறு குறிப்பைத் தருகின்றது. "தங்கள் வாழ்நாளின் இறுதிப் பகுதியை இறைவனோடு கலந்த வாழ்வாக மாற்ற விரும்பும் பலர், குமரித்துறை வந்து நீராடிப் பிரம்மசரிய விரதம் பூண்டு தங்கள் வாழ்வினைத் துறவு நிலைக்கு மாற்றி வந்தனர். ஒரு பெண் தெய்வம் இங்கே தங்கிக் கன்னி விரதம் மேற்கொண்டதை அடிப்படையாகக் கொண்டு பெண்களும் இந்த விரதத்தை மேற்கொண்டனர்" என்று அந்நூல் குறிப்பிடுகின்றது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏரோத்தனஸ் என்ற மேனாட்டு ஆசிரியரும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாலமி என்ற யவன ஆசிரியரும், தங்கள் வரலாற்று நூல்களில் கன்னியாகுமரியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். "கன்னியாகுமரியில் நீராடினால் பாவமெல்லாம் தீரும்" என்று மகாபாரதம் கூறுகின்றது. பாரதநாட்டுப் பல பகுதி மக்களும் குமரித் துறையிலே நீராடிச் சென்ற செய்தியைப் பண்டைய நூல்கள் பலவற்றில் நாம் காணலாம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் மாடல மறையோன் குமரித் துறையிலே நீராடித் திரும்பிய செய்தி காணப்படுகிறது. "மாமறை முதல்வன் மாடலன் என்போன், மா தவமுனிவன் மலைவலம் கொண்டு, குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து" எனக் கூறுவது சிலப்பதிகாரம். வாரணாசியிலிருந்து சாலி என்ற பார்ப்பனப் பெண்ணொருத்தி கால்நடையாகக் குமரித் துறை வந்தடைந்து, புனித நீராடி, தேவியை வணங்கித் தனது கற்பிழந்த பாவத்திலிருந்து விடுதலை பெற்றாள்" என்று மணிமேகலை தெரிவிக்கின்றது. "பார்ப்பனி சாலி காப்புக் கடை கழிந்து, கொண்டோற் பிழைத்த தண்டம் அஞ்சித் தென்றிசைக் குமரி ஆடி வருவோள்" என்பது மணிமேகலை. "குமரியாடிப் போந்தேன் சோறு தம்மின்" எனத் தொல்காப்பிய உரையும், "குண்டு நீர்க் குமரித் தெண்டிரையாடி" எனப் பெருங் கதையும், "சிந்தை நலிகின்ற திருநீர்க்குமரியாட" எனச் சீவகசிந்தாமணியும், குமரித் துறையைப் புனித நீராடும் ஒரு புண்ணியத் தலமாகக் குறிப்பிடுகின்றன.

இறைவன் விசுவநாதராகக் காசியிலும், அவரது சத்தியாம் பகவதி கன்னியாகுமரியிலும் நின்று அருளுகின்றனர். சிவனில்லையேல்

சக்தியில்லை, சக்தியில்லையேல், சிவனில்லை. இதனை உருவகப்படுத்தவே இந்து சமயத்தினர் காசியையும், கன்னியாகுமரியையும் சிறந்த புண்ணியத் தலங்களாகக் கருதுகின்றனர். இவ்வாறு சமயத் துறையில் வடக்கும், தெற்கும் பன்னெடுங்காலமாக இணைக்கப்பட்டுள்ளதை நாம் இங்குக் காணலாம். கன்னியாகுமரி கடற்கரையோர மணலில் அணுசக்திக்கு வேண்டிய தோரியம் என்னும் அரும்பொருள் காணப்படுவது கன்னியாகுமரி சக்தியின் இருப்பிடம்தான் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

கன்னியாகுமரியில் அமைந்துள்ள தேவி ஆலயம் பழமையும், பெருமையும் மிக்கது. பார்த்திபன் கன்னியாகுமரி வந்து தேவியைத் தரிசனம் செய்ததாக மகாபாரதம் கூறுகின்றது. இந்த ஆலயத்தின் தல புராணத்திலிருந்து பல அரிய செய்திகளை நாம் அறியலாம். இராமபிரான் ஆழ்கடல் கடந்து இலங்கை செல்வதற்கு ஏற்ற இடம் தேடிக் குமரிமுனை வந்து, தேவியின் அருள் பெற்றுத் திரும்பியதாகவும், அது முதல் குமரித் துறை ''ஆதி சேது'' எனப் பெயர் பெற்றதாகவும் தல புராணம் கூறுகின்றது.

அடலுடை யிராம னென்பா
    ழிகூ லிலங்கைக் கேகக்
கடலுடைச் சேது வொன்று
    கட்டிடக் கருத்தால் உன்னி
மடலவிழ் மாலைச் செங்கை
    மாதவக் கன்னிவாழும்
திடலுறு குமரியென்னும் தென்
    கடற்கரைக்கண் வந்தான்...
ஆங்குள இராம சேதுக் காதியாம்
    சேது மூலம் ஈங்கிது''

இவை தல புராணப் பாடல்கள். மேலும் குமரித் துறையிலே நீராடுவோர் ''ஆதிசேதோ கன்னியாகுமரிக்ஷேத்திர மாதுர் பிதுர் தீர்த்தே'' என சங்கல்ப்பம் செய்வதும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

இராமபிரான் கடல் கடந்து இலங்கை செல்ல மகேந்திர மலையின் உச்சியிலிருந்து நோக்கினார் என்றும், பின்னர் அம்மலையின் அருகிலுள்ள கடற்கரையை வந்தடைந்து அணைகட்டத் திட்டமிட்டார் என்றும் வால்மீகி இராமாயணம் கூறுகின்றது. மகேந்திரகிரியில் அடுத்துள்ள கடற்கரை குமரித் துறைதான் என்பதில் ஐயமில்லை. சேது அணை மலயபர்வதம் வரை நீண்டிருந்தது எனக் காளிதாசனின் ரகுவம்சம் கூறுகின்றது. வானரப் படைகள் அணை கட்டிய இடம் குமரித் துறைதான் என்பதைக் ''குரங்கு செய் கடற் குமரியம் பெருந்துறை'' என மணிமேகலை தெரிவிக்கிறது. இச்செய்திகளை அடிப்படையாகக் கொண்டு இராமபிரான் கட்டிய சேது அணை குமரி முதல் தனுஷ்கோடி வரை பரந்திருந்தது எனக் கருத இடமிருக்கிறது.

பாணாசுரனை அழிக்க இறைவன் தமது சத்தியைக் கன்னி பகவதியாக உருப்பெறச் செய்தான் என ஸ்தல புராணம் கூறுகின்றது. அழகின் உருவான தேவியைக் கண்ணுற்ற பாணாசுரன் அவர்மேல் மையல் கொண்டு தனது வலிமையால் கவர்ந்து செல்ல முடிவு செய்தான். தனது முடிவு ஒரு கன்னிப் பெண்ணாலே நிகழும் என்ற வரத்தின் நியதியை அவன் மறந்து, தேவியுடன் போரிடத் துணிந்தான். பராசக்தியான கன்னி பகவதி தனது வாளுடன் அரக்கனை எதிர்த்தாள். கடும் போர் மூண்டது. முடிவில் பாணாசுரன் தலை துண்டிக்கப்பட்டது. இந்தப் போரை நவராத்திரி விழாவின்போது சிறப்புற நடத்திக் காட்டுகின்றனர். ''பரிவேட்டை'' என்றழைக்கப்படும் இத்திருவிழா காண்போருக்கு மகிழ்ச்சியூட்டும் ஒரு நிகழ்ச்சியாகும். அறியாமையின் உருவம் பாணாசுரன். அறியாமையை வென்று அன்னை பராசக்தி ஞானாம்பிகையாக இங்கு நின்று நமக்கு அருள் புரிகின்றாள். இந்தத் தத்துவத்தில் எழுந்தது தான் பாணாசுரவதம்.

கன்னி பகவதியார் இறைவனைக் கணவனாக அடையத் தவமிருந்தாள். இறைவனும் அவர் வேண்டுகோளை ஏற்றுத் திருமணம் புரிய நாள் குறித்தார். மணவிழா ஏற்பாடுகளெல்லாம் நடந்தேறின. மணநாளும் வந்தது. ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் மணமகன் வந்து சேரவில்லை என்ற காரணத்தால் கோபங்கொண்ட தேவியாள், தமது ஏமாற்றத்தின் வேகத்தால், அங்கு வைத்திருந்த எல்லாப் பொருட்களையும் மணலாகப் போகும்படிச் சபித்தது மட்டுமின்றித் தாமும் கற்சிலையாகி நின்றுவிட்டாள். இவ்வாறு தேவியின் சாபத்தால் மாறிய பொருள்கள்தாம் இன்று கடலோரத்தில் பல நிறங்களில் காணப்படும் மணல்களாகும் என்று கூறுவர்.

கடலோரத்திலே நான்குபுறமும் மதில்களோடு, செவ்வக வடிவத்தில் பகவதியம்மனின் பேராலயம் அமைந்துள்ளது. மூன்று பிராகாரங்களைக் கொண்ட இந்த ஆலயத்தில் அம்மன் கிழக்கு நோக்கித் தவக்கோலத்திலே நின்று அருள்புரிகின்றாள். அம்மனின் திருவுருவச்சிலை சிற்பக் கலையின் சிறப்பெல்லாம் ஒன்று சேர்ந்து விளங்குகின்றது. தமது வலது கையில் உருத்திராக்க மணியேந்திக் காண்போர் உள்ளத்தைக் கவரும் புன்னகையுடன் நிற்கின்ற அம்மனின் தோற்றம் யாவரையும் இன்பத்திலாழ்த்தும். அம்மனின் திருமுகப் பொலிவு, அவரது எழில், உள்ளத் தூய்மை, நம்பால் கொண்டுள்ள கருணை இவற்றை எடுத்துக்காட்டுவதாகஅமைந்துள்ளது. இத்தகைய சிறப்புக்களெல்லாம் ஒன்று சேர்ந்து இலங்கும் இத்திருவுருவச் சிலையைச் சந்தன முழுக்காப்புச் சார்த்தி, அங்கமெல்லாம் நகை பூட்டி, வைரக் கிரீடத்தைத் தலையிலே அணிந்து, கழுத்திலே மலர் மாலை சூட்டிக் காணும் எவருடைய இதயமும் பக்திப் பரவசமடைந்து தெய்வீக உணர்வைப் பெறும். இக்காட்சி காண்போரின் நெஞ்சை விட்டு நீங்காத நினைவாக என்றுமே நிற்கின்றது.

கோயிலின் கிழக்கு வாயில் ஆண்டுதோறும் ஐந்து முறைதான் திறக்கப்படும். அம்மனின் மூக்கணியிலுள்ள பேரொளியைக் கடல் யாத்திரை

செய்வோர் கலங்கரை விளக்கென்று ஏமாந்து கப்பலைப் பாறையிலே கொண்டு மோதியதால் கடலை நோக்கி யமைந்துள்ள இவ்வாயில் எப்போதுமே அடைக்கப்பட்டுள்ளது என்று கூறுவர்

தமிழ் மூவேந்தர்களும் வணங்கிய தெய்வம் குமரியம்மன். சேர சோழ பாண்டியர்கள் அம்மனின் ஆலயத்தைப் போற்றி வந்துள்ளனர் என்பதை அங்குக் கிடைத்த கல்வெட்டுக்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. பாண்டியனைக் ''குமரிச் சேர்ப்பன்'' எனச் சூடாமணி நிகண்டு கூறுகின்றது. குமரியன்னையே அவர்களது குல தெய்வம் என்பதைத் ''தென்னவர்தம் குல தெய்வம் தென்குமரி'' என இக்கோயிலில் கிடைத்த கல்வெட்டிலிருந்து அறியலாம். ''இந்நாட்டுக் குமரியான கங்கை கொண்ட சோழபுரம்'' எனவரும் கல்வெட்டுத் தொடரால் கன்னியாகுமரி சோழரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என அறிய முடிகிறது. விக்கிரம சோழனுலா என்ற நூல் சோழ மன்னனை, ''குமரித் துறைவன்'' என அழைக்கின்றது. பகவதி அம்மன் ஆலயத்து அர்த்த மண்டபத் தூண்களில் இராசேந்திர சோழன் காலத்திய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

அம்மன் கோயிலின் வடக்கே அமைந்துள்ள குகநாதேஸ்வரம் என்ற கோயில் இராசராச சோழன் காலத்தில் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது என அங்குக் கிடைத்த கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகிறது. தமது தந்தையைப் பூசித்து வழிபட முருகப் பெருமான் இவ்வுலகிலே சிறந்த இடம் யாதென்று தேடி முக்கடலும் கூடி முழங்கும் குமரி முனையைத் தேர்ந்தெடுத்து அங்கே ஒரு சிவலிங்க உருவைத் தாபித்து வழிபட்டார் என்றும், அந்த ஈசுவரர் குகனை ஆண்ட காரணத்தால் 'குகனாண்ட ஈசர்'' என அழைக்கப்பட்டார் என்றும் கோயில் தல புராணம் கூறுகின்றது. இக்கோயிலில் கிடைத்த கல்வெட்டு கோயில் அமைந்துள்ள இடத்தை ''இராஜ ராஜப் பாண்டி நாட்டு உத்தம சோழ வள நாட்டுக் கழிக்குடி ராஜ ராஜேஸ்வரம்'' எனக் குறிப்பிடுகிறது.

முதல் பராந்தகச் சோழன் காலத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று இக்கோயிலில் கிடைத்ததாகத் திருவிதாங்கூர்க் கல்வெட்டுக்களைத் தொகுத்த கோபிநாத ராவ் தெரிவிக்கிறார். சரித்திரக் கண்கொண்டு நோக்கினால் இந்தக் கோயில் இராசராச சோழனால் புதுப்பிக்கப்பட்டது எனக் கொள்ளலாம். மேலும் கன்னியாகுமரியில் காந்தளூர்ச் சாலையைப் போன்ற ''இராஜராஜப் பெருஞ்சாலை'' என்ற ஒரு கல்வி நிலையம் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டிலேதான் கன்னியாகுமரி சேரவம்சத்து வாரிசான வேணாட்டு மன்னர்களுக்குச் சொந்தமாயிற்று. இவ்வாறு கன்னியாகுமரி மூவேந்தர்கள் கையிலும் மாறி மாறி இருந்து வந்தது என வரலாறு நமக்குத் தெரிவிக்கின்றது.

கொந்தளிக்கும் கடலின் நடுவே உள்ள 'ஸ்ரீபாத பாறை''யிலே குமரியம்மன் ஒற்றைக் காலில் தவமிருந்தனள் என்றும், அதன் அடையாளமாக இன்று இப்பாறையிலே காணப்படும் பாதச் சுவடுகள் ஆதாரம் என்றும் கூறுவர். இங்கு மணிமேகலை கூறும் ''வடமொழியாட்டி மறைமுறை எய்திக்குமரி பாதம் கொள்கையின் வணங்கி'' என்ற செய்தியும் நினைவு கூரத்தக்கது. பகவதியம்மன் ஆலயத்திலிருந்து இப்பாறையில் கார்த்திகைத் தீபம் ஏற்றும் வழக்கம் தொன்று தொட்டு இன்றும் வழக்கில் உள்ளது. புத்தர் போதி மரத்தடியில் ஞானம் பெற்றது போல் 1892-ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் இந்தப் புனிதமான ''ஸ்ரீபாத பாறை'' யிலே ஞானம் பெற்றார். அது முதல் இப்பாறை விவேகானந்தர் பாறை என அழைக்கப்படுவதாயிற்று. இன்று இப்பாறையில் கம்பீரமாகக் காட்சி தரும் விவேகானந்தர் நினைவுச் சின்னம் தமிழகத்துக் கலைஞர்களின் திறன், அன்றுபோல் இன்றும் சிறப்புடன் திகழ்கின்றது என்பதை உணர வைக்கிறது.

காந்தியண்ணல் குமரித் துறையிலே நீராடி ''முக்கடலும் கூடும் இடத்தை இங்கின்றி வேறெங்கும் காணமுடியாது. புனித நீரான குமரித் துறையைச் சூழ்ந்துள்ள கடல் நீரும் குமரியம்மனைப் போல் கன்னிப் பெண்ணாகவே இருக்கிறது. காரணம்? இங்குக் கப்பல் வருவது கிடையாது'' என நகைச்சுவையோடு கூறிச் சென்றார்.

கடற்கரையோரத்திலே காந்தியண்ணலின் நினைவுச் சின்னம் கம்பீரமாகக் காட்சி தருகிறது. அதனை யடுத்து விவேகானந்தரும், ஆதிசங்கரரும் தனித் தனியே கோயில் கொண்டுள்ளனர். இவ்வாறு குமரியம் பெருந்துறை இந்து சமயத்தாரின் புண்ணியத்தலம் மட்டுமன்றி, இந்தியத் தாயின் தவப் புதல்வர்களது நினைவுச் சின்னங்களைக் கொண்ட ஒரு திவ்விய தலமாகவும் திகழ்கின்றது.

# அறஞ்செய விரும்பு

(முன்னாள்) நீதிபதி திரு. R. சதாசிவம், M.A., M.L.

158612

'அறஞ்செய விரும்பு' என்று தமிழ் மொழியின் முதல் எழுத்துடன் தொடங்கிப் பல பெரிய நூல்களின் நீதிகளையும், கருத்துக்களையும் அனைவரும் அறியும்படி 'ஆத்திச்சூடி' என்னும் அறநூலை ஔவையார் அருளி இருக்கிறார். அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் கொண்ட திருக்குறளை ஒரு சிறந்த அறநூல் என்கிறோம். அறம் என்ற பதத்தின் கருத்தைத் திருக்குறள் வாயிலாகவே அறியலாம்.

''அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது''

என்னும் குறள், அறத்தின் தத்துவத்தை நன்கு புலப்படுத்துகிறது. அறம், பொருள், இன்பம் எனப்படும் மூன்றனுள், அறத்தை முன்னர்ப் பிரித்தமையால், ஏனைய பொருளும், இன்பமும் பிறவெனப்பட்டன என்பது பரிமேலழகர் கருத்து. அறக்கடலாகிய இறைவன் திருவருளால் தான் பொருட்கடலையும், இன்பக்கடலையும் கடக்க முடியும் என்பது அவர் கண்ட மெய்ப்பொருள்.

தருமம் என்னும் சமுத்திரமாகவுள்ள பரமேசுவரன் பாதத் துணையில்லாதார். பாவக் கடலை நீந்த மாட்டார் என்பது பரிதியார் உரை. சிவபுராணத்தில் மாணிக்கவாசகர் ''தன்னை, மறைந்திட மூடிய மாயஇருளை அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால்கட்டிப் புறம் தோல் போர்த்து எங்கும் புழுவழுக்கு மூடி மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய'' அதன் விளைவான 'பந்தபாசங்களின்' தொடர்பை அறச்செய்து காத்தருளுகின்ற இறைவனை வழிபடுகிறார். அறம் என்பதற்கு 'அறுத்தல்' அதாவது ஒழுங்குபடுத்தல் என்னும் கருத்து இதிலிருந்து புலனாகிறது. ஒவ்வொருவரிடமும் நல்லியல்பு, கெட்ட இயல்பு ஆகிய இரண்டுமுண்டு. ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவையில், வையத்து வாழ்பவர்கள் தீக்குறளை ஓதாமல், செய்யாதன செய்யாமல், ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி உய்யுமாறெண்ண வேண்டுமென்கிறார். ஒருவன் செய்ய வேண்டியது அறம்; விடவேண்டியது தீச்செயல்கள். 'அறத்தால் வருவது இன்பம்' என்பது வள்ளுவர் வாக்கு. எவனொருவன் அறவாழ்வைப்பின்பற்றுகிறானோ அவனைத் தெய்வீக மனிதன் என்று எல்லோரும் பாராட்டுவார்கள்.

அறத்தால் வருவது புண்ணியம், மறத்தால் வருவது பாவம் என்பது நமது இந்து மதத்தினரின் பொதுக் கொள்கை. ஆங்கிலத்தில் அறம், தருமம், புண்ணியம் என்கிற பதங்களுக்கு நேரிடைப் பதங்கள் கிடையாது. இராமலிங்க சுவாமிகள் தாமியற்றிய 'மனுமுறை வாசகத்தில்' அநேக தீச்செயல்களைச் செய்தேனோ என்று புலம்பி, 'என்ன பாவம் செய்தேனோ' என்று முடிக்கிறார். வீண் விவகாரம் துவக்கும் தீச்செயலைக் குறிப்பிட்டு, 'வலிய வழக்கிட்டு மானக்கெடுத்தேனோ? என்கிறார். அரசாங்கத்தார் வரம்பில்லா வரி விதித்து மக்களுக்கு இன்னல் விளைத்தலைக் குறிப்பிட்டு, 'குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ?' என்கிறார். உணவுப் பொருள்களில் கலப்படம் செய்து வாழ்க்கை நடத்தும் வணிகர்கள் குற்றத்தைக் குறித்து, 'கல்லும், நெல்லும் கலந்து விற்றேனோ?' என்கிறார். வள்ளலார் சென்ற நூற்றாண்டில் குறிப்பிட்ட தீச்செயல்கள் தற்காலத்திலும் தீச்செயல்களே... அவர் அவைகளைப் பாவச் செயல்களாகக் குறிப்பிட்டிருப்பது இச்சந்தர்ப்பத்தில் கவனிக்கத்தக்கது.

நமது மனப்போக்கை யொட்டி, தீய செயல்களை வகுப்பதில் காமம், குரோதம், மதம், லோபம், மோகம், மாச்சரியம் என்று தீய மன நிலைகளைக் குறிப்பிடுகிறோம்.

''அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்''

என்னும் குறள் மேற்சொன்ன கருத்தில் அமைந்தது. கொலை, களவு, கள்ளுண்ணல், காமம், குரு நிந்தை என்பவைகளைப் பஞ்சமா பாவங்களாகக் கூறும்பொழுது, ஏனைய தீயவொழுக்கங்களனைத்தும் அவைகளிலேயே அடங்கியிருக்கின்றன என்பது சான்றோர் கருத்து. நல்லொழுக்கமே அறத்திற்கு வித்தாகுமென்பதை வள்ளுவர் அநேக குறள்களில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

'அற நெறி' என்று சொல்லப்படுவது யாதெனில், எவ்வுயிரையும் கொல்லாமல் மேற்கொள்ளும் வழிதான். 'களவு' என்னும் அஞ்ஞானத்தைக் கொள்ளுதல், அறமாகிய நல்வழியை விரும்புபவர்களிடத்தில் இல்லை. கள்

ளுண்டல் என்னும் வெறுக்கத்தக்க பெருங்குற்றத்தையுடையவர்க்கு, 'நாணம்' என்று சொல்லப்படுகிற நல்லவன் புறங்காட்டிப் போய்விடுவான். காமம், வெகுளி, மயக்கம் என்னும் இவைகளின் பெயர்கெடப் பிறவி நோயும் கெடும்.

குரு நிந்தையைத் தனிப்படச் சொல்லாவிடினும் 'செய்ந் நன்றியறிதல்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் அக்குற்றத்தைக் கண்டித்திருக்கிறுர். எத்தகைய தீமையைச் செய்தவர்களுக்கும் உய்தி உண்டு. செய்நன்றியை மறந்தவர்கட்கு மட்டும் உய்தி இல்லை என்ற வள்ளுவர் வாக்கு குரு நிந்தை செய்பவனுக்குப் பலிக்குமென்பதில் ஐயமில்லை.

குமரகுருபர அடிகள் தாமியற்றிய ''நீதி நெறி விளக்கம்'' என்னும் நூலில் கல்வி, அறம், பொருள், இன்பம், வீடும் பயக்கும் என்கிறுர். கல்வி அறவாழ்விற்குத் துணை புரிய வேண்டுமென்றுல் கற்க வேண்டிய நூல்களைக் குற்றமில்லாமல் கற்க வேண்டும். அப்படிக் கற்றபின், அதற்குத் தக்கவாறு ஒழுக்க நெறியில் நிற்க வேண்டும். ஆடம்பரக் கல்வியால் யாதொரு பயனுமில்லை. கற்றும் அறிவில்லாதவர்களைவிட, கல்லாதவர்களே நல்லவர்கள் என்று தாயுமான சுவாமிகள் வற்புறுத்திக் கூறுகிறுர். கற்ற ஒருவன் கடவுளுடைய திருவடிகளை வணங்காவிடின், அவனுக்குப் பல நூல்களைப் படித்ததனுல் உண்டாகும் பயன் ஒன்றுமில்லை என்பது வள்ளுவர் வாக்கு.

பண்டைக் காலத்தில் சமயம் வேறு, சட்டம் வேறு என்று பிரிக்கப்படவில்லை. அறநெறி வேறு, சட்டநெறி வேறு என்னும் கருத்து நாளடைவில்தான் உலகத்தில் பலவிடங்களிலும் பரவியது என்பதில் யாதொரு ஐயமுமில்லை. மனுதர்ம சாஸ்திரம், யூதர் மூதாதையன் மோசஸ் தொகுத்த சட்டம் முதலிய நூல்களை ஆராய்ந்து பார்த்தால், மேற்சொன்ன கருத்து நன்கு புலனுகும். அற விதிகளையும், சமய விதிகளையும், சட்ட விதிகளையும், யாதொரு வேறுபாடுமின்றி, பண்டையோர் ஏற்று ஒழுகிவந்தனர். நாளடைவில், சமய வாழ்க்கை வேறு, சமூக வாழ்க்கை வேறு என்ற கொள்கை பரவப் பரவ, சமய விதிகளுக்கும், சட்ட விதிகளுக்குமுள்ள தொடர்பு அல்லது சம்பந்தம் என்ன என்ற கேள்வியைப் பற்றிச் சட்ட வல்லுநர்களிடையே கருத்து வேறுபாடு வளர்ந்தது.

சமூகமில்லையெனில் சட்டமில்லை. 'ராபின்சன் குருசோ' என்னும் ஆங்கிலக் கதையில், கதாநாயகன் கடலில் கப்பலில் செல்லும் பொழுது, புயலால் கப்பல் மூழ்க, அவன் உயிர் தப்பி ஒரு மனித சஞ்சாரமில்லாத தீவையடைந்து வசிக்க நேரிட்டது. அவன், அங்குத் தன் உணவுக்குக் காட்டு மிருகங்களை வேட்டையாடிப் புசித்தான். அந்தத் தீவுக்கு வந்த மற்றொரு மனிதனிடம் சண்டை செய்து அவனைத் தனக்கு அடிமை ஆளாக ஆக்கிக் கொண்டான். அவன் செயல்களைக் கட்டுப்படுத்தச் சமுதாயமில்லை, சட்டமுமில்லை. அதனுல் அவன் சட்டப்படி குற்றமோ, தீங்கோ, பிறர் உரிமைக்கு ஊறு விளைவித்ததாகவோ கருதுவதற்கில்லை. ஆனுல் அவன் தன் மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்தால், அவனுக்கு நல்லொழுக்கமில்லை. அறவழியைப் பின்பற்றவில்லை என்று யாரும் சொல்லுவார்கள். ஒரு மனிதனின் தனிப்பட்ட குணுதிசயத்தையும், மனப்போக்கையும், அவனுடைய அறநெறியால் உணரலாம். வனத்தில் வசித்தால் கூட முனிவர்கள் மிகவும் உன்னதமான அறநெறியைப் பின்பற்றுகிறுர்கள். நல்ல சமூக வாழ்க்கைக்குத் தனி மனிதனின் நன்னடத்தை இன்றியமையாதது என்பது பகுத்தறிவு படைத்த ஒவ்வொரு மனிதனுக்கும் தெரிந்த விஷயம். 'ஊருடன் ஒத்துவாழ்' என்னும் ஔவை வாக்கு நமது சட்டங்களின் அடிப்படைக் கருத்தாக அமைந்திருக்கிறது.

குற்ற மனமிருந்தால்தான் ஒருவனது குற்றச்செயல் குற்றமாகிறது என்று குற்றஇயல் சட்டத்தில் ஒரு முக்கியக் கருத்து. பழி பாவத்துக்கு அஞ்சாத மனத்தைக் குற்ற மனமென்று விளக்கம் கொண்டால், குற்ற இயல் சட்டம் அறநெறியை அடிப்படையாகக் கொண்டது என்ற கொள்கைக்குச் சான்ருகும். ஆனுல், குற்ற இயல் சட்டத்தில் 'குற்ற மனம்' என்பதற்குச் சட்டபூர்வமான பொருள் வேறு. சமூகப் பொது நலத்திற்காகச் சில சந்தர்ப்பங்களில் குற்ற மனமில்லாவிடினும், சில செயல்கள் குற்றங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது. உணவுப் பொருள்களில் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் வேருெரு பொருளைக் கலத்தல் என்னும் குற்றம் செய்பவன் குற்ற மனத்தோடு செய்தானு என்று சட்டம் ஆராய்ச்சிக்கு இடம் கொடுப்பதில்லை. கொலை, களவு, முதலிய தீய செயல்கள் குற்றங்களாகத் தண்டிக்கப்படுகின்றன. ஆனுல், சமூகத்திற்கோ, தனி நபருக்கோ, தீங்கு விளைவிக்கும் செயல்களை எல்லாம் குற்றங்களாகச் செய்வது உசிதமல்ல. எந்தத் தீய செயல்களைக் குற்றங்களாக்குவது என்பது, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின் அங்கத்தினர்கள் மீது ஆலோசித்து ஆற்றும் கடமை.

பிறருக்குத் தீங்குவிளையாத வகையில் ஒருவன் தன் பொருளையும், உரிமையையும் அனுபவிக்க வேண்டும் என்பது தீங்கியல் சட்டத்தில் ஒரு அடிப்படைக் கருத்து. 'பிறருக்கு நன்மை செய்' என்னும் உயர்ந்த அறக்கருத்தைத் தீங்கியல் சட்டத்திற்கோ, இதர சட்டங்களுக்கோ ஒரு அடிப்படைக் கொள்கையாக அமைத்துக் கொள்ள முடியாது. பொதுவாகப் பார்த்தால், தீங்கியல் சட்டத்தில் முக்கியக் கொள்கைகள், அறக் கருத்துக்களைப் பின்பற்றி அமைந்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆங்கிலேயரின் தீங்கியல் சட்டம் முதலிய சட்டங்கள் நமது நாட்டில் வழங்கப்பட்டபொழுது, அவைகள் நீதி, நேர்மை, தூய மனச்சான்று என்னும் அடிப்படைக் கருத்துடன் வழங்கப்பட்டன. சாதாரணமாக, 'குற்றமிருந்தால் தான் பொறுப்பு உண்டு' என்பது தீங்கியல் சட்டத்தில் ஒரு பொதுக் கருத்து. ஆனுல், சமூக நலத்திற்காகச் சில சந்தர்ப்பங்களில் ஒருவன் செயலில் குற்றமில்லாவிடினும், பிற

ருக்குத் தீங்கு விளைவிப்பதினல் 'கடும் பொறுப்பு' விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கடும் பொறுப்பு விதி, அபாயச் செயல்களுக்கே விதிக்கப்பட்டிருக்கிறது. வன விலங்குகள், வெடி மருந்துகள், முதலிய அபாயகரமான பொருள்களை வைத்திருப்பவர்கள், பிறருக்கு அவைகளால் விளையும் தீங்கிற்குக் கடும் பொறுப்புக்குள்ளாக நேரிடும். 'பிறருக்கு நன்மை செய்' என்கிற அறக் கருத்தைத் தீங்கியல் சட்டத்திலோ, மற்ற சட்டங்களிலோ, புகுத்துவதற்கில்லை. எனினும், 'பிறருக்குத் தீங்கு செய்யாதே' என்னும் அறக்கொள்கை தீங்கியல் சட்டத்தில் பலவிடங்களில் காணப்படுகிறது. ஆனல், தீங்கியல் சட்டம் முழுதுமாக, அற விதிகளை யொட்டியது என்று சொல்லுவதற்கில்லை. தீங்கு விளைவிக்கும் எல்லாச் செயல்களுக்கும் தீர்வு உண்டு என்ற முறையில் தீங்கியல் சட்டம் அமையவில்லை. ஒருவனுடைய சட்ட பூர்வமான உரிமைக்கு, ஊறு விளைத்தால் தான், தீங்கியல் சட்டத்தில்கூட தீர்வு உண்டு. அடுத்த வீட்டுக்காரன் தன் நிலத்தை வாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன், அவனுக்குக் கேடு விளைவிக்கும் வகையில், தன் நிலத்தை ஒருவன் அனுபவிப்பது அறச்செயல் இல்லாவிடினும், அது தீங்கியல் சட்டத்தின் வரம்பில் வரும் தீங்கல்ல.

அறநெறியை வாழ்க்கை நெறியாகப் பின்பற்றுபவர்கள் சட்ட விதிகளுக்கு மாருக நடக்க இயலாது. தன் நலத்திற்கெனச் சட்ட விதிகளை மீறுபவர்கள், அறநெறியைப் பின்பற்றுவது கடினம். நமது குடியரசு உன்ன நிலையை அடைவதற்கு, நமது வாழ்க்கை, அறநெறியில் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்.

# திருமால் இருஞ்சோலை

செஞ்சொற் கவிகாள்! உயிர்காத் தாட்செய்மின்! திருமால் இருஞ்சோலை
வஞ்சக் கள்வன் மாமாயன் மாயக் கவியாய் வந்து,என்றன்
நெஞ்சும் உயிரும் உள்கலந்து நின்ருர் அறியா வண்ணம்,என்
நெஞ்சும் உயிரும் அவையுண்டு தானே யாகி நிறைந்தானே! (1)

தானே யாகி நிறைந்தெல்லா உலகும் உயிரும் தானேயாய்
தானே யான்என் பானுகித் தன்னைத் தானே துதித்து,எனக்குத்
தேனே பாலே கன்னலே அமுதே திருமால் இருஞ்சோலைக்
கோனே யாகி நின்ருெழிந்தான்; என்னை முற்றும் உயிருண்டே! (2)

நண்ணு அசுரர் நலிவெய்த, நல்ல அமரர் பொலிவெய்த,
எண்ணு தனகள் எண்ணும்நன் முனிவர் இன்பம் தலைசிறப்பப்,
பண்ணர் பாடல் இன்கவிகள் யானய்த் தன்னைத் தான்பாடித்,
தென்ன என்னும் என்அம்மான்! திருமா லிருஞ்சோ லையானே (3)

மங்க ஒட்டுன் மாமாயை! திருமா லிருஞ்சோலை மேய,
நங்கள் கோனே! யானே நீயாகி என்னை அளித்தானே,
பொங்கைம் புலனும் பொறிஐந்தும் கருமேந் திரியம் ஐம்பூதம்,
இங்கிவ் வுயிரேய் பிரகிருதி மானங் கார மனங்களே (4)

மான்ஆங் கார மனங்கெட ஐவர் வன்கையர் மங்கத்,
தான்ஆங் கார மாய்ப்புக்குத் தானே தானே ஆனனைத்,
தேனங் காரப் பொழில் குருகூர்ச் சடகோ பன்சொல் ஆயிரத்துள்,
மானங் காரத் திவைபத்தும் திருமா லிருஞ்சோலை மலைக்கே (5)

—நம்மாழ்வார்.

# காளிதாசன் உவமையில் குமரன்

'மும்மொழிக் கொண்டல்'
[திரு. பே. திருஞானசம்பந்தம், M.A., L.T.,]

சமஸ்கிருத இலக்கிய வானில் முழுமதியென ஒளிவிடும் உலக மகாகவிஞனை காளிதாசன் ஒரு பெரும்சிவபக்தன் என்பது, அவன் எழுதிய காவியங்களிலும் நாடகங்களிலும் அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப்பாக்களிலிருந்து தெளிவாகும். அவன் சிவகுமாரனை கார்த்திகேயனிடத்தில் மிகுந்த ஈடுபாடுகொண்டவன் என்பதற்குக் குமாரசம்பவம் என்ற பெயரில் அவன் எழுதியுள்ள காவியமே சான்று பகரும்.

அவன் எழுதிய மற்றொரு தலைசிறந்த சமஸ்கிருத காவியம் இரகுவம்சம் என்பதாகும். அதில் இராமனுடைய முன்னோர்களைப்பற்றியும் பின் தோன்றல்களைப்பற்றியும் காவியச் சுவை நனிசொட்டச் சொட்டச் சொல்லோவியங்களாக வரைந்திருக்கிறான். இரகுவம்சத் தோன்றல்களின் சிறப்பை வருணிக்க வேண்டிய சமயங்களில், குமாரன், கவிஞனின் மனக் கண்முன் வந்து நின்று விடுகின்றான். அவன் எடுத்துக் கொண்ட கதாநாயகனுக்கேற்பப் பல கோணங்களில் அவன் சரவணபவனாகவும், குகனாகவும், சண்முகனாகவும் தோற்றமளிக்கின்றான். அவ்வச் சூழ்நிலைகளில் கவிஞன் எப்படி, கந்தனை-கார்த்திகேயனை-சிவன் மைந்தனைக் கொண்டுவந்து நிறுத்துகிறான் என்பதைப் பார்ப்போம்.

'உவமையில் ஒப்பற்றவன் காளிதாசன்' என்பது கவியுலக வழக்கு. ஒருசில சான்றுகளை, எடுத்துக்கொண்ட தலைப்பின்கீழ் ஆராய்வோம்.

இரகுவம்சத்தின் இரண்டாவது சருக்கத்தில் ஒரு காட்சி, திலீப மாமன்னன் வசிஷ்ட குருவை அடைந்து புத்திரப் பேறில்லாத தனக்கு அப்பேற்றினை அருளவேண்டுகிறான். வசிஷ்டரும் தனது பசுவிற்குப் பணிவிடை செய்யச் சொல்கிறார். ஒருநாள் பசுவுடன் காட்டு வழியே அதை ஓட்டிச் செல்லும்போது ஒரு சிங்கம் எதிரே தோன்றுகிறது; வாய்திறந்து பேசுகிறது. அப்பசுவைத் தான் உண்ணப் போவதாகச் சொல்கிறது. அப்படிச் சொல்லும்போது, 'தான் சிவ கணத்தில் ஒருவனான கும்போதரன்' என்றும், பக்கத்திலுள்ள தேவதாரு மரத்திடத்தில் சிவனுக்குப் புத்திர வாத்சல்யம் உண்டென்றும், சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் கந்தனிடத்தில் எவ்வளவு அன்பு உண்டோ அதற்கிணையான அன்பை இம்மரத்திடத்தில் அவர்கள் செலுத்துகின்றனர் என்றும், ஒருமுறை ஒரு காட்டு யானை அம்மரத்தின்மீது உரசி மேற்பட்டையைப் பெயர்த்தபோது, அசுர பாணங்களால் புண்பட்ட சேனாநீ (தேவசேனைத் தலைவன்) யைக் கண்டு எப்படிக் கலங்குவாளோ, அப்படிக் கலங்கினாள் பார்வதி' என்றும் கவிவருணிக்கிறார்.

சிங்கத்திடம் பசுவுக்குப் பதில் தன்னை உணவாக அர்ப்பணிக்கிறான் திலீபன். அவனது பக்தியை மெச்சிப் பாராட்டி மறைகிறது சிங்கம். நாளடைவில் சுதட்சிணை கரு தரிக்கிறாள். 'அக்கரு எதுபோல் இருக்கிறது? ஈசனின் தேஜசான இறைவனின் தீப்பொறிகள் ஆறும் குளிர்ந்த புனிதமான கங்கை நீரில் சேர்ப்பிக்கப்பட்டபோது எப்படி இருந்ததோ, அப்படி இப்புனிதவதியின் கருவில் திருவாய் இருந்தானும் பிறக்கப்போகிற ரகு' என்று கவிஞன் வருணிக்கிறான். அதே சருக்கத்தின் முடிவில் திலீபனுக்கும் சுதட்சிணைக்கும் பிறந்த ரகுவின் பெயரைத் தாங்கிய இவ்வம்சமே ரகுவம்சம் என்று கொண்டாடப்படுகிறது. இவர்கள் புத்திரப்பேற்றினால் பெற்ற இன்பம் எத்தகையது என்பதை மூன்றாவது சருக்கத்தில் கூறும்போது, உமையும் இடபக்கொடியோனும் சரஜன்மாவை (சரவணனை)ப் பெற்றபோது எத்தனை இன்பத்தை நுகர்ந்தார்களோ அதற்கொப்பான இன்பத்தைத் துய்த்தார்கள் என்கிறான்.

ரகு, குமரனாக வளர்கிறான். அனைவரையும் வென்று போரில் வெற்றிக்கொடி நாட்டுகிறான். இந்திரனோடும் போரிடுகிறான். அப்போரில் அவன் காட்டிய வீரச்செயல் சிவகுமாரனின் வீரச்செயலுக்கு ஒப்பானதென மூன்றாவது சருக்கத்தில் குறிப்பிடுகிறான் கவிஞன். குமார விக்கிரமன் என்று போற்றப்படுகிறான் ரகு.

காலப்போக்கில் ரகுவிற்கு ஒரு புதல்வன் பிறக்கிறான். பிராம்ம முகூர்த்தத்தில் பிறந்த அவனுக்கு அஜன் எனப் பெயரிடுகின்றனர். அவனும் சிவகுமாரனை ஒத்தவன் என்றே குறிப்பிடுகிறான் கவிஞன். காளிதாசனுக்கு வேறொருவனை உவமைகாட்டத் தோன்றவில்லை. இது ஐந்தாவது வருகின்ற உவமை.

ஆறாவது சருக்கத்தில் இந்துமதி சுயம்வரம் வருணிக்கப்படுகிறது. விதர்ப்ப வேந்தனான போஜராஜன், அஜன் அமருவதற்காக ஓர் ஆசனத்தைத் தருகிறான். அவ்வாசனம் ரத்தினங்கள் பதிக்கப்பெற்றும், நீலம், மஞ்சள் முதலான வர்ணங்களோடு கூடிய ரத்தினக்

கம்பளத்தால் அலங்கரிக்கப்பட்டும் இருக்கிறது. அதில் கம்பீரமாக வீற்றிருக்கிறுன் அஜன். இக் காட்சி கவி காளிதாசனின் மனத்திரையிலே மற்ருெரு காட்சியைத் தோற்றுவிக்கிறது. அக் காட்சி மயில்மீதிவர்ந்து எண்டிக்கும் விளை யாடும் நாதனுன குகன் அல்லது வேறு யாராக இருக்கமுடியும் குமாரதாசனுன காளிதாச னுக்கு? அவன் அகத்திரையில் பச்சை மயில் வாகனமும் திண்டோளும், அருள் விழியும், திருமுடியும் தோன்றுகின்றது. வண்ணத் தோகையை விரித்தாடும் மயூரத்தின் முதுகில் அமர்ந்துள்ள குகனை இங்கே உவமை காட்டு கிறுன் கவிஞன்.

தசரதன் பட்டத்திற்கு வருகிறுன். ரகு வம்சத்தினரின் ஆட்சி மேலும் இப்போது சிறப்பெய்துகிறது. கிரௌஞ்ச கிரியைத் துளைத்த குமாரனின் பராக்கிரமத்தை நினைவு கூர்கிறுன் கவிஞன். தசரதனின் பராக்கிர மத்தை எண்ணும்போது இயல்புதானே. பல் வேறு திசைகளிலும் தடையின்றிச் செல்லும் ரதத்தை உடையவனன்றே தசரதன்.

வால்மீகி விரித்த ராமனின் கதையை ரகுவம்சத்தில் ஒருசில சருக்கங்களில் சுவை மிகச் சுருக்கிக் கூறுகிறுன் காளிதாசன். ராம னும் பரசுராமனும் சந்திக்கிற கட்டம். அந்திப் பொழுதில் எழுகின்ற முழுமதி போலவும், மேலைத் திசையில் மறையும் கதிரவன் போல வும் இவர்கள் முறையே காட்சியளிக்கின்றனர். அருளும் மருளும் போன்றவர்கள், பொறையும் பொருமையும் போன்றவர்கள் இவ்விருவரும். வீரமும் சாந்தமும் ஒருங்கியைந்து காணப்படு கின்றன. இராமச்சந்திர மூர்த்தியிடத்தில், அரசூனு (சிவகுமாரனிடத்தில்) வினிடத்தில் தீமையை அழிக்கும் ஆற்றலும் பகைவனுக் கருளும் பெற்றியும் அமைந்து கிடப்பது போல என்கிறுன் கவிஞன்.

இராமனுடைய குணநலன்களைக் கவி நயந்து போற்றுகிறுன். எண்ணிலடங்கா அவனது நற் குணங்களில் பெற்ருேரைப் போற்றும் பக்தி யும் ஒன்று. சாதாரணக் குடிமகன் ஒருவனுக்குத் தாய் ஒருத்திதான். ஆனல் இராமனுக்கோ தச ரதனின் மனைவிமார் அனைவருமே தாய்மார்கள் தான். தன்னைப் பெற்றெடுத்த தாய் என்றும் தம்பியருடைய தாய் என்றும் வேறுபாட்டைக் கண்டான் இல்லை. இதற்கு உவமை கூற வேண்டுமென்று எண்ணிய காளிதாசனுக்கு எளி தாகக் கிடைத்துவிடுகிறது ஓர் உவமை. என் றென்றும் அவன் உள்ளத்திலே குடிகொண்டி ருக்கும் கார்த்திகேயன் அவனுக்குக் காட்சி யளிக்கின்ருன். சரவணப்பொய்கையில் சிதப் பகீரதி சென்னியிற் கொண்டுய்த்த ஆறு தீப் பொறிகளும், ஆறு குழந்தைகளாகி, அறுமீன் (கிருத்திகைமாதர்) முலையுண்டு, விளையாடிய ஆறுமுகன் (ஷடானனன்) அல்லது வேறு யார் கவிஞனின் உள்ளத்தில் இங்குத் தோன்ற முடியும்? இக்கருத்தைக் காண்கிருேம் பதினுன் காவது சருக்கத்தில்.

இராமனுக்குப் பின் வந்த ரகுவம்சவேந்தர் களுள் அதிதி என்பான் பலவகைகளில் சிறப் பெய்தியவன். அவனது நல்லாட்சியின் பய னுய்ப் பூமி பல செல்வங்களைத் தந்தாள். சமா தானம், போர் முதலான அறுவகைக் குணங் களையும் அமைச்சு, படைமுதலான பலன்களை யும் தக்கவாறு பயன்படுத்தும் முறையினை நன் கறிந்தவன் அரசன் அதிதி. இத்தகைய அறிவும் ஆற்றலும் படைத்தவன் வேறு எவரேனும் உண்டா? பூவுலகில் எந்த வேந்தனுக்கும் இந்த அறிவும் ஆற்றலும் இருந்தாலன்ருே உவமை யாகக் கூறலாம். இவ்வகையில் உவமையாக எடுத்துக் கூறத்தக்கவன் ஒருவனே. அவன் தான் ஷண்முகன். தாரகன் மாய, வீர வடி வேல் விடுத்தவனும், சூரனைச் சோதித்து வருக என்று விசய வீரனைத் தூதாக விடுத்தவனும், சிங்கமுகனைவென்று வாகை முடித்தவனும், சூருடலங்கீண்ட சுடர் வேலவனுமான அவன் ஒருவனே கவிஞன் கருத்தில் தோன்றுகிறுன்.

கோலசநாட்டு வேந்தர்களின் பெருமையை விளக்க வந்த கவிகுல திலகன் காளிதாசன், உவமையைக் கையாள்வதில் உவமையிலாக் கவிஞன் என்று பெரும்புகழ் பெற்ற புலவன் காளிதாசன். உலகக் கவிஞன், சிவகுமாரனைக் கந்தன், ஈசனின் தேஜஸ், சரஜன்மா, குமாரன், குகன், நகரந்தரகரன் (கிரௌஞ்சத்தைப் பிளந்தவன்) ஹரசூனு (சிவகுமாரன்) சமூனும் நேதா (தானைத் தலைவன்) ஷண்முகன் என் றெல்லாம் அழைத்து, பொன்னில் மணியைப் பதிப்பதுபோல் முத்துக்குமரனை உவமையில் வைத்துக் காட்டும்போது, காளிதாசனைக் குமாரதாசன் என்று ஏன் நாம் அழைக்கக் கூடாது?

◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆

## இந்து சமயக் கோட்பாடுகள்......

"இந்துசமயத்தின் கோட்பாடுகள் யாவையோவெனில்; காணப்பட்ட இவ்வுலகினுக்குக் காணப்படாத முழுமுதற் கடவுள் முதலாய் உள்ளதென்பதும், அஃது அருவமாயும் உருவமாயும் இவையல்லவாயும் இருக்கு மென்பதும், அஃது என்றும் உளதாய் அறிவாய் இன்பமாய் இருப்பதாகலிற் 'சச்சிதாநந்தம்' எனப்படும் என்பதும், அஃது அருவமாய் வழுத்தப்படுதலே யன்றியும் எல்லார்க்கும் வணங்குதற்கு எளிதான உருவத்திரு மேனியுடன் விக்கிரகத்தின்கண்ணும் வைத்து வழிபடப்படுமென்பதும், அதனை அறிந்து வழிபடுதற்குரிய உயிர்கள் அறிவுடன் என்றுமுள்ள பொருள்களாய் எண்ணிறந்தனவாய் இருக்குமெனபதும், இவ்வுயிர்கள் தொன்று தொட்டே அறியாமை வயப்பட்டிருக்கின்றன வாகலின் இவைகள் அவ்விறைவனை வழிபடுமாற்ருல் தூய்மை எய்தி அவனேடு ஒற்றுமைப்பட்டு இன்பநுகரு மென்பதும், இவைகள் அறிவு முதிரமுதிர ஒருபிறப்பைவிட்டு மற்ருெரு பிறவியிற் செல்லுமென்பதும், இங்ஙனம் இவற்றிற்குரிய பிறவிகள் பலவாய் எண்ணிறந்தனவாகு மென்பதும், இவ்வுயிர்கள் முற்பிறவியிற் செய்தவினை பிற்பிறவியில் வந்து அவைகளால் நுகரப்படுமென்பதும், இவ்வுயிர்களுக்கு உடம்பாயும் கருவிகளாயும் இடங்களாயும் நுகர்பொருளாயுமிருந்து பயன்படுகின்ற அறிவில் லாத சடப்பொருள் என்றும் உளதாமென்பதும், இதற்கு உரிய கோட்பாடுகளாம். இக் கோட்பாடுகளனைத்தும் இவ்விந்திய நாடெங்கும் தழுவப்பட்டு வருகின்றன."

*—அருட்டிரு. மறைமலையடிகளார்.*

# சித்தாந்தச் செந்நெறி

பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார், சிதம்பரம்.

உலக வாழ்க்கையில் மக்கள் எல்லோரும் ஒரு குடும்பத்தவராக அன்பினால் ஒற்றுமையாக வாழ்வதற்கும் உயிர்க்குயிராய் எங்கும் நீக்கமறக் கலந்து நின்று உலகினை இயக்கியருளும் அம்மையப்பனாகிய இறைவனை வழிபட்டுப் பேரின்ப வாழ்வில் திளைத்து மகிழ்தற்கும் இன்றியமையாத நல்லொழுக்க நெறியே சமயம் எனச் சிறப்பித்துக் கூறப்படுவதாகும். யாவரிடத்தும் வெறுப்பின்றி எல்லோர்க்கும் நலந்தரும் முறையிற் கூறப்படும் சிறந்த உண்மைகளால் எத்திறத்தாரையும் தன்பால் ஈர்த்துக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்த நெறிமுறையெதுவோ அதுவே உண்மையான சமயம் என்பர் பெரியோர். நாடு, மொழி, இனம், கட்சி முதலிய வேற்றுமையுணர்வுகளால் விளையும் பூசல்களுக்கு இடந்தராது எந்நாட்டவர்க்கும் எத்திறத்தார்க்கும் எக்காலத்திற்கும் பயன்தரத்தக்க நிலைத்த உண்மைகளை அறிவுறுத்தும் நூல்கள் எவையோ அவையே மெய்ந் நூல்கள் எனப் போற்றத் தகுவன. உண்மைச் சமயமும் மெய்ந்நூல்களும் ஆகிய இவற்றின் இயல்பினை,

''ஓது சமயங்கள்
பொருளுணரும் நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல்
உளபலவும் இவற்றுள்
யாதுசமயம் பொருள்நூல்யாது
இங்கு என்னில்
இதுவாகும் அதுவல்ல
தெனும்பிணக்க தின்றி
நீதியினால் இவையெல்லாம்
ஓரிடத்தே காண
நின்றதுயா தொருசமயம்,
அதுசமயம்; பொருள் நூல்;
ஆதலினால் இவையெல்லாம்
அருமறை ஆகமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும்
அரனடிக்கீழ் அடங்கும்''

என அருணந்தி சிவாசாரியார் சிவஞான சித்தியாரில் தெளிவாக அருளிச் செய்துள்ளார்.

அவர் கூறியவண்ணம் உலகமக்கள் எல்லோரும் விரும்பி மேற்கொள்ளுதற்குரிய நெறிமுறைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது சைவ சித்தாந்த சமயமாகும். இச்சமயம், எல்லாம் வல்ல சிவபரம் பொருளின் திருவருளால் தோன்றி வளர்ந்த தனிச் சிறப்புடையதாகும்.

உலகியல் நூலாகிய வேதங்களையும், பக்குவமுடைய நல்லறிஞர்க்குரிய சிறப்பியல்பினை விரித்துரைப்பனவாகிய ஆகமங்களையும், அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தது, சைவ சித்தாந்தமாகிய இச்சமயம் என்பது அறிஞர் பலரும் ஒப்பமுடிந்த உண்மையாகும். ஆயினும், நூல் வகையால் மட்டுமன்றி மக்களது வாழ்வில் வேரூன்றி நிலைபெற்றுள்ள ஒழுகலாறுகளாலும் சைவ சித்தாந்தத்தை உருவாக்கி வளர்த்த பெருமை தென்னாடாகிய தமிழ் நாட்டிற்கும் தமிழ் மக்களாற் போற்றிப் பயிலப் பெற்று வரும் தொல்காப்பியம், திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய செந்தமிழ் நூல்களுக்கும் சிறப்பாக உரியதெனக் கூறுதல் பொருந்தும். சங்ககாலத்திற்குப் பின்தோன்றித் தமிழ் நூல்களில் தேவாரம் திருவாசகம் முதலிய சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் சைவசித்தாந்த உண்மைகளைத் தன்னகத்தே கொண்ட சிறந்த அருளிலக்கியங்களாகத் திகழ்கின்றன.

சைவ சித்தாந்த நுட்பங்களைத் தமிழில் விளக்கும் நூல்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை திருமூலர் அருளிய திருமந்திரமும், மெய்கண்டார் அருளிய சிவஞான போதமும், அதனைத் தொடர்ந்து அருணந்தி சிவாசாரியார் இயற்றிய சிவஞான சித்தியாரும், இருபா இருபஃதும், திருவதிகை மனவாசகங்கடந்தார் இயற்றிய உண்மை விளக்கமும், உமாபதி சிவாசாரியார் இயற்றிய சிவப்பிரகாசம் முதலிய எட்டு நூல்களும், திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் இயற்றியதிருவுந்தியாரும், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் இயற்றிய திருக்களிற்றுப் படியாரும், வாகீச முனிவர் இயற்றிய ஞானாமிருதமும் ஆகிய சாத்திரங்களாகும்.

மேற்குறித்த தமிழ் நூல்களிற் கூறப்படும் உலகியல் வாழ்க்கை முறையினையும் தெய்வ வழிபாட்டு முறைகளையும் தத்துவ உண்மைகளையும் கூர்ந்து நோக்குங்கால் சைவ சித்தாந்தக் கொள்கைக்கு நாற்றங்காலாக அமைந்தது நம் தமிழகமே என்ற உண்மை நன்கு விளங்கும்.

சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியம்மானை வழிபடும் சமயம் சைவ சமயமாகும். 'சைவம் சிவனுடன் சம்பந்தமானது' என்றார் திருமூல தேவரும். சிவனை வழிபடும் நெறியாகிய சைவ சமயத்தின் முடிந்த முடிபாக

விளங்கும் தத்துவக் கொள்கையே 'சைவசித்தாந்தம்' என்ற பெயராற் சிறப்பித்துரைக்கப்படும். 'இதற்குச் சைவசித்தாந்தம் என்ற பெயர் திருமூலர் காலத்திலேயே வழங்கியிருத்தல் அறியத் தக்கதாகும். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருண்மையினை வலியுறுத்தல் சைவ சித்தாந்தத்தின் தனிச் சிறப்பாகும்.

தொல்காப்பியம், திருக்குறள், பத்துப் பாட்டு, எட்டுத்தொகை முதலிய பழந் தமிழ் நூல்களை ஆராயுமிடத்துக் கட்புலனாகக் காணப்படும் இவ்வுலகத்தைப் பற்றியும், பல்வேறு உடம்புகளுடன் கூடி இவ்வுலகில் வாழ்வனவாகிய எண்ணிறந்த உயிர்களைப் பற்றியும், யாண்டும் நீக்கமறக் கலந்து நின்று உலகு உயிர்களை இயக்கியருளும் தனி முதற் பொருளாகிய கடவுளைப் பற்றியும், இம்முப்பொருளுண்மையை உணர்ந்த நிலையில் மனவுணர்வுடைய மக்கள் தமக்கென வகுத்துக் கொள்ளும் நல்லொழுக்க நெறியாகிய வாழ்க்கை முறையைப் பற்றியும் அறிந்து கடைப்பிடித்தற்குரிய சிறந்த உண்மைகள் ஆங்காங்கே விரித்துக் கூறப்பெற்றிருத்தல் காணலாம்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளில் கடவுள் வாழ்த்து மெய்யுணர்தல் ஆகிய அதிகாரங்களில் இறைவனாகிய முழுமுதற் பொருளின் இயல்பினையும் அவனை வழிபட்டோர் அடையும் நலங்களையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்துள்ளார். இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன் இறைவன் என்பதும், அவன் முற்றுணர்வினன் என்பதும் ஆகிய உண்மையினை, 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின், முனைவன்' என வரும் நூற்பாவில் தொல்காப்பியனார் அறிவுறுத்தியுள்ளார். வினையின் நீங்கி இயல்பாகவே விளங்கிய முற்றறிவினை உடையான் இறைவன். எனவே, அவனது திருவருளால் வினையினின்றும் நீக்கி விளக்கப் பெறும் சிற்றறிவுடையன ஆன்மாக்கள் என்பதும் உய்த்துணர வைத்தமை அறியத்தக்கதாகும்.

இல்லறவாழ்வில் நுகரவேண்டிய இன்பங்களையெல்லாம் குறையின்றி நுகர்ந்து மன அமைதி பெற்ற நன்மக்கள் என்றும் அழியாத பேரின்பப் பொருளாய்ச் சிறந்து விளங்கும் செம்பொருளை இடைவிடாது சிந்தித்துப் போற்றிப் பிறவிச் சூழலில் திரும்பி வாராமைக்கு ஏதுவாகிய நன்னெறியினைத் தலைப்படுதலே, இவ்வுலகியல் வாழ்வில் முடிந்த பயனாகும். இவ்வுண்மையினை,

''காமஞ்சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

எனவரும் கற்பியற் சூத்திரத்தில் ஆசிரியர் தொல்காப்பியனார் தெளிவாக அறிவுறுத்தியுள்ளார். தோற்றக் கேடுகள் இன்றி எக்காலத்தும் ஒரு தன்மைத்தாய், தன்பால் எப்பொருளும் கலத்தல் இயலாமையால் தூய்மையுடைத்தாய், எத்தகைய விகாரமும் இன்றி என்றும் ஒரு தன்மையதாய் நிற்றல் கடவுளின் இயல்பாதலால் அதனைச் 'சிறந்தது' என்ற பெயரால் தொல்காப்பியனாரும், 'சிறப்பென்னும் செம்பொருள்' எனத் திருவள்ளுவரும் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார்கள். சிறந்தது எனப் பெரியோர்களாற் போற்றியுரைக்கப் பெறும் முழுமுதற்பொருள் என்பார் 'சிறப்பென்னுஞ் செம்பொருள்' என்றார் திருவள்ளுவர். 'செம்பொருட்டுணிவே' எனப் போற்றினர் திருவாதவூரடிகளும். எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய முதல்வனையே தென்னாடுடைய சிவன் என்ற திருப்பெயராற் போற்றி வழிபடுகின்றனர் என்பது,

''தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''

எனவரும் திருவாசகத் தொடராற் புலனாகும்.

சைவ சித்தாந்தம், வினையுண்மையைப் பற்றியும் அஃது உயிர்களுக்குப் பயன் தரும் முறைபற்றியும் தெளிவான முடிவினை வெளியிட்டுரைப்பதாகும். உயிர்கள் இன்பநுகர்ச்சியில் விருப்பும் துன்ப நுகர்ச்சியில் வெறுப்பும் உடையன என்பது, நாம் உலகியலிற் காணும் உண்மையாகும். அம்முறையில் பிறரால் ஈட்டப்பெறும் நல்வினைப் பயன்களைத்தாம் கவர்ந்து கொள்ளவும் தாம் செய்த தீவினைப் பயன்கள் தம்மைப் பற்றி வருத்தா வண்ணம் அவற்றைத் தாம் தப்பி விலகவும் உயிர்கள் முயலுதல் இயல்பே. இவ்வாறு ஒருவர் செய்த நல்வினைப் பயனாகிய இன்பத்தை மற்றொருவர் கவர்ந்து கொள்ளாதவாறும், தாம் நுகர்தற்குரிய தீவினைப் பயனாகிய துன்பத்தை நெகிழவிட்டு ஓடாதவாறும், அவரவர்கள் செய்த வினைப்பயன்களை அவரவர்களே நுகரும்படி அரசன் ஆணை போல் வரையறுத்துச் செலுத்துவது இறைவனது ஆணை எனச் சைவ சித்தாந்தம் கூறும்.

இறைவனது ஆற்றலாகிய ஆணை அவ்வவ்வுயிர்களின் இருவினைப் பயன்களை முன்னிட்டு இன்ப துன்பங்களை உயிர்களுக்கு நுகர்விப்பதாகலின், இவ்வாறு ஊழினைக் கருவியாகக் கொண்டு செயல் புரியும் இறைவனது செயல் முறையைப் 'பாலது ஆணை' எனக் குறித்தார் தொல்காப்பியனார். பால்—ஊழ், ஒருபாற் கோடாது நடுநின்று செங்கோல் செலுத்தும் அரசனது ஆணை நிகழாதபோது எளியோர் பொருளை வலியோர் கவர்ந்து கொள்வர். அது போல மன்னுயிரனைத்தையும் ஒப்பக் காக்கும் அருளாளனாகிய முதல்வனது ஆணையாகிய முறை நிகழாக்கால் ஒருவர் செய்த வினைப்பயன்களை மற்றொருவர் கவர்வதாய் முடியும். இருவினையும் உணர்வற்றன. ஆதலால் செய்தவனைத் தாமே சென்று அடைந்து நுகர்விக்கும் ஆற்றல் அவ்வினைகட்கு இல்லை. எனவே உயிர்களுக்கு இருவினைப்பயன் இறைவனது ஆணையினால் வரும் என்பதே பொருத்தமுடையதாகும். தெய்வத்தைக் குறித்தும் வினையினைக் குறித்தும் தொல்காப்பியனார் காலத் தமிழ் மக்கள் கொண்ட இத்துணிபினைப் 'பால்வரை தெய்வம்' என்ற தொல்காப்பியத் தொடர் தெளிவாக அறிவுறுத்துதல் காணலாம்.

இறைவன் வகுத்த முறையாகிய ஊழென்னும் நியதியைக் கடத்தல் ஒருவராலும் இயலாதென்பதனை,

''வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது''

எனவரும் குறளில் திருவள்ளுவர் விளக்கியுள்ளார். இக் குறளில் 'வகுத்தான்' என்றது இறைவனை, 'வகுத்த வகை' என்றது அம்முதல்வனால் வகுக்கப்பெற்றவினைப்பயனாகிய ஊழினை. இக்கருத்தினைக் கூர்ந்து நோக்குங்கால் வினை செய்யும் உயிர்கள், அவ்வுயிர்களாற் செய்யப்படும் வினைகள், அவ்வினைகளின் பயனாகிய நலந் தீங்குகள், அப்பயன்களைச் செய்த உயிர்களே நுகருமாறு செய்து நல்வழிப்படுத்தும் முதல்வன் ஆகிய நான்கு பொருள்களும் பண்டைத் தமிழ் மக்கள் கண்டுணர்த்தியவை என்பது நன்கு தெளியப்படும். பழந்தமிழ்க் கொள்கையாகிய இதனையே சைவ சமயத்தின் சிறப்புடைய கொள்கையாகச் சாக்கிய நாயனர் உணர்ந்து கடைப்பிடித்தார் எனப் பெரிய புராணத்தால் அறிகின்றோம்.

''செய்வினையும் செய்வானும்
அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவனென்
றருளாலே உணர்ந்தறிந்தார்.''

எனவரும் சேக்கிழார் வாய்மொழி இங்கு நோக்கத்தக்கதாகும்.

முத்தமிழும் நான்மறையும் ஆகிய இறைவனது பொருள்சேர் புகழை விரித்துரைக்கும் அருள் நூல்களாகிய பன்னிரு திருமுறைகள் வேதங்களையும் ஆகமங்களையும் தழுவி அந்நூல்களின் முடிந்த பயனாய் நிலவும் சிவநெறியினைப் பின்பற்றி அன்புடையராய் ஒழுகும்படி செய்யும் ஆற்றல் வாய்ந்தனவாகும். இத்திருமுறைகளின் பயனாகத் தோன்றிய அருள் நூல்களே சிவஞான போதம் முதலிய சைவ சித்தாந்த சாத்திரங்களாகும். திருமுறைகளைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதி, இறைவனை வழிபட்டு அவனது திருவருளால் சாத்திரங்களின் மெய்ப்பொருளுணர்ந்து, தன் முனைப்படங்கி, 'ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்' என்னும் உறுதியுடையராய், யாவர்க்கும் நன்றே செய்து வையத்து வாழ் வாங்கு வாழ்ந்து தெய்வத் திருவருளின்பத்தில் திளைத்தலே சைவ சித்தாந்தங் காட்டும் செந்நெறியாகும்.

* *

---

## ஓம் சுத்த சக்தி ஓம்

*வேதத்தின் ஆத்ம தீரத்தைப் பயில்வோம்!*
*வீரரின் மெய்த்தவம் புரிவோம்!*
*போதிசத் துவரின் அகத்துறவு அணிவோம்!*
*கிறித்துவின் பொறுமையைக் காப்போம்!*
*ஆதிசங் கரரின் ஞானத்தை மதிப்போம்!*
*அருட்சுடர் மணிகள்உள் உணர்ந்தே*
*ஓதிடும் ஆன்ம நேயத்தைப் பயில்வோம்!*
*ஓம்சுத்த சக்திஓம் என்போம்!*

## சதாகால பூசை

உடலமே கோயி லாக, உள்ளத்தான் கடவு ளாகத்,
திடமனம் இருக்கை யாகத், தியானமே விளக்க மாகச்,
சுடர்மலர் அன்பே யாக, நிவேதனம் தூய வாழ்வாய்த்
தடம்புவி மகிழ வேண்டிச் சதாகால பூசை செய்வோம்!

—'பாரத சக்தி மகாகாவியம்' **கவியோகி சுத்தானந்த பாரதியார்.**

# நீர்வண்ணன்

'பத்மவிபூஷண்' 'மகாவித்துவான்'

**திரு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள்,**

காஞ்சிபுரம்

எம்பெருமான் திருநீர்மலையிலே நீர்வண்ணன் என்றும், கச்சியூரகத்தில் நீரகத்தான் என்றும் திருநாமம் பெற்றிருப்பது பிரசித்தம். நீர்க்கும் எம்பெருமானுக்கும் ஒப்புமை பல படிகளால் உண்டு.

(1) நீர் பள்ளத்தில்தான் பாயும், மேல் ஏறுவது அருமை. எம்பெருமானும் சாதி முதலியவற்றால் குறைந்தாரிடத்தே எளிதாகச் செல்லுவன். உயர்ந்தோம்என்று மார்பு நெறித்திருப்பாரிடத்தே செல்ல விரும்பான். பாண்டவர்கட்காகத் தூது எழுந்தருளும் போது, ஞானத்தால் சிறந்தோம் என்றிருக்கும் துரோணாசாரியரையும், செல்வத்தால் சிறந்தோம் என்றிருக்கும் துரியோதனனையும் ஒரு பொருளாக மதியாது,இவையெல்லாவற்றாலும் தாழ்ந்தவராகத் தம்மை நினைத்திருந்த விதுரருடைய திருமாளிகையிலே தானாகவே சென்று, ''முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ, பன்னகாதிபப்பாயலோ பச்சையாலிலையோ, சொன்ன நால் வகைச் சுருதியோ? கருதி நீ யெய்தற்கு, என்ன மாதவஞ்செய்ததிச் சிறுகுடில் என்றான்'' (வில்லி பாரதம்) என்று அவர் உள் குழையுமாறு இருந்து அழகு செய்தருளினான் கண்ணபிரான்; ஆகவே, பள்ளத்தே ஓடிப் பெருங்குழியிலே தங்கும் இயல்பு நீருக்கும் எம்பெருமானுக்கும் ஒக்கும்.

(2) நீர் இல்லாமல் ஒரு காரியமும் ஆகாது; அப்படியே எம்பெருமான் இன்றி ஒரு காரியமும் ஆகாது, ''லோகோ பிந்நருசி'' என்கிறபடியே ஒருவன் விரும்பினதை மற்றொருவன் விரும்பாதபடி உலகம் வெவ்வேறு விருப்பத்தை உடையதாயினும் எல்லோரும் நீரை விரும்பியேயாகவேண்டும். அதுபோலவே எம்பெருமானையும்.

(3) நீர்க்குள் குளிர்ச்சி இயற்கை ; சூடு வந்தேறி; எம்பெருமானுக்கும் தண்ணளி இயற்கையாய்ச் சீற்றம் வந்தேறியா யிருக்கும். ''நீரிலே நெருப்புக் கிளருமா போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால்'' என்ற முமுட்சுப்படித் திவ்விய சூக்தி காண்க.

(4) நீர் சுட்டாலும் அதை ஆற்றுவதற்கு நீரே வேணும்; எம்பெருமான் சீறினாலும் அவன்றானே தெளிவு பெறவேணும்; ''தரு துயரந் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை'' என்றார் குலசேகரப் பெருமாள்.

(5) நீர் நம் விருப்பப்படி தேக்கிவைக்கவும் ஓடவிடவும் உரியதாயிருக்கும். எம்பெருமான் படியும் அப்படியே. ஆண்டாள் தான் சூடிக் களைந்த மாலையிலே விலங்கிட்டு வைத்து அநுபவிக்க நின்றான் எம்பெருமான். பாண்டவர்கட்காகக் கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோக விடப்பெற்றான். ஆண்டாள் தேக்கி வைத்தனள். பாண்டவர்கள் ஓடவிட்டனர்.

(6) நீரானது மற்ற பண்டங்களைச் சமைப்பதற்குக் கருவியாயிருக்கும். தனிப்படத் தானே குடிக்கத் தக்கதுமாய் இருக்கும். எம்பெருமானுக்கும் உபாயத்துவம் உபேயத்துவம் என்ற இரண்டு ஆதாரங்களுண்டே, எம்பெருமானைக் கொண்டு வேறு பலன்களைப் பெற விரும்புவாரும், எம்பெருமான் தன்னையே சுவயம் புருஷார்த்தமாகக் கொள்வாரும் உள்ளமை காண்க.

(7) சோறு முதலானவை தமக்குப் பிரதிநிதிகளைப் பொறுக்கும். அதாவது, காய் கனி கிழங்கு வேர் பல முதலியவற்றால் தேகதாரணம் பண்ணலாம். பண்ணுவாருமுளர். நீரானது அப்படி பிரதிநிதி ஒன்றையும் சகிக்கமாட்டாது. நீர்க்கு நீரே வேணும். அப்படியே எம்பெருமானுக்கும் பிரதிநிதி கிடையாது; குணாநுசந்தானத்தாலும் போது போக்கவரிது ; ''ஒரு நாள் காண வாராயே'', ''அடியேன் தொழ வந்தருளே'' என்று பிரார்த்தித்துப் பெற்றே தீர வேண்டும். உணவுப் பொருள்களில் அரிசிக்குப் பதிலாகக்கோதுமையோ பாலோ மற்றும் எந்தப் பொருளோ அவரவர்களின் சுவைக்கு ஏற்றபடி வைத்துக் கொள்ளப்படுவதுண்டு. ஆனாலும் நீருக்குப் பதிலாக வேறெதுவும் வைத்துக் கொள்ளப்படுவதில்லை. நீர் ஒருவராலும் விட முடியாதது. அதுபோலக் கர்மஞான பக்தி பிரபத்தி முதலியவற்றில் எதை விட்டு எதைப் பற்றினாலும் எம்பெருமான் ஒருபடியாலும் விடத்தகாதவன் என்றதாயிற்று. இது மிக நுட்பமான தத்துவப் பொருள்.

(8) சோறு உண்ணும்போது நீர் இல்லாமல் முடியாது. அப்படி நீர் வேறொன்றை, வேண்டி நிற்பதன்று. எம்பெருமான் படியும் அப்படியே. உபாயாந்தரங்களுக்கு எம்பெருமான் வேணும்; எம்பெருமான் இதர நிரபேட்சகன் (அதாவது) எதையும் எதிர்பாராதவன். ''உன்னாலல்லால் யாவராலுமொன்றுங் குறைவேண்டேன்'' என்றாரே நம்மாழ்வார்.

(9) கொள்ளும் பாத்திரங்களின் தாரதம்மியமேயன்றி நீர்தான் குறைய நில்லாது; எங்கும் நிரம்பவல்லது. எம்பெருமானும் ''வேண்டிற்றெல்லாந் தருங்கோதில் வள்ளல்'' என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடி எங்கும் நிரம்ப வல்லவன். கொள்வார் குறையேயத்தனை; ஐசுவரியமே போதுமென்பாரும், கைவல்யமே போதும் என்பாருமாகக் குறையக் கொள்ளுவாருடைய குற்றமே. அற்பமான ஐசுவரியம், உத்தமமான முத்தியாகிய எதையும் அளித்து நிரப்ப வல்லவன் இறைவன்.

(10) நீர் ஐவகைப்பட்டிருத்தல் போல எம்பெருமானும் ஐவகைப்பட்டிருப்பவன்; எங்ஙனேயென்னில், (1) பூமிக்குள்ளே பதிந்து கிடக்கின்ற நீர், (2) அண்டத்துக்குப் புறத்தேயுள்ள நீர், (3) பாற்கடல் நீர், (4) பெருக்காற்று நீர், (5) தடாகங்களில் தேங்கும் நீர் என நீர் ஐவகைப்படும். விடாய்த்தவனுக்கு வேறோரிடம் தேடிப்போக வேண்டாதபடி நிற்கிறவிடத்திலேயே உண்டாயிருக்கச் செய்தேயும் கொட்டும் குந்தாலியுங் கொண்டு கல்லினுல் அல்லது குடிக்கக் கிடையாத பூமிக்குள் பதிந்த நீர் போலே யாய்த்து அந்தர்யாமித்வம்; கண்டு பற்றவேணுமென்று ஆசைப்பட்டவனுக்கு இருதயத்திலே இருக்கச் செய்தேயும் கண்ணுக்குப் புலப்படாமல், அட்டாங்க யோகமாகிற முயற்சியாலே, காண வேண்டும் படியானதன்றோ இது. (2) விடாய்த்தவனுக்கு, அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கிற ஆவரண சலம் போலேயாயிற்று. கண்டு பற்றவேணும் என்றிருக்கிறவனுக்கு லீலாவிபூதிக்கு அப்பாற்பட்டிருக்கிற பரத்துவம். (3) அப்படி அதிதூரத்திலும் அன்றியே அண்டத்துக்கு உட்பட்டிருக்கச் செய்தேயும் விடாய்த்தவனுக்குக் கிட்ட அரிதான பாற்கடல் போலேயாயிற்று, சென்று காண அரிதாம்படி இருக்கிற வியூகம். (4) அருகேயிருந்தும் தற்காலத்திலிருந்தவர்களுக்கு மட்டும் உபயோக யோக்யமாய்ப் பிற்பட்டவனுக்கு அரிதான பெருக்காறு போலேயாயிற்று, இராம கிருஷ்ணுதி அவதாரங்களான விபவம். பூமியிலே அவதரித்துச் சஞ்சரித்தும் தற்காலத்திலிருந்தவர்களுக்கே அடையத்தக்கதாய்ப் பிற்காலத்திலுள்ளவர்களுக்குக் கிட்டாதபடியாய் இருப்பதன்றோ இது. (5) விடாய்த்தவனுக்கு அவனது விடாய் தீரப் பருகலாம்படி பெருக்காற்றிலே தேங்கின மடுக்கள் போலேயாயிற்று கோயில்களிலும் இல்லங்களிலும் எங்கும் ஒக்க எல்லார்க்கும் கண்ணுக்கு இலக்காம்படி நிற்கிற அர்ச்சாவதாரம். ஆக இந்த ஐந்து வகைகளினுலும் ஐவகை நீரை ஒத்திருப்பான் எம்பெருமான்.

(11) நீரானது இயற்கையிலே பரிசுத்தமாயினும் ஆதரவசத்தாலே கொள்ளத்தக்கதும் தள்ளத் தக்கதுமாகிறது. அப்படியே பிற தெய்வங்களில் அந்தர்யாமியான எம்பெருமான் உபேட்சிக்கத்தக்கவனுகவும், சூராராழி வெண் சங்கேந்திய எம்பெருமான் உத்தேசியனுகவும் உள்ளமை காண்க.

(12) தோண்டத் தோண்டச் சுரக்கும் நீர்; எம்பெருமானும் கொள்ளமாளா இன்பவெள்ளமாய்ப் பேசப் பேச வளர்ந்திடுவன். ''செலக் காண்கிற்பார் காணுமளவும் செல்லுங்கீர்த்தியாய்'' என்றூரே நம்மாழ்வார். ''பேசுவார் எவ்வளவு பேசுவார் அவ்வளவே வாசமலர்த் தண்டுழாய் மார்வன்—வடிவு'' என்றூர் பேய் ஆழ்வாரும்.

(13) நீர் தனக்கொரு பிரயோசனமும் இன்றிப் பரார்த்தமாகவே இருக்கும்; அது போல எம்பெருமானுடைய இயல்பு ரூபம் குணம் விபூதிகள்ஆகியனவெல்லாம் நம்போன்ற அடியார்களுக்காகவே இருக்கும்.

(14) நீர் தானே பெய்யவேணுமேயன்றி ஒருவரால் வடிம்பிட்டுப் பெய்விக்க முடியாதது; எம்பெருமான் படியும் இப்படியே; அவன் தனது இயற்கை இன்னருளால் இரங்கினுல்தான் உண்டு.

(15) நீர் கடலிலிருந்து காளமேகம் வழியாக வந்தாலன்றி உபஜீவிக்க உரியதாகாது; எம்பெருமானும் சாத்திரங்களில் இருந்து ஆசாரியர் முகமாக வந்தே உப ஜீவனுகிறுன். ''மேகம் பருகின சமுத்திராம்புபோல நூற் கடற்சொல் இவர் வாயனவாய்த் திருத்தின வாறே ஸர்வதா ஸர்வோப ஜீவ்யமாமே'' என்ற ஆசார்ய இருதய சூக்தி காண்க.

(16) சிறியார் பெரியார் என்கிற விபாகமின்றியே அனைவரும் ஓர் துறையிலே படிந்து குடைந்தாடலாம்படி இருக்கும் நீர்; எம்பெருமானும் நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே'' என்றும், ''கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்'' என்றும் சொல்லுகிறபடியே, பெரியோர் சிறியார் என்னும் வாசியற ஒக்க வழிபடலாம் படியிருப்பன்.

(17) நீர் சிறிது துவாரம் கிடைத்தாலும் உட்புகுந்துவிடும். எம்பெருமானுக்கும் சிறிது காரணமே போதும்; ''திருமாலிருஞ்சோலைமலை என்றேன் என்னத் திருமால் வந்தென்னெஞ்சு நிறையப் புகுந்தான்'' என்றும் ''மாதவன் என்றதே கொண்டு என்னுள் புகுந்திருந்தான்'' என்றும் அருளிச் செய்தார் நம்மாழ்வார்.

(18) கங்கை, காவிரி, திரிவேணி முதலான தீர்த்த விசேடங்களிலே நீருக்குப் பெருமை அதிகம்; எம்பெருமானுக்கும் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான திருப்பதிகளிலே சிறப்புப் பொலியும்.

(19) தாபம் மிக்கவர்கள் நீரை முகத்திலே ஏறட்டுவது, முதுகில் கொட்டுவது, உள்ளில் இழிச்சுவது, படிந்து குடைந்தாடுவதுபோல், ''வாக்கினுல் கருமந்தன்னுல் மனத்தினுல் சிரத்தை தன்னுல், வேட்கை மீதூரவாங்கி விளங்குவார்கள்'' எம்பெருமானையும் என்கிறூர் திருமங்கையாழ்வார்.

(20) நீர் வேண்டியவன், ஒரு துளி நாக்கு நனைக்கக் கிடைத்தால் போதுமென்பன்; ''கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன் பால்வா ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே'' என்றும், ''ஒருநாள் காணவாராயே'' என்றும், ''நம்மையொருகால் காட்டி நடந்தால் நாங்களுய்யோமோ'' என்றும் ஆழ்வார்கள் கூறுவர் எம்பெருமானை நோக்கி.

(21) நீரில் சிறிய கல்லும் அமிழும், பெரிய தெப்பமரமும் மிதக்கும். ''எம்பெருமான் பக்கலிலும் பிரம்மாவாய் இழந்துபோதல், இடைச்சியாய்ப் பெற்றுவிடுதல் செய்யக் காணா நின்றோமிறே'' என்கிறபடியே பெரியார் இழக்கவும் சிறியார் பெறவுமாகும். ''நேரே கடிக் கமலத்துள்ளிருந்துங் காண்கிலான் கண்ணனடிக் கமலந்தன்னை அயன்'' என்று பிரமன் இழந்ததைப் பொய்கையார் கூறினர். ''மருவுநின் திருநெற்றியில் சுட்டியசைதர மணிவாயிடை முத்தம் தருதலும், உன்றன் தாதையைர போலும் வடிவு கொண்டு உள்ளம், உள் குளிப் விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும் திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றாளே'' என்று இடைச்சி பெற்றதைக் குலசேகராழ்வார் கூறினர். பகவத் குணங்களில் சிறுமா மனிசர் அமிழ்தலும் ஊன்மல்கிமோடு பருப்பார் வாய்க் கரையில் நிற்றலுங் கொள்க.

(22) ''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை'' (திருக்குறள்) என்கிறபடியே உணவு பெருக விளைதற்குக் காரணம் ஆகையாலே சாதனமாயும், விடாய் தீரப் பருகுகையாலே தானே போக்கியமாகவும் இருக்கும் நீர். உபாயமும் தானாய் உபேயமும் தானாயிருப்பன் எம்பெருமான் என்பது நூற்கொள்கை. இங்ஙனே காண்க.

## திருமாலிருஞ் சோலைமலை

திருமால் இருஞ்சோலை மலைஎன்றேன்; என்னத்
திருமால்வந் தென்நெஞ்சு நிறையப் புகுந்தான்;
குருமா மணியுந்து புனல்பொன்னித் தென்பால்
திருமால் சென்று சேர்விடம்தென் திருப்பேரே! (1)

திருப்பேர் நகரான் திருமால் இருஞ்சோலைப்
பொருப்பே யுறைகின்ற பிரான் இன்றுவந்து,
இருப்பேன் என்று என்நெஞ்சு நிறையப் புகுந்தான்;
விருப்பே பெற்றமுதம் உண்டு களித்தேனே! (2)

உற்றேன் உகந்து பணிசெய் துனபாதம்
பெற்றேன்; ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய்!
கற்றார் மறைவா ணர்கள்வாழ் திருப்பேராற்கு,
அற்றார் அடியார் தமக்குஅல்லல் நில்லாவே (3)

நில்லா அல்லல் நீள்வயல்சூழ் திருப்பேர்மேல்
நல்லார் பலர்வாழ் குருகூர்ச் சடகோபன்,
சொல்லார் தமிழா யிரத்துள் இவைபத்தும்
வல்லார், தொண்டர் ஆள்வதுசூழ் பொன்விசும்பே! (4)

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.

செங்கை மாவட்டம் : : தமிழ்நாடு

தொலைபேசி :

அலுவலகம் : 225 மலைக்கோயில் : 243

மலைப்பாதை : 396 தங்கும் விடுதி : 387, 303

நினைத்ததை அளித்திடும், மனத்தினை ஒருக்கிடும், வழித்துணை வந்திடும் திருத்தணி முருகனின் இன்னருள் பெற்றிட வாரீர்! வாரீர்!!

திருமுருகன் உறையும் சிறப்புத் தலங்களுள், அறுபடை வீடுகளில் ஐந்தாவது படை வீடு திருத்தணிகை. இத்தலம் நக்கீரர், அருணகிரி நாதர், அருட்பிரகாச வள்ளலார், முத்துசாமி தீட்சிதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்றதாகும்.

தரிசனம்— அபிடேக, பூசைக் காலங்கள்

| | | |
|---|---|---|
| விஸ்வரூப தரிசனம் | காலை 6 | உச்சிக் காலம் |
| சந்தி அபிடேக பூசை | காலை 8 | அபிடேக பூசை காலை 10 மணி |

சாயரட்சை :

| | |
|---|---|
| அபிடேக பூசை | மாலை 5 மணி |
| அர்த்தசாம பூசை | இரவு 8 மணி |

விழாக்காலங்கள் :

1. ஸ்ரீ வள்ளி திருமணப் பெருவிழா ... பிப்ரவரி, மார்ச்சு
2. சிவராத்திரி 1008 சங்காபிஷேகம் ... மார்ச்சு
3. ஸ்ரீ தெய்வயானை பெருவிழா ... ஏப்ரல், மே.
4. ஆடிக்கிருத்திகை தெப்பப் பெருவிழா ... ஜூலை, ஆகஸ்டு.
5. சஷ்டிப் பெருவிழா ... அக்டோபர், நவம்பர்.
6. திருப்புகழ் திருப்படி விழா ... டிசம்பர் 31

வேண்டுதல் :

1. பக்தர்கள் வேண்டுகோளுக்கிணங்க, இத்திருக்கோயில் பள்ளியறைப் பூசைக் கட்டளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பள்ளியறைப் பூசைக் கட்டளையில் சேர விரும்பும் பக்தர்கள் ரூ. 251-ஐ நிருவாக அலுவலருக்கு அனுப்பிப் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

2. பாதி நன்கொடையின் கீழ் ரூ. 10,000 செலுத்துவோர் பெயரில் குடில் கட்டப்படும்.

3. நவீன வசதிகளுடன் பொருந்திய 108 அறைகள் கொண்ட ஒரு விடுதியும் பாதி நன்கொடையின் கீழ்க் கட்டப்பட்டு வருகின்றது. மேற்படி திட்டத்திற்கு ரூ. 5,000 செலுத்துவோருக்கு ஒரு அறை ஒதுக்கித் தரப்படும். மேற்படி குடில்களிலும் அறைகளிலும் நன்கொடைசெலுத்துவோருக்கும், அனுமதி பெற்று வருவோருக்கும் ஒரு ஆண்டில் 60 நாட்கள் இலவசமாகத் தங்கலாம். இது நிரந்தரமானது.

4. தணிகை வரும் பக்தர்கள், தங்குவதற்கு நவீன வசதிகளுடன் கூடிய குடில்களும், அறைகளும், திருமணம் செய்விக்கத் திருமண மண்டபங்களும் உள்ளன. மலைக் கோயில்களுக்குச் செல்ல மலைப்பாதையும், ஆலய ஊர்தி வசதியும் உள்ளன.

அறங்காவலர்கள் :

கலவை அ. கோபாலகிருஷ்ணன்,
து. பாலசுப்பிரமணியம்,
ஆ. ஆனந்தராசன்,
என். கே. எஸ். கணேசன்,
வே. மு. துரைசாமி.

**எஸ். சோமசுந்தரம்**, பி.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர்/நிருவாகஅதிகாரி

# கோடி தேவர்கள் கும்பிடும் நீடூர்

திரு. வி. சிவபாத சேகர், B.Sc.,

''மாறு கடிந்து மண்காத்த வளவர் பொன்னித் திருநாட்டில்'', காவிரியின் வட கரையில் அமைந்துள்ள பாடல் பெற்ற சிவத் தலங்களுள், இருபத்தொன்றுவது தலம் திருநீடூர் ஆகும். மாயூரத்திலிருந்து இங்குச் செல்லப் புகை வண்டி, பேருந்து போன்ற வசதிகள் உள்ளன. திருக்கோயிலும் நெடுஞ்சாலைக்கு மிக அணித்தே திகழ்கிறது. ஊழிக்காலத்தும் நீடித்து நிற்கும் பெற்றி உடையதாதலால், நீடூர் எனப்படுகிறது.

## கோயிலமைப்பு

கிழக்கு நோக்கிய இக்கோயிலுக்கு இராச கோபுரம் இல்லை. வாயிலருகே வடக்குநோக்கிய காளி கோயிலுள்ளது. அம்மையின் திருவுரு எழிலுறத் திகழ்வதாகும். கோயிலினுள் நுழைந்தவுடன் தல விருட்சமான மகிழ மரத்தையும், அதனெதிரே தெற்கு நோக்கிய வேயுறு தோளியம்மை சந்நிதியையும் காணலாம். அடுத்த பிராகார வாயிலை ஒரு நிலையுடைய சிறு கோபுரம் அழகு செய்கிறது. நாட்டுக்கோட்டை நகரத்தார் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளனர். பிராகாரத்தில் நால்வர், விநாயகர், முனையடுவார் நாயனார் ஆகிய திருவுருவங்களைக் காணலாம். நடராசர் சந்நிதி சற்று உயரத்திலுள்ளது. கோயிற் கருவறையில் சோமநாதேசுவரர் காட்சியளிக்கிறார். மண்ணாலான இலிங்கத் திருமேனியில் விரலடையாளங்கள் காணப்படுகின்றன. நெற்றியில் சிறு பள்ளமும் காணப்படுகிறது.

## தல வரலாறு

இந்திரன் தனது பழி நீங்க, காவிரியாற்று மணலால் இலிங்கம் தாபித்து, பூசனைகள் புரிந்து பேறு பெற்றான். அவன் மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசிக்கு மறுதினம் துவாதசியன்று அதிகாலையில் பூசித்ததால், இன்றும் அத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சன்மசுதன் என்ற அந்தணன், சாபத்தால் நண்டு உருவை அடைந்து, இத்தலத்தை எய்தி இறைவனைப் பூசித்துப் பேறுபெற்றான். ஆகவே இறைவனுக்குக் கர்க்கடேசுவரர் (கர்க்கடம்—நண்டு) என்ற திருநாமமும் உண்டு. நண்டானது நற்கதியடைந்த திருநாள் ஆடி மாதம் பௌர்ணமி நாளெனப்படுகிறது. மேலும் சந்திரன், சூரியன் ஆகிய தேவர்களும் வழிபட்டுள்ளனர். இது பற்றியே இறைவிக்கு ஆதித்ய அபயாம்பிகை என்ற திருப்பெயரும் வழங்கப்படுகிறது. தேவர்களனைவரும் தொழ நின்ற எம்பெருமானைச் சுந்தரரும்,

காடில் ஆடிய கண்ணுதலானைக்
காலனைக் கடிந்திட்ட பிரானைப்
பாடி ஆடும் பரிசே புரிந்தானைப்
பற்றினோடு சுற்றம் ஒழிப்பானைத்
தேடி மாலயன் காண்பரியானைச்
சித்தமும் தெளிவார்க்கெளியானைக்
கோடி தேவர்கள் கும்பிடும் நீடூர்க்
கூத்தனைப் பணியா விடலாமே.

எனப் பாடிப் புகழ்ந்து பரவுகின்றார்.

## அவதாரத் தலம்

சைவ நாயன்மார்கள் அறுபத்து மூவருள் ஒருவராகிய முனையடுவார் நாயனார் என்பவர் திருஅவதாரம் செய்த திருத்தலமும் இதுவேயாகும். அமரின்கண் வென்று வந்து தாம் கொணர்ந்த பொருள்களனைத்தையும் சிவனடியார்களுக்குத் திருவமுதினை ''நறுநெய் கறி தயிர் பால் கனியுள்ளுறுத்த கலந்தளித்து''த் திருத்தொண்டு புரிந்து இறுதியில் ''சிவலோகத் தமர்ந்து பிரியா உரிமை மருவிய'' முனையடுவார் நாயனாரது குரு பூசை பங்குனிப் பூசத்தன்று இங்குச் சிறப்பாக நடைபெறுகிறது. ஆவணி ஞாயிறுகளில் சூரிய பூசையும் நடைபெறுகிறது.

## திருப்பதிகங்கள்

திருநாவுக்கரசர் இத்தலத்தையும் திருப்புன்கூரையும் இணைத்துத் திருத்தாண்டகம் பாடியுள்ளார். சுந்தரர் திருப்பதிகமும் ஒன்று உண்டு. இத்திருக்கோயிலில் முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றும் இராசராசன் காலத்துக் கல்வெட்டுக்கள் உள்ளன. இத்துணைச் சிறப்புக்கள் பொருந்திய திருநீடூரில் உகந்து வீற்றிருக்கும் பரமனைப் பணிந்து வினை யாவும் நீங்கப்பெற்றுப் பேரின்பமடைவோமாக!

# அம்மை திருப்பல்லாண்டு

கவிஞர் திரு. ரே. முத்துக்கணேசன்

நறுந்தளிரே ! மருக்கொழுந்தே ! மரகதமே !
நாட்காலை பசுமை பூப்பாய் ;
குறுந்தளிராம் கொடிவீட்டில் பிச்சியெனும்
குறும்பூவாய் இன்பம் ஈவாய் ;
சிறந்தொளிசேர் செம்பூவும் பசுந்தழையும்
சேர்ந்தனபோல் சிவமும் நீயும்
அறந்தழைக்க நேர்பாதி கலந்தகோல
அழகினுக்கா யிரம்பல் லாண்டு. (1)

விடிவறியா உயிர்கள்பால், மீன்போல
விழிநோக்கி அருளே செய்யும்
கடிகமழும் மலர்க்கூந்தல் கயல்விழியே !
கண்களிக்க அள்ளி யுண்டே
அடிமுதலாய் அழகனைநீ அணைந்தமையால்
அழகம்மை ஆனாய் நீயோ !
படிஎழுத வொண்ணாத பல்வளையாய் !
பரிசினுக்கா யிரம்பல் லாண்டு (2)

முல்லைமுதல் மக்களுயிர் அத்துணைக்கும்
மூலத்தாய் நீயே யன்றோ !
எல்லையிலாக் காலவினை சிலந்தியாக
எழுப்பிவிடும் துன்பப் பின்னல்
தொல்லையினில் வீழுமுயிர்த் துயர்துடைக்கத்
தோகையுரு உமையு மாவாய் ;
அல்லலிலாப் பெருவாழ்வே ! அருமருந்தே !
அன்பினுக்கா யிரம்பல் லாண்டு (3)

படியறியோம் ; நின்பதத்தின் பாங்கறியோம் ;
பல்வேறு வினைகள் தம்மால்
இடியுருகும் கொடுஞ் செயல்கள் இழைத்தபோதும்
இன்னுயிர்பால் கனிவு கண்டோம் ;
படிவளரப் பொருளீந்து உணவூட்டிப்
பார்புரக்கும் முத்தம் மையே !
அடிதொழுவோம் அடைக்கலங் காண்அறம் வளர்த்தாய் !
அருளினுக்கா யிரம்பல் லாண்டு (4)

வெற்றியினைச் செருக்கோடு விரும்பிநின்றேன்
விளையாட்டாய்த் தோல்வி தந்தே
பற்றுடைய ஆணவத்தின் முனைமழுங்கப்
பனிமுறுவல் செய்த எந்தாய் !
வெற்றுருவக் கருங்கல்லாய்க் கிடந்தநெஞ்சை
வெண்கமலப் பூவாய் ஏற்றுப்
பொற்புருவாய் ! அருள்தருவாய் ! பூங்கோதாய் !
புதுமைக்கா யிரம்பல் லாண்டு (5)

சீர்பெரிய நிலமெல்லாம் முகில்வழங்கும்
சிறுதுளிக்கே ஏங்கு மாப்போல்,
நீர்பெருக்கும் கடலனைத்தும் நிறையமுத
நிலவொளிக்கே ஏங்கு மாப்போல்,
பேர்பெரியாய்! உனைவணங்காப் பித்தனுமென்
பிஞ்சன்புக் கேங்கு கின்றாய் ;
ஏர்சிறக்கும் ஏலவார்பூங் குழலம்மை
எளிமைக்கா யிரம்பல் லாண்டு (6)

நீர்நிலத்தில் மதுப்பூவைத் தென்றலுமே
நிதந்தழுவ மணமே கொள்ளும் ;
தேர்புலத்தால் கவியமுதம் உண்டவுள்ளம்
தெளிந்தறிவு பெற்றே வாழும் ;
பேரருளே ! அஞ்செழுத்தை நெஞ்சகத்தே
பிரிந்தறியா எளியன் தன்னைப்
பாரதனுள் கண்பாராய் பால்மொழியே !
பரிவினுக்கா யிரம்பல் லாண்டு (7)

உன்னடியைப் பரவுதற்கு மண்ணகந்தான்
ஒளிர்பூவைப் பூத்துப் போற்றும் ;
மின்னுபெரும் ஆழியொடு வானகமும்
மின்முத்தால் நீரால் போற்றும் ;
தின்னவரு செந்தழலோ அகிற்புகையைத்
தென்றலுடன் தூவிப் போற்றும் ;
பொன்னடியை எங்ஙனம்நான் போற்றிடுவேன் !
புகழினுக்கா யிரம்பல் லாண்டு (8)

மண்ணகத்தில் படிமைதனைச் சிற்பியர்கள்
மாண்புறவே சமைத்துத் தந்தார் ;
மண்ணகத்தில் ஓவியர்கள் வரைந்துன்றன்
மாணடியைத் தொழுது நின்றார் ;
எண்ணகத்தில் உள்மலரும் கவிஇதழால்
எழில்படியைத் தொட்டேன் ; எந்தம்
பண்ணகத்துத் தமிழேற்பாய் பண்மொழியே !
பண்பினுக்கா யிரம்பல் லாண்டு (9)

இருள்இரியச் சுடர்வயிரம் இணைந்தமுடி
அழகினுக்குத் திருப்பல் லாண்டு !
பொருள்விரிக்கும் விழிகளொடு புதுமுறுவல்
அழகினுக்குத் திருப்பல் லாண்டு !
மருளகற்றிச் சிவம்கலந்த மணக்கோல
அழகினுக்குத் திருப்பல் லாண்டு !
அருள்பொழியும் அங்கயற்கண் அம்மைக்குப்
பல்லாண்டு திருப்பல் லாண்டே ! (10)

---


## பெரியபுராணம் ஆய்வுரை (சம்பந்தர்)

இந்நூல், தமிழ்க்கடல் அருட்டிரு மறைமலையடிகளார் அவர்களின் புதல்வர், திருமுறைச்செல்வர் - சித்தாந்த தினகரன் - பேராசிரியர் - வித்துவான் மறைதிருநாவுக்கரசு அவர்களால், இயற்றப்பெற்றதாகும். பெரிய புராண ஆய்வுரை என்னும் தலைப்பில், சுந்தரர் திருநாவுக்கரசர் பற்றிய ஆய்வுநூல்கள் இரண்டு, முன்பே வெளிவந்துள்ளன. இந்நூல் மூன்றாம் தொகுதியாக வெளிவந்துள்ளது. சேக்கிழார் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, ஆங்காங்கே பற்பல அரிய புதிய விளக்கங்களுடனும், நயமிக்க நுணுகிய நல்ல உரைத்திறன்களுடன், இந்நூல் அரியமுறையில் அமைந்துள்ளது. சம்பந்தர் வரலாறு பற்றிய அகச்சான்றுகளும், புறச்சான்றுகளும், சிறப்புற எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தேவாரப்பாடல்கள் பலவற்றிற்கு நுட்பமிக்க பொருள் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இந்நூல், யாவரும் படித்துப் பயன்கொள்ளுதற்குரிய, சிறந்த நல்ல செந்தமிழ்ச் சைவப் பெருநூல் ஆகும். பெரிய புராணப் பெருங்காப்பியத்தினைக் கற்றுத் தெளிதற்கு, இந்நூல் உற்ற பெருந்துணையாகும். **விலை ரூ. 10—00**

புத்தகம் கிடைக்குமிடம்:

**பேராசிரியர் மறைதிருநாவுக்கரசு,**

பி. 96, சவகர் நகர், அகரம், பெரம்பூர், சென்னை - 600 082

# அருள்மிகு

# இராமநாதசுவாமி திருக்கோயில்

## இராமேசுவரம்.

* இமயம் முதல் சேது வரை பாவம் போக்கி மக்களுக்குப் பேரின்பமும், பெரு வாழ்வும் அளிக்கும் பல புண்ணியத் தலங்களைத் தன்னகத்தே தாங்கித் திகழும் பாரத நாட்டில், வேதங்கள் இதிகாசம், புராணங்கள் முதலியவற்றால் புகழப்படும் பெருமை வாய்ந்த புண்ணியத் தலங்களில் இராமசேுவரம் மிக முக்கியமானதாகும்.

* திருக்கோயிலை நாடி வரும் பக்தர்களின் வசதிக்காகச் சகல வசதிகளுடன் கூடிய சிற்றில்களும், ஓய்வு விடுதிகளும் கோவிலைச் சுற்றியும், எதிர்ப்புறங்களிலும் கட்டப்பட்டுள்ளன.

* சுமார் 150 மாணவிகளுடன் இத்திருக்கோயிலில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்மன் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, இன்று ஆல்போல் தழைத்து 500 மாணவிகள் பயிலும் சிறந்த உயர்நிலைப் பள்ளியாகத் திகழ்கிறது. சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் பெண்கள் பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டுச் சிறந்த ஒரு பள்ளியாகத் திகழ்கிறது.

* சமஸ்கிருதம், ஆங்கிலம் மற்றும் தமிழ் அபிவிருத்திக்காக இராமேசுவரம் திருக்கோயில் பாடசாலை, இராமேசுவரம் திருக்கோயில் கல்லூரியாக மாற்றப்பட்டு, பட்டப் படிப்பு வழங்கும் வகையில் கல்லூரிகள் தகுதி உயர்த்தப்பட்டுள்ளது.

* திருக்கோயிலால் நடத்தப்பட்டு வரும் மாபெரும் திருப்பணிக்குத் தங்களுடைய காணிக்கையாக வாரி வழங்க வேண்டப்படுகிறது.

* திருக்கோயிலுக்கு வருகை தரக்கூடிய பக்தர்களின் வசதிக்காக ஆயுர்வேத மருத்துவமனை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது.

* பக்தர்கள் எடுத்துச் செல்வதற்கு வசதியாகத் திருக்கோயில் பெயர் பொறிக்கப்பட்ட அழகிய பிளாஸ்டிக் பாட்டில்களில் கோடி தீர்த்தம் வழங்கப்படுகிறது. தங்களுக்குத் தேவையான அசல் சுத்தமான கோடி தீர்த்தத்தைத் திருக்கோயிலுக்குள்ளேயே வாங்கிக் கொள்ளக் கோரப்படுகிறது.

* பல வர்ணங்களில் பொறிக்கப்பட்ட ஸ்ரீ இராமலிங்கப் பிரதிஷ்டை படத்துடன் கூடிய டப்பாக்களில் கும்பாபிஷேகப் பிரசாதமாக விபூதி, குங்குமம், செந்தூரம் மற்றும் கோடி தீர்த்தம் உட்பட டப்பா ஒன்றுக்கு ரூ. 10 வீதம் வழங்கப்படுகிறது.

* இராமலிங்கப் பிரதிஷ்டை பொறிக்கப்பட்ட வெள்ளி டாலர்கள், பிளாஸ்டிக் மோதிரங்கள், டாலர்கள் ஆகியவை முறையே ரூ. 12, ரூ. 5 வீதம் வழங்கப்படுகிறது.

**டி. வேணுகோபால், பி.ஏ.,**
உதவி ஆணையர், நிர்வாக அதிகாரி.

திரு. எஸ். இராமநாதசேதுபதி, பி.ஏ.,
(பரம்பரை அறங்காவலர்)
திரு. ராம. முருகப்பச் செட்டியார்,
திரு. ஏ. எல். ஏ. ஆர். சோமநாதன் செட்டியார்
திரு. சொ. க. சிறைமீட்டான்.
அறங்காவலர்கள்

## உலக இந்துமத மாநாட்டின்

# தலைமையுரை‡

மெய்யன்பர்களே !

இந்த உலக இந்துமத மகாநாட்டை ஏற்பாடு செய்துள்ள மதிப்பிற்குரிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களுக்கு இந்து மக்கள் அனைவரும் நன்றி செலுத்தவும் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம்முடைய இந்துமதம், பண்டைக் காலத்தில், உலகமெல்லாம் பரவியிருந்த தென்பதற்கு, புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்ட மேல் நாட்டவர்களே சான்றுகள் தருகின்றார்கள். இந்து மதத்திலுள்ள பேருண்மைகளெல்லாம் நிரூபிக்கத் தக்கனவாக இருக்கின்றன. அவற்றை உணர்ந்து அவற்றிற்கான நிருபணங்கள் கொடுத்து வந்தால், நமது இந்து மதக் கோட்பாடுகள் அனைத்தும் திரும்பவும் உலக மக்கள் யாவரும் ஒத்துக் கொள்ளக் கூடியனவாக ஏற்பட்டுவிடும் என்பதில் யாருக்கும் எவ்வித சந்தேகமும் வேண்டாம்.

நாம் பூசிப்பதையும், ஜெபிப்பதையும், தியானிப்பதையும் யார் யாரை நினைத்துச் செய்கிறோமோ, அவரவர்கள் அறிந்து அனுக்கிரகம் செய்கிறார்கள் என்று, நமது மெய்ஞ்ஞானிகள் கண்ட உண்மை விஞ்ஞான மூலமாக நிரூபிக்கப்படப் போகிறது என்பதற்குள்ள அறிகுறிகள் தெரிகின்றன. ருஷ்யாவில் இறந்தவர்களுடைய உருவங்களைப் படம் பிடிக்கவும், ஜெர்மனியில் இறந்தவர்களுடைய சொந்தக்குரல்களை டேப்ரிக்கார்டு செய்யவும் செய்கிறார்கள் என்ற விபரம் வந்திருக்கிறது. அதுபோல, இந்துக்கள் கோயில்களில் பிரதிஷ்டை செய்து வழிபடுகிற மூர்த்திகள் எல்லாம் மேலுலகத்தில் அந்தந்த உருவத்தில் இருந்து நம்மை ஆட்சி புரிந்து வருகின்ற அதிதெய்வங்கள் என்ற உண்மையும் விஞ்ஞான முறையில் நிரூபிக்கப் பெறப் போகிறது. கடவுள் ஒருவராக இருந்தாலும் அவரது அதிகாரம் பெற்ற அதிதெய்வங்கள் பலவாக இருக்கின்ற பேருண்மையையும், அன்றுதான் யாவரும் ஒத்துக் கொள்வார்கள். எந்த நாட்டிலும் அரசாங்கம் ஒன்றாக இருந்தாலும் அதன் நிர்வாக அதிகாரிகள் பலராக இருந்து தீரவேண்டியதிருக்கிறதல்லவா?

இந்துக்கள், பல விக்கிரகங்களை வைத்துப் பலவிதமான ஆசாரங்களைக் கைக்கொண்டு பதினாறு விதமான உபசாரங்களைச் செய்து அர்ச்சித்து வழிபட்டு வருகிறார்கள்.

இக்காலத்தில், இந்துக்களில் பலருக்கு இவ்வித வழிபாடுகள் பயனுடையவைதானா என்ற சந்தேகம் இருந்து வருகிறதையும், அதனால் அவர்கள் அது சம்பந்தமாகப் பலவித கேள்விகள் கேட்பதையும், அவையெல்லாம் அர்த்தமற்றவை என்று எள்ளி நகையாடுவதையும் யாவரும் அறிவர். அப்படிப்பட்டவர்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களைத் தெளிவித்து, கேள்விகளுக்கு அவர்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய முறைகளில், சமயாச்சாரியார்களும், ஆகம சிற்ப விற்பன்னர்களும் கீழே குறிப்பிட்டிருக்கிற முக்கிய கேள்விகளுக்குப் போதிய அளவு நிருபணங்கள் கொடுத்து, இறைவழிபாடு, சிறந்த பயனைத் தரத்தக்கதென்று அவர்களை ஒப்புக்கொள்ளுமாறு செய்தல் வேண்டும்.

1. கோவில்களிலும், ஆகமங்களிலும், சிற்ப சாஸ்திரங்களிலும் விவரித்திருக்கின்ற மூர்த்திகள் மேலுலகங்களில் அன்றும், இன்றும் என்றும் இருக்கின்ற மூர்த்திகளா? அல்லது மனிதன் கற்பித்த உருவங்களா?

சிற்ப சாஸ்திர முறைப்படி தயாரித்து, ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பெற்று இப்பூவுலகில் நாம் வழிபடும் மூர்த்திகள் எல்லாம் மேலுலகங்களில் உள்ள மூர்த்திகளேயாகும். அம்மூர்த்திகளின் வடிவங்களின் விபரத்தை விளக்குவன, சிற்ப சாஸ்திரங்கள். அம்மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்யும் முறைகளை விளக்குவது ஆகம சாஸ்திரங்கள். அம்மூர்த்திகள் எல்லாம், மனிதன் தனது கற்பனையினால் உண்டாக்கிய உருவங்கள் அல்ல. இதற்கு இந்து புராணங்களும் இதிகாசங்களும் இறந்தவர்களும் சான்று தருகின்றனர்.

‡ மதுரை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சென்னையில் 1976, மார்ச் 1 முதல் 5 வரை நடை பெற்ற உலக இந்து மத மகாநாட்டில் 4—3—1976 வியாழக்கிழமை அன்று நடந்த மாலை நிகழ்ச்சியில் தலைமை தாங்கி அருளிய ஆராய்ச்சி உரை, இங்கு மிகவும் போற்றி எடுத்து வெளியிடப் பெறுகின்றது. —ஆசிரியர்.

(அ) பெரிய புராணத்தில் காரைக்கால் அம்மையார் ஊனுடம்பைக் களைந்துவிட்டுப் பேயுடம்பாகிய சூக்கும சரீரத்தோடு சிவ லோகம் சென்றதாகவும், அங்கு உமாமகேசுவர ராகிய சிவபெருமான் ''வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே'' என்று உமா தேவியாருக்கு அறிவித்ததாகவும் காண்கின் றோம். மேலும், பேயுடம்போடு இருந்தபொழுது பாடியவைதான் அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணி மாலையும் என்று அறிகின் றோம்.

(ஆ) சுந்தரமூர்த்தி நாயனர் ஊனுடம் பைக் களைந்துவிட்டு உள்ளுடம்பாகிய சூக்கும சரீரத்தோடு விண்ணுலகத்திலிருந்து வந்த வெள்ளை யானையின் மேல் ஏறிக்கொண்டு சிவ லோகம் சென்றதும், அங்கு உமையொரு பாகராகிய சிவபெருமான் அவரை நோக்கி ''ஊரனே வந்தனையா'' என்று கேட்டதும், அவர் அங்குப் பாடிய ''நொடித்தான்மலைத் திருப்பதிகம்'' இப்பூலோகத்துக்கு வந்த வர லாறும் காண்கின்றோம்.

(இ) மகாபாரதத்தில், இந்திரன் தரும புத்திரரை, பரவாசுதேவர் எழுந்தருளியுள்ள நகரத்திற்கு அழைத்துப் போய், அங்கு வைகுண்டநாதரையும், கிருஷ்ணபகவான் அஷ்டலட்சுமியுடன் விளங்குவதையும் இறந்து போன கர்ணன், பீமன் முதலிய தம்பிமார், திரௌபதி இளம்பாண்டவர் ஆகியோரையும் காட்டினன் என்றும், அச்சுதப்பேர் அண்ண லாகிய பச்சைமால் மகாவிஷ்ணு, தம் அருகில் அமரும்படி அனுக்கிரகம் செய்தருளினர் என் றும், அந்தக் காட்சியைக் கண்டு யாவரும் மகிழ்ந்தனர் என்றும், புண்ணியத்தின் மகிமை யினை எண்ணிப் பூரித்தனர் என்றும் இருக்கிறது.

இவற்றிலிருந்து சிவலோகத்தில் சிவபெரு மானும், வைகுண்டத்தில் மகாவிஷ்ணுவும் புண்ணியம் செய்த அருளாளர்கள் காணு மாறும், அவர்களோடு உரையாடுமாறும் இருந்து அருள் பாலிக்கிறார்கள் என்பது தெளி வாகும். அல்லாமலும் பக்தியுடையவர்களும், புண்ணிய சீலர்களும், இப்பூலோகத்தில் இறந்த பின் மேலுலகத்தில், கனவில் தொழில்படு கின்ற, பாரமில்லாத அவயவங்களோடு கூடிய உள்ளுடம்போடும் அவரவர்களுக்குரிய முந்திய பெயரோடும் தொடர்ந்து வாழ்ந்து வருகி றார்கள் என்பதும் தெளிவாகும். அந்த உள்ளு டம்பே தமிழில் ஆவியுடல் என்றும், சமஸ் கிருதத்தில் சூக்கும சரீரம், யாதனு சரீரம், பிராணமயகோசம் என்றும், ஆங்கிலத்தில் ( Ghost ) ''கோஸ்ட்'' என்றும் கூறப் பெறுகின்றது. அவ்வாறு இறந்து மேலுலகம் சென்ற இந்துக்களும், ஆங்கிலேயர்களும் பூவுலகில் உள்ளவர்களோடு பேசி இந்துக்கள் இங்கு வழிபடுகின்ற மூர்த்திகள் எல்லாம் மேலு லகங்களில் இருந்து மக்களை ஆட்சிபுரிந்து வரு கிறார்கள் என்பதைத் தாங்கள் காண்பதாக ஊர்ஜிதம் செய்கிறார்கள் என்று நாம் வெளி யிட்டிருக்கிற ''இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்'' என்ற நூலில் விளக்கியிருக் கிறோம். இதற்கு ஆதாரம் கிறிஸ்தவ வேதப் புத்தகத்திலிருந்தும், திருக்குரானிலிருந்தும், கொடுத்திருப்பதுடன் விபூதியின் தொன்மை யையும், மகிமையையும் பைபிளிலிருந்தும் விளக்கியிருக்கிறோம்.

2. கல்லாலோ, செம்பாலோ, பிறவற்று லோ செய்த உருவச் சிலைகள் அந்தந்த மூர்த்தியை அதில் பிரதிஷ்டை செய்வதற்கு முன்னர் சாதாரண சிலைகளாக இருக்க, பிர திஷ்டை செய்த பின்னர் அந்தந்த மூர்த்தி யாகவே ஆகிவிடுகிறார் என்பதற்கு ஆகமங்கள் என்னென்ன பிரமாணங்கள் கூறுகின்றன?

நாம் இதற்குரிய தெளிவான விடையினை வெளியிட்டிருக்கிற 'இறந்தவர்கள் வாழும் நிலை யும் பேசும் முறையும்' என்ற நூலில் விளக்கி யிருக்கிறோம். எந்த உண்மையையும் நிலைநாட்டு வதற்கு, காணக்கூடிய உபமானம் ஒன்று சொல்லிக் காணமுடியாத உபமேயத்தை அனு மானித்து அல்லது யூகித்து உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

சாதாரண மனிதராக இருந்த ஒருவர் சம்பிரதாய முறைப்படி பலவகை மந்திர தீட்சைகள், ஆசார்ய அபிஷேகங்கள் முதலிய வற்றால் பலபேர் வணங்கத்தக்க முறையில் மடாதிபதியாக ஆகிறார். அதேபோல, சாதா ரண கற்களாலும், உலோகங்களாலும் செய்த உருவங்களை வேதாகமமுறைப்படி செய்கின்ற சில மந்திர, அபிஷேகங்கள் விசேஷ சக்தியுள் ளனவாக மாற்றி விடுகின்றன. அதே போலத் தான் சட்டப்படி ஜனாதிபதிப் பதவியும், மந்திரிப் பதவியும், பிற அரசாங்கப் பதவி களும் ஆகும்.

3. இங்குள்ள பஞ்சாங்கங்களில் குறிப் பிட்டிருக்கிற விசேஷ தினங்களெல்லாம் அந் தந்த நாட்களில் மேலுலகங்களில் கொண்டாடு கிற வைபவங்களா? அல்லது, பூலோகத்தில் மட்டும் கொண்டாடுகிற வைபவங்களா?

மேலுலகங்களில் கொண்டாடப்படும் எல்லா வைபவங்களும் அங்கு செய்வதைப் பார்த்தவர்கள் இங்குள்ளவர்களுக்குச் சொல்ல இவர்கள் இங்குக் கொண்டாடுகிறார்கள். அந் தந்த நாட்களில் குறிப்பிட்டபடி, அந்தந்த மூர்த்திகள் அந்தந்த வைபவங்களில் மேலுல கங்களில் சாந்நித்தியமாக இருந்து வழிபடுகின்ற வர்களுக்கு நேரில் அருள் புரிகின்றார்கள். இப் பூவுலகில் ஒரு படத்தை வைத்தோ, பிரதிஷ்டை செய்த மூர்த்தியை வைத்தோ வழிபடுகிறவர் களுக்கும், தகுதிக்குத் தக்கவாறு நேரிலோ, மற்றவர்கள் மூலமோ அம்மூர்த்தி அருள்பாலிக் கின்றார். இவ்வாறு சரஸ்வதி பூசை, சதுர்த்தி, கிருத்திகை, பிரதோஷம், ஆருத்ரா தரிசனம், வைகுண்ட ஏகாதசி, சிவராத்திரி முதலிய வைப வங்கள் அந்தந்த லோகங்களில் நடைபெற்று வருவதாக இறந்தவர்களில் அருளாளர்கள், உறுதிப்படுத்துகிறார்கள் என்று பல விளக் கங்கள் கொடுத்து வருகிறோம்.

4. இங்கு நாம் எந்த மூர்த்தியை வணங் கிப் பிரார்த்திக்கின்றோமோ, அந்த மூர்த்தி நாம் நினைப்பதையும், சொல்லுவதையும்,

செய்வதையும் தெரியக்கூடியவராக இருக்கிறார் என்பதை எவ்வாறு நிரூபிப்பது? நாம் செய்கின்ற அலங்காரங்களேயும், அர்ச்சனைகளே யும் நிவேதிக்கின்ற பதார்த்தங்களேயும் பதினாறு விதமான உபசாரங்களேயும் அவர் ஏற்றுக் கொள்ளுகிறார் என்பதை எவ்வாறு நிரூபிப்பது?

இராமாயணத்தில், ஸ்ரீ ராமபிரான் சீதாப் பிராட்டியாரை மீட்டியபின் அவ்வம்மையாரைத் தீக்குழிப்பாய்ந்து, தனது கற்பை உலகறியச் செய்யுமாறு சொன்னபொழுது அவர்கள் இருவரும் அழையாமலிருக்க, சீதாப் பிராட்டியாரது மனோநிலையையும், அங்கு நடக்கின்ற நிகழ்ச்சிகளேயும், 14 வருஷங்களுக்கு முன்பு விண்ணுலகிற்குச் சென்ற தசரதர் அறிந்து, தானே வந்து சீதாப்பிராட்டியாருக்குத் தேறுதல் மொழிகள் சொல்லி, தன் மைந்தனது பராக்கிரமத்தைப் போற்றி, அவரை இரண்டு வரங்கள் கேட்கச் சொல்லி, அவற்றைக் கொடுத்துச் சென்றதாகப் பார்க்கின்றோம். இதிலிருந்து இறந்தவர்களில் புண்ணிய சீலர்கள் இங்கு நாம் எண்ணுவதையும் பேசுவதையும், செய்வதையும் நாம் அறிவிக்காமலே அறியக் கூடிய ஆற்றலும், தாராளமாக இப்பூவுலகிற்கு வந்து போகக் கூடிய ஆற்றலும் உடையவர்கள் என்பது புலனாகின்றதல்லவா?

இராமபிரானும், சீதாப் பிராட்டியாரும் இலட்சுமணப் பெருமாளும் வனவாசம் செய்யும்பொழுது விண்ணுலகிலுள்ள தசரதச் சக்கரவர்த்திக்கு சிராத்தம் செய்தார்கள் என்றும், அங்கு தசரதச் சக்ரவர்த்திக்கும், அவரது தகப்பனாருக்கும் பாட்டனாருக்கும் மூன்று இலைகள் போட்டுப் படைத்துக்கொண்டிருக்கும்பொழுது, சீதாபிராட்டியார் திடீரென்று வெளியே போய்விட, இலட்சுமணப் பெருமாள் படைக்க வேண்டியவற்றைப் படைத்து சிராத்தம் கொடுத்தபின் சீதா பிராட்டியார் குடிசைக்குள் வந்ததாகவும், அப்பொழுது திடீரென்று வெளியே போனதற்குக் காரணம் கேட்டபொழுது, மாமா அவர்களுடன் பாட்டனாரும் முப்பாட்டனாருமான தனக்குத் தெரியாத வேறு இரண்டு அரசர்கள் இலைகளில் வீற்றிருந்ததினாலும், தான் மரவுரியுடன் இருந்த காரணத்தினாலும், வெட்கப்பட்டு வெளியே போனதாகவும் கூறினார்கள் என்றும் வால்மீகி இராமாயணம் இயம்புகின்றது. ஆனதால், அருளுலகிலுள்ளவர்கள் நாம் படைக்கின்ற பதார்த்தங்களே ஏற்றுக் கொள்ளுகிற ஆற்றலுள்ளவர்களாக இருக்கிறார்களென்பது தெளிவாகும். அதனாலேயே சிராத்தத்தன்று 'அப்பா வருகிறார்' 'அம்மா வருகிறாள்' அவர்கள் சாப்பிட்ட பிறகுதான் வீட்டார் சாப்பிட வேண்டுமென்று சொல்லுகின்ற பழக்கம் இன்றும் இருந்து கொண்டிருக்கின்றது. இவை தவிர வேறு பல சான்றுகளும் இறந்தவர்களுடன் பேசித் தெரிந்த அனுபவங்களேயும், நாம் வெளியிட்டிருக்கிற புத்தகத்தில் விளக்கியிருக்கிறோம்.

இறந்த மனிதர்களுக்கே இந்த ஆற்றல் இருக்குமானல், நம்மையும் இறந்தவர்களேயும், ஆண்டு வருகின்ற அதிகார மூர்த்திகளுக்கு நாம் எண்ணுவதையும், பிரார்த்திப்பதையும் செய்வதையும், அலங்கரிப்பதையும் நிவேதிப்பதையும், அர்ச்சிப்பதையும் அறிந்து கொள்ளத் தாராளமாக முடியும் என்பதை யூகித்து உணர்ந்து கொள்ளலாம் அல்லவா? இதற்குப் பல சான்றுகள் தந்திருக்கிறோம்.

5. நாம் நினைப்பதையும், சொல்லுவதையும், செய்கின்ற அத்தனையையும் அவர் அறிந்து கொள்ளக் கூடியவர் என்பதை நிரூபித்து விட்டாலும், நாம் பிரார்த்தித்த காரியங்களே அடையுமாறு செய்து, நமது கஷ்ட நஷ்டங்களே எவ்வாறு நீக்குகிறார்? தானே வந்து நீக்குகிறாரா? அல்லது ''தேவா மனுஷ்ய ரூபேணும்'' என்ற முறையில் அவரது திருநாமத்தைப் பூண்ட மனிதர்களே அதிட்டித்து அனுக்கிரகிக்கிறாரா? இவற்றை எவ்வாறு நிரூபிப்பது?

உண்மையில் நம்மை இவ்வுலகத்தில் பிறப்பிப்பதும், இறப்பிப்பதும் அவரவர் கன்மத்திற்கேற்ப இன்பம், துன்பம் அனுபவிக்கச் செய்விப்பதும் இறுதியில் நமக்கு, நான்கு பேர் தூக்க வேண்டிய பாரமுள்ள சரீரத்தைக் கீழே கிடத்திவிடும்படி விடுதலை கொடுத்துப் பாரமில்லாத உள்ளுடலோடு விண்ணுலகில் சென்று வாழும்படி செய்வதும், மேலுலகத்திலுள்ள அரசாங்கமே தவிர இம்மண்ணுலகிலுள்ள அரசாங்கமல்ல என்பதை யாவரும் அறிவர்.

எந்த அரசாங்கமும், இரண்டுவித உபகாரங்கள் செய்யும். ஒன்று, எல்லோருக்கும் செய்கின்ற பொது உபகாரம், மற்றது மனுக் கொடுத்தவர்களுக்கு மட்டும் செய்கின்ற சிறப்பு உபகாரம். மனுக்கொடுக்காதவர்களுக்கு அவ்விதச் சிறப்பு உபகாரம் கிடைக்காது. உதாரணமாக நாம் போலீஸ் இலாகாவிலுள்ள பெரிய அதிகாரிக்கு ஒரு மனுப் போட்டால், அவரே வரக்கூடிய தகுதியுள்ளவற்றிற்கு அவரே வருவார். அல்லது விண்ணப்பத்தின் தகுதிக்கேற்பத் தனக்குக் கீழே உள்ள ஒரு அதிகாரியை அனுப்பி விசாரிக்கச் செய்து உதவி புரிவார். அதுபோலவே நாம் எந்த அதிகாரமூர்த்தியிடம் விண்ணப்பம் செய்தோமோ, அந்த மூர்த்தி, தானே தகுதியுடையோருக்குக் கனவில் உத்தரம் கொடுப்பதும், மற்றவர்களுக்குத்தகுதிக்குத் தக்க மனுஷர்களேக் கொண்டு, அதிலும் அந்த மூர்த்தியின் பெயர் தாங்கினவர்களே அதிட்டித்து நின்று அவர்கள் மூலம் உதவி செய்து வருவதும் பிரத்யட்சமாக யாரும் அவரவரது அனுபவத்தில் கண்டு ஆனந்திக்க வேண்டிய விஷயம். இதிலிருந்து மேலே கூறியிருக்கிறபடி ''தேவா மனுஷ்ய ரூபேணும்' என்பதும் உறுதியாகிறது.

மேலும் பெயரிட்டு அழைப்பது ஆவி உடலுக்கே என்றும், அந்த உடலைத் தந்தது எல்லோருக்கும் அம்மை அப்பனாகிய ஆண்டவனே என்றும், அதற்குப் பெயரிட்டதும் ஆண்டவனே என்றும், ஆண்டவன் தந்த அந்த உடல் இவ்வுலகத்தில் எதனாலும் அழிக்க முடியாத ஒன்று என்றும், அது மேலுலகத்தில் அழிக்கப் பெறக் கூடியது என்றும், இவற்றிற்கு நிரு

பணங்கள் நாடி சாஸ்திரமும், சோதிட சாஸ்திரமும் கொடுக்கின்றன என்றும் விளக்கியிருக்கிறோம். காலம் சென்ற நாகர்கோயில் ஆறுமுக நாவலரது ஏட்டில் அவர்களுக்குப் பெயர் ''ஐந்தும் ஒன்றும் வதனமெனப் பெயரும் சூட்டி'' என்றிருந்தது. ஐந்தும் ஒன்றும் ஆறு; வதனம் என்றால் முகம். ஆறுமுகம் என்று ஆகின்றதல்லவா? ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவரது பெயர். ''சாவில் ஆறும் சாவில் ஒன்பதும், இவன் தன் நாமம்'' என்றிருந்தது. 'ச' என்ற எழுத்து வரிசையில் ஆறுவது எழுத்து 'சூ'-ஒன்பதாவது எழுத்து 'சை'-அவரது பெயர் ''சூசை'' ஆகிறதல்லவா? ஒருவருக்கு முருகன் என்றும் மோகன் என்றும் இரு பெயர்கள் உண்டு என்று கண்டிருந்தது. இஸ்லாமியரது பெயர் ''அப்துல் ரகுமான்' என்றே வந்தது. ஆங்கிலேயர் ஒருவரது பெயருக்கு ''முழத்தில் பாதி இவன் தன் நாமம்'' என்றிருந்தது. முழத்தில் பாதி சாண்—ஜான் என்றாகிறதல்லவா? இதனை உணர்த்தவே கிறிஸ்தவ வேத நூலாகிய பைபிளில் பிரசங்கி ஆகமம். 6-ஆம் அதிகாரம் வசனம் 10 ''இருக்கிறவன் எவனும் தோன்றுமுன்னமே பெரிடப் பெற்றிருக்கிறான். அவன் மனுஷன் என்று தெரிந்திருக்கிறது'' என்று கூறுகிறது. மேலும் யோபு ஆகமம் அதிகாரம் 37, வசனம் 7, ''தாம் உண்டாக்கின சகல மனுஷரும் தம்மை அறியும்படிக்கு அவர் சகல மனுஷருடைய கையையும் முத்தரித்துப் போடுகிறார்'' என்று கூறுகிறது. ஒவ்வொருவரது தலை விதி அல்லது தலையெழுத்து அவரவரது உள்ளங்கைகளில் சுருக்கு எழுத்துப் போன்ற இரேகைக் கோடுகளால் பிறக்கு முன்னரேயே கடவுளால் எழுதப் பெற்றே பிறந்திருக்கிறோம் என்பதற்கு வேறு சான்றுகளும் வேண்டுமோ?

6. இப்பூவுலகம் நமக்குச் சொந்த இடமா? அல்லது மேலுலகமே நமக்குச் சொந்த இடமா? நாம் எங்கிருந்து வந்திருக்கிறோமோ, எந்த இடத்திற்கு நாம் வந்த இடத்திலிருந்து திரும்பவும் சென்று சேருகிறோமோ, அது தானே நமது சொந்த இடமாக இருக்க வேண்டும்?

இப்பூவுலகம் நமது சொந்த இடமல்ல; மேலுலகமே நமது சொந்த இடமாகும். அவரவர் செய்த கன்மத்துக்கு ஈடாகக் கருணையுள்ள கடவுள் கொடுத்த தீர்ப்பின்படியே நாம் இவ்வுலகில் பிறந்திருக்கிறோம் என்பதை நாடி சாஸ்திரம் சந்தேகத்திற்கு இடமின்றி ஊர்ஜிதப்படுத்தி விடுகிறது. எப்பொழுதும், தீர்ப்பு கொடுக்கின்ற இடம், தீர்ப்பு கொடுக்கப்பட்டவர்கள் வாழ்கின்ற சிறைச்சாலைக்கு வெளியில் தானே இருக்கும்? தீர்ப்புக் கொடுக்கிற அதிகாரிகளும் அச்சிறைச்சாலைக்கு வெளியில்தானே இருப்பார்கள்? சிறைத் தண்டனைக்கு உட்பட்ட அத்தனை பேர்களும், சிறைச்சாலைக்கு வெளியே, யாதொரு தடையுமின்றி, சுதந்திரமாகத் தானே வாழ்ந்தவர்கள் ஆவார்கள்? சிறைச்சாலைக்கு உள்ளே இருக்கிற வேற்றுமைக்குக் காரணம். அதிகாரிகள் கொடுத்த தீர்ப்புக்களே ஆகும். அவ்விதத் தீர்ப்புக்குக் காரணம். அவரவர், அதற்கு முன் சட்ட விரோதமாகச் செய்த செய்கைகளால் தானே ஏற்பட்டதாகும்? ஆகவே இவ்வுலகில் வாழ்கின்ற சகலருக்கும் சொந்த இடம் மேலுலகங்களேயாகும், இப்பூவுலகம் வந்த இடமேதான். எங்கிருந்து நாம் இங்கு வந்தோமோ, எங்கு நாம் திரும்பவும் இறந்து வாழப் போகிறோமோ, அதுவே நமது சொந்த இடமாகும். இம்மை வாழ்வு என்பது இவ்வுலக வாழ்வும், அம்மை வாழ்வு என்பது மேலுலக வாழ்வும், அது முடிந்தபின் கொடுக்கப்படும் புதிய உடம்போடு கூடிய வாழ்வு, மறுமை வாழ்வும் ஆகும். அம்மை மறுமை வாழ்வுகளை அடியோடு மறந்ததே, உலகத்தில் இன்று நடக்கின்ற பலவித அட்டூழியங்களுக்கும் மூலகாரணமாகும்.

இப்பூவுலகில் வாழ்ந்துவரும் மக்களில் பெரும்பாலோர் அவரவர் மனத்தால், வாக்கால் உடலால், உடைமையால், (பொருளால்) செய்து வரும் நல்வினைகளும், தீவினைகளும் உண்மையாகவே மேலுலகங்களில் பதிவாகின்றன என்பதைச் சிறிதும் உணராது இருக்கின்றனர். யார் யாருக்கு அவ்வினைகள் செய்யப் பெற்றனவோ அவரவரது தகுதியைப் பொறுத்துப் புண்ணியபாவங்கள் தீர்மானிக்கப் பெறுகின்றன என்பதையும், அவரவர் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தகுந்தபடி பிறவிகளும், இன்பதுன்பங்களும் ஆண்டவனால் கொடுக்கப் பெறுகின்றன என்பதையும் உணராதிருக்கின்றனர்.

இப்பூவுலகில் நனவில் தூல உடலைச் சுமந்து கொண்டிருந்த ஆவி உடலே, இறந்த பின் மேலுலகங்களில் தொடர்ந்து அவரவர் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்க அருள் உலகத்திலோ, இருள் உலகத்திலோ தொடர்ந்து வாழும்படி ஆண்டவன் செய்கிறார் என்பதையும் உணராதிருக்கின்றனர்.

அவ்வுலக வாழ்வு முடிந்ததும் அவரவரது ஆவி உடல் அழிக்கப் பெற்று அவரவர்கள் இவ்வுலகிலும் அவ்வுலகிலும் செய்த புண்ணிய பாவங்களின் தன்மைக்குத் தகுந்தபடியே நீதியுள்ள ஆண்டவன் நன்மையாகவோ, தீமையாகவோ தீர்ப்புக் கொடுக்க வேண்டியதிருக்கிறதென்பதையும், அத்தீர்ப்பைப் பொறுத்தே மறு பிறவிகளில் உயர்ந்த பதவிகளும், தாழ்ந்த பதவிகளும், இன்பங்களும், துன்பங்களும் ஏற்படுகின்றன என்பதையும் உணராதிருக்கின்றனர். அவரவர் இன்றுள்ள நிலைகளுக்கு அவரவர் முன்பு செய்த புண்ணிய பாவங்களே மூல காரணமாகும். அதனாலேயே ''இன்பமும் துன்பமும் தான் தர வருமே'' என்றும், ''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்றும் ''பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்'' என்றும், ''பதவிபூர்வ புண்ணியானாம்'' என்றும் ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.

இவற்றின் உண்மைகளை எந்த அளவில் மக்கள் உணர்ந்து கொள்வார்களோ, அந்த அளவுக்கு மேன்மையான நல்வாழ்வு வாழுவார்கள்.

*மதுரை ஆதீன கர்த்தர் அவர்களின் அரிய ஆராய்ச்சி நூல்கள்!*

(1) இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும் ரூ. 4.00. (2) இந்துமதக் கொள்கைகளையே கிறிஸ்தவ வேத நூலும் இயேசுநாதரும் உணர்த்தி இருப்பதின் விளக்கம் ரூ. 1.00. (3) சிந்தனையாளர்களது கேள்விகளுக்குத் தெளிவு தரும் விளக்கங்கள் ரூ. 1.00. (4) கடவுளுக்கும் உயிர்களுக்கும் உள்ள தன்மைகளும் உண்மையான உறவும் ரூ. 1.00. (5) விக்கிரக ஆராதனையின் விளக்கம் ரூ. 1.00. (6) மரணபயம் தீரும் வழி ரூ. 1.00. (7) பைபிளுக்கு மாறுன கிறிஸ்தவக் கொள்கைகள் 0.50. (8) திருநீற்றின் பெருமை 0.30. (9) அற்புதச் செயல்கள் 0.25. (10) இந்தியாவும் உலக சமாதானமும் 0.25. (11) ஆலயங்களில் கூட்டுப்பிரார்த்தனையின் அவசியம் 0.25. (12) உருவ வழிபாட்டின் விளக்கம் 0.20. (13) துன்பம் துடைக்கும் வழி 0.20. (14) சமயமும் மனச் சாந்தியும் 0.20. (15) புண்ணிய பாவ விளக்கம் 0.20. (16) இந்துசமய உண்மைகளை உலகுணரச் செய்யும் வழி 0.15. (17) திரு. சி. என். அண்ணுதுரைக்கு எழுதிய கடிதம் 0.15. (18) திரு. கே. வி. சுப்பையா அவர்களுக்கு எழுதிய கடிதம் 0.15. (19) Delhi Address 0.50. (20) God and Creation in Hinduism 0.50. (21) The only solution for World Peace 0.50. (22) Fundamentals for Peace and Contentment 0.25. (23) An open Challenge to World Agnostics & Atheists 0.25.

—: தபால் செலவு தனி :—

கிடைக்குமிடம்:

**மதுரை ஆதீனம்,**
70, தெற்கு ஆவணிமூல வீதி,
மதுரை—1.

மதுரை ஆதீனத்துக்குச் சொந்தமான
தஞ்சை மாவட்டத்திலுள்ள,

1. ஸ்ரீ சாட்சிநாத சுவாமி கோவில், திருப்புறம்பயம்.
2. ஸ்ரீ அக்கினீஸ்வர சுவாமி கோவில், கஞ்சனூர்.
3. ஸ்ரீ கச்சனேஸ்வர சுவாமி கோவில், கச்சனம்.
4. ஸ்ரீ பன்னகா பரமேஸ்வர சுவாமி கோயில், பன்னதெரு.

ஆகிய திருக்கோயில்களின் வெளியீடு.

## மதிப்புரை....

### தடைகளும் விடைகளும்

சமயத் தொடர்பான பகுத்தறிவு வினுக்கள் பலவற்றிற்குத் தெளிவும் பொருத்தமும் வாய்ந்த விடைகளைத் தரும் இந்நூல், புலவர் மாமணி சித்தாந்த வித்தகர்—திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் (மலேசியா) அவர்களால், இயற்றப்பெற்றது. இதன் முதற் பகுதி, முன்பே (1966) வெளிவந்துள்ளது. இவ்விரண்டாம் பகுதி, அண்மையில் வெளிவந்தது. இக்கால இளைஞர்களுக்கு, இவ்விரு நூல்களும் பெரிதும் பயன்படும். சமயத் தொடர்பாக இளைஞர்களுக்கு நேரும் பலவகை ஐய வினுக்களுக்கும், இந்நூல் செவ்விய தெளிவான விடைகளைத் தந்துள்ளது. ஆசிரியரின் கடவுட் பற்றும், சித்தாந்தப் புலமையும், தமிழ்ப் பண்பாட்டு நலன்களும், தெளிவான விடையளிக்கும் திறனும், மிகவும் வியந்து போற்றற்பாலன. தூய இனிய நல்ல தமிழில் இயன்றுள்ள இந்நூல், அறிவிற்கு விருந்து, சிந்தனைக்குப்பெரும் தூண்டுகோல் எனச் சிறந்து திகழ்கின்றது. **இதன் விலை ரூ. 6—25**

இந்தப் புத்தகம் கிடைக்குமிடம்:

மறைமலையடிகள் மன்றம்,
புன்செய்ப் புளியம்பட்டி : : ஈரோடு (வழி),
கோவை மாவட்டம், தமிழ் நாடு.

# சித்த மருத்துவம்

''முத்தமிழ்க் காவலர்''
திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்,
திருச்சி.

கலை ஒரு தனி வகை. இரண்டு எழுத்துக்கள் உள்ள இரு சொற்களைக் கொண்ட ''தனி வகை'' என்ற இச்சொற்றொடர் ''தனிப் பிரிவு'' என்றாகி, ஒப்பற்ற பிரிவு என்ற பொருளையும் தந்து மிகவும் உயர்ந்து நிற்பதைக் கண்டு மகிழலாம்.

### உயர்வு

எல்லாக் கலைகளையும் கண்டு, அறிந்து, போற்றி வளர்த்து, துய்த்து, மகிழ்ந்து வாழ்வதற்கு, உடலைப் பாதுகாத்து ஆகவேண்டும் ஆதலின், உடல் ஓம்பும் இம்மருத்துவக் கலை எல்லாக் கலைகளிலும் உயர்ந்து நிற்பது இயல்பேயாகும்.

### காலம்

சித்த மருத்துவமும் தமிழ் மருத்துவமும் ஒன்றே. இம்மருத்துவம் பிறந்த காலத்தை அறிந்து கூற இயலாது. கூறவேண்டுமானால் தமிழகத்து மண்ணில் செடி கொடிகள் தோன்றிய காலமே தமிழ் மருத்துவம் தோன்றிய காலம் என்று துணிந்து கூறலாம்.

### மொழி

நாட்டு வைத்தியம் என்று பொதுவாகக் குறிப்பிடுவது மூன்றை; ஒன்று, சித்த மருத்துவம்; இரண்டு, ஆயுர்வேதம்; மூன்று, யூனானி. தமிழ் மருத்துவத்துக்கு மொழி தமிழ் ; ஆயுர்வேதத்திற்கு மொழி வடமொழி; யூனானிக்கு மொழி உருது. யூனானிக்குத் திசை மேற்கு; ஆயுர்வேதத்திற்குத் திசை வடக்கு; சித்த வைத்தியத்திற்குத் திசை தெற்கு.

### மருந்து

தமிழ் மருந்துகள் பெரும்பாலும் பொடியும் கியாழமுமாகவும் இருக்கும். இதனைப் பசுபம் (பஸ்பம்) என்றும், கசாயம் என்றும் சொல்லுவார்கள். ஆயுர் வேத வைத்தியம் பெரும்பாலும் தைலமும் திராவகமுமாக இருக்கும். யூனானி மருந்துகள் பெரும்பாலும் அல்வாவும் லேகியமுமாக இருக்கும்.

### பசுபம் (பஸ்பம்)

இரும்பு, வெள்ளி, தங்கம், செம்பு முதலிய உலோகங்கள் ஒன்பது. முத்து, மணி, பவழம் முதலிய இரத்தினங்கள் ஒன்பது. வீரம், பூரம் முதலிய பாசாணங்கள் ஒன்பது. இதனை முறையே நவ லோகம், நவ ரத்தினம், நவ பாசாணம் என்பர். இந்த மூவொன்பது இருபத்தேழையும், பசுபமாக்கும் முறை சித்த வைத்தியத்தில் மட்டுமே உண்டு. பிற மருத்துவ முறைகளில் இவற்றில் சில பசுபமாகச் செய்யப்படும். எனினும், அதன் மூலம் சித்த வைத்திய முறையாகவே அமைந்திருக்கும்.

### எளிது

அலபதி முறையில் ஆங்கிலேயர்கள் இவற்றில் சிலவற்றைப் பசுபமாக்குகிறார்கள். ஆனால் விலையுயர்ந்த இயந்திரத்தில், அதிகச் சம்பளம் வாங்குகிறவர்களின் கண்காணிப்பில், பெரும் பொருட் செலவில், அவை செய்யப் பெறுகின்றன. சித்த வைத்திய முறையிலோ இரண்டு மூன்று 'வரட்டி'களைக் கொண்டு சில மூலிகைகளின் சாறுகளைத் தடவி எளிய முறையில், குறைந்த செலவில், சுருங்கிய நேரத்தில் இவை அனைத்தும் பசுபமாக்கப் பெற்று வருகின்றன.

### உணவே மருந்து

சித்த வைத்தியத்தில் உணவும் மருந்தும் ஒன்றாகவே அமைந்திருப்பது வியப்புக்குரியது. காய்கறிகளெல்லாம் மருந்து; கீரை வகைகளெல்லாம் மருந்து. கடுகு, மிளகு, சீரகம், பூண்டு, மஞ்சள், சுக்கு, திப்பிலி முதலிய கடைச் சரக்குகளெல்லாம் மருந்து. சுருக்கமாகச் சொல்லப் போனால் பசுவின் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் அனைத்துமே மருந்து. உணவே மருந்தாக அமைகின்ற இவையே சித்த வைத்திய முறையாகும். தமிழகத்தைத் தவிரப் பிறநாடுகளில் உணவுப் பொருள்களே மருந்தாக அமைகின்ற முறையைக் காண முடியாது. தமிழகத்துத் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப, தமிழ் மக்களுக்குத் தோன்றும் பிணிகளுக்குத் தமிழகத்து மண்ணில் முளைக்கின்ற செடி, கொடிகளை மருந்தாகத் தருவதே தமிழ் மருத்துவ முறையாகும்.

### கை வைத்தியம்

தாய்வழி மகள் காதுவழி கேட்டுக் கை வைத்தியமாகச் செய்யப்படுகின்ற ஒரு முறையும் தமிழகத்தில் உண்டு. இதையே சித்த வைத்தியம் என்றும், தமிழ் மருத்துவம் என்றும் வீட்டு வைத்தியம்என்றும் கூறுவதுண்டு. இந்தத் தலைமுறையில் நகரங்களில் வாழ்கின்ற படித்த

பெண்கள் இம்முறைகளை அடியோடு கைவிட்டு விட்டனர். எனினும் சிற்றூர்களில் உள்ள எளிய குடும்பங்களில் இம்முறை இன்னும் இருந்து வருகிறது.

### சிறப்பு

சித்த வைத்தியம், காலத்தால் முந்தியதும் விலையால் குறைந்ததும், கையாள்வதில் சிறந்த தும், பலனால் மிகுந்ததும், தகுதியால் உயர்ந் ததுமாகும். இவ்விதமிருந்தும், மக்களின் உணர்ச்சிக் குறைவும், மருத்துவர்களின் முயற்சிக் குறைவும், அரசினர் கவனக் குறைவும் ஒன்று சேர்ந்ததினாலேயே இச்சித்த வைத்திய முறை அழியத் தொடங்கிவிட்டது.

### ஒத்தை மருந்து

சித்த வைத்தியத்தில் ஒத்தை மருந்து என்று சில மருந்து உண்டு. அது, பூண்டு ஒரு மருந்து. கடுகு ஒரு மருந்து. வெங்காயம் ஒரு மருந்து. தேங்காய் ஒரு மருந்து. அந்த ஒன்றையும், எதையும் சேர்க்காமல், அரைக்கா மல், காய்ச்சாமல், நிறுக்காமல், உருக்காமல் அப்படியே கொடுக்கச் சிற்சில நோய்கள் தீரும். இதை வடமொழியினர் ''ஏக மூலிகைப் பிர யோகம்'' என்பர். அவற்றுள் சில :

1. பாம்பு கடித்தால் வாழைப் பட்டை யில் உள்ள சாற்றைப் பிழிந்து கொடுக்க உடனே குணமாகும்.

2. பூரான் கடித்தால் பனை வெல்லத்தை யுண்டால் அதன் தடிப்பு உடனே மாறும்.

3. பிறந்த குழந்தை தவறிப் போய்ப் பெற்ற தாய்க்குப் பால்கட்டி முலைக்குத்தல் ஏற்பட்டால், மல்லிகைப் பூ வைத்துக் கட்ட உடனே குணமாகும். மல்லிகைப் பூ கிடைக் காத காலங்களில் வாழைப் பிஞ்சை அரைத்துத் தடவிக் குணங் காணலாம்.

4. நட்டுவாக்காலி கடித்தால் கொப் பரைத் தேங்காயை மென்று தின்ன உடனே குணங் காணலாம்.

5. இந்த ஒத்தை மருந்தும் ஒரே வேளை தான். இரண்டாம் வேளை மருந்து தேவையே இல்லை.

இம்மாதிரி முறைகள் நூறு ''தமிழ் மருந்து கள்'' என்ற நூலில் என்னால் வெளியிடப்பெற் றிருக்கிறது. விலை ஐம்பது காசே. இப்போது வந்துள்ள பதிப்பு பன்னிரண்டாம் பதிப்பு. தமிழ்நாடு சித்த வைத்திய சங்கத்தின் தலைவர் டாக்டர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களால் இது பாராட்டப் பெற்றிருக்கிறது.

உயர்ந்த அறுவை மருத்துவ முறைகள் சித்த வைத்திய முறையில் உண்டு என்பதைக் கண்டு கூறியவரும் அவரே.

### அழிவு

தமிழ் மருத்துவ முறை அழிவதற்குத் தமிழ் மருத்துவர்களும் ஒரு வகையில் காரணமாயி னர். வறுமை வாய்ப்பட்ட மக்களிற் சிலர் தங்களை மருத்துவர் என்று சொல்லியும், தங்க ளிடமிருந்தது மருந்து என்று கூறியும், தவறு செய்ததமையால் பொது மக்களின் நம்பிக்கை கெடத் தொடங்கியது. மருத்துவ நூல்களில் உள்ள கவிதைகளையும் அதில் மறைபொருளாகச் சொல்லப்பட்ட மருந்துகளின் பெயர்களையும் அறியாமலும் புரியாமலும் இளம் மருத்துவர் கள் சிலர் தவறு செய்யத் தொடங்கினர். இதனால் பொது மக்கள் சிறந்த பண்டிதர்களை யும் உயர்ந்த மருத்துவர்களையும், அவர்களிடம் உள்ள தகுந்த மருந்துகளையும் சந்தேகிக்கத் தொடங்கினர். இவையும் சித்த வைத்திய முறை அழிவுக்குக் காரணமாயின.

### புதைந்து போனது

சித்த வைத்திய முறையில் சிறந்து விளங் கிய மருத்துவ மேதைகளும், பண்டிதமணிகளும் பலர் தங்களிடம் உள்ள உயர்ந்த முறைகளை வெளியே காட்டாமலும், பிறருக்குச் சொல்லா மலும், தனக்குப் பின் வாரிசாக ஒருவரைத் தேர்ந்தெடுத்துச் சொல்லி வைக்காமலும், அர சினருக்கு அறிவிக்காமலும், நூல்களாக எழுதி வைக்காமலும் மறைந்து போயினர். மறைய மறைய, ஒவ்வொரு சித்த வைத்தியரையும் புதைக்கப் புதைக்க, சில சித்த வைத்திய முறை களும் புதைக்கப் பெற்றே போயின.

### அழிந்த காரணம்

இந்தத் தவற்றை நமக்கு முன்னே வாழ்ந்த பெரியோர்கள் செய்யவில்லை. அவர்கள் தாங் கள் கண்ட அருமையான முறைகளைச் சுவடி களில் எழுதி வைத்தனர். ஆனால் பாவம் அச்சுப் பொறிகள் இன்மையாலும், ஓலைகளிலே எழுதிக் குவிக்க வேண்டியிருந்தமையாலும், விரிந்த சொற்களில் உள்ள பரந்த முறைகளை, சொற் களைக் குறைத்துக் கவிதைகளாய் அமைத்துச் சுவடிகளாக்கி வைத்துப் போயினர். அவை, தமிழ் மன்னர்களுடைய ஆட்சி அழிந்தமையி னாலும், ஆங்கில ஆட்சியினரின் அக்கறைக் குறைவினாலும், காலத்தால் பாழ்பட்டும், கடற் கோள்களின் அழிவிற்குள்ளாகியும், கரையான் களால் தின்னப்பட்டும் பல சுவடிகள் அழிந்து போயின. இவை அனைத்திற்கும் தப்பிச் சில நூல்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. இவற்றை யுங்கூட, பழஞ்சுவடிகளை ஆடிப் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் விட்டால் புண்ணியம் என்ற கொள்கை பரப்பப்பட்டதினால், அந்தப் புண்ணியத்திற்கு ஆசைப்பட்டு மீதமிருந்த பழஞ்சுவடிகளையும் சிலர் ஆற்றில் அள்ளிப் போட்டுவிட்டு அமைதி அடைந்தனர்.

### அழிந்துபோன மருத்துவ நூல்கள் :

1. அகத்தியர்—பன்னிரு காண்டம்.
2. போகர்—எண்ணாயிரம்.
3. கோரக்கர் மூலிகைப் பயன்—ஆயிரம்
4. கொங்கணவர்—மூவாயிரத்தி நூறு.
5. கோரக்கர்—வெண்பா ஏழாயிரம்.
6. மச்ச முனி—ஏழு காண்டம்.
7. சிவ வாக்கியர்—ஐந்து காண்டம்.
8. காசிபர் வண்ணம்.
9. உரோம முனி வடுகம்.
10. இராமதேவர் சந்தப் பா.

11. நந்தீசர் சந்தம்.
12. சங்குமா முனி கலித்துறை.
13. திருமூலர் திருமந்திரம்—எண்ணாயிரம்
14. பதஞ்சலி ஏழு காண்டம்.
15. சட்ட முனி நிகண்டு.
16. சட்ட முனி—இரண்டாயிரத்து எழு நூறு.
17. காலாங்கி நாதர்—நாலு காண்டம்.
18. போகர்—எழுநூறு முதலியன.

### இரத்தக் கண்ணீர்

இவை அனைத்தும் தமிழகத்துச் சான்றோர்களாகிய சித்தர் பெரு மக்களால் தமிழ் மொழியில் தோற்றுவிக்கப் பெற்றவை ; இவை அனைத்தும் அழிந்து போயின என்பது சிற்சில பாடல்கள் கிடைத்திருப்பதனாலும், சிற்சில நூல்களில் மேற்கோள்களாக வந்திருப்பதாலும் அறிய முடிகிறது. இன்னும் என்னென்ன நூல்கள் இருந்தனவோ? என்னென்ன பெயரில் இருந்தனவோ? அவற்றுள் என்னென்ன புதையல்கள் இருந்தனவோ? அவற்றின் ஆசிரியர்கள் யார் யாரோ? அறிய முடியவில்லை. அவை அனைத்தும் இன்று இருந்தால். . . ? நினைத்தாலே நெஞ்சம் புண்ணாகிறது. அழுதால் கண்ணிலிருந்து இரத்தக் கண்ணீரே சொட்டுகிறது. என்ன செய்வது?

### விருப்பம்

இந்த இழிநிலை மாற வேண்டும். மக்கள் சித்த வைத்தியத்தின் அருமை பெருமைகளை உணர வேண்டும். தாய்வழி மகள்வாய் வழிக் கேட்டு கை வைத்தியமாகச் செய்யும் முறை தமிழகத்தில் மலர வேண்டும். மருத்துவத்திற்காகச் செலவழிக்கும் பெரும் பொருள் மிச்சப்பட வேண்டும். சிற்றூர்களிலெல்லாம் தமிழ் மருத்துவ மனைகள் திறக்கப்பட வேண்டும். சித்த வைத்தியப் பள்ளிகளும், கல்லூரிகளும் தமிழகத்தில் பெரும்பான்மையாகத் திறக்கப்பட வேண்டும்.

### மருத்துவர் தலைவன்

உலகுக்கு முதல் முதல் மருத்துவக் கலையை வழங்கியவர் நமது முன்னோர். அவர்களிற் சிலர் தமிழ்ச் சான்றோர். அவர்களில் சிலர் சித்தர்கள். அவருள்ளும் ஒருவர் எல்லாம்வல்ல சித்தராகிய இறைவன். அவர் கோவில்கொண்ட இடங்கள் தமிழகத்தில் பல. அவற்றுள் ஒன்றே வைத்தியநாதர் திருக்கோயில். பெயரைப் பார்த்தீர்களா? இங்குக் கோயில் கொண்டுள்ள இறைவன் மருத்துவர் மட்டுமல்ல. மருத்துவர்களின் தலைவன் ''வைத்தியநாதன்''.

### முடிவு

உடற் பிணிக்கும், உளப் பிணிக்கும், உயிர்ப் பிணிக்கும் சேர்த்து மருந்து வேண்டுவோர் இத்தலத்தையே வந்தடைகின்றனர். இத்தலத்திலுள்ள பழம்பெருமை வாய்ந்த இத்திருக்கோவில் தருமபுர ஆதீனம் திருப்பெருந்திரு மகாசந்நிதானம் அவர்களுடைய கண்காணிப்பினால் மிகச் சிறந்து விளங்கிவருகிறது. அன்பர்கள் அனைவரும் வைத்தியநாதரை வணங்கி அருளும் பெற்று, சித்தமருத்துவம் போற்றி நலமுற வாழ வேண்டுகிறேன். வாழ்க தமிழ் மொழி! வளர்க சித்த மருத்துவம்! ***


# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

**இருக்கன்குடி, சாத்தூர் வட்டம்**

இத்திருக்கோயில் சாத்தூர் நகரிலிருந்து 5 மைல் தொலைவில் வைப்பாற்றிற்கும் அர்ச்சுனா நதிக்கும் இடையில் அமைந்துள்ள ஒரு பிரார்த்தனைத் தலமாகும். தமிழ் நாட்டிலுள்ள புகழ்பெற்ற மாரியம்மன் திருக்கோயில்களில் இதுவும் ஒன்றாகும். தென் தமிழ் நாட்டுப் பகுதியிலிருந்து மக்கள் பெருமளவில் வந்து வழிபட்டுச் செல்வர். குறிப்பாக வெள்ளிக்கிழமைகள் தோறும் கூட்டம் சிறப்பாக இருக்கும்.

ஆடித் திங்களில் ஆடிப் பெருந் திருவிழா சிறப்பாக நடைபெறும். திருவிழாவின் போது இலட்சக்கணக்கான மக்கள் வந்து வழிபட்டுச் செல்வர். இக்கோயிலுக்கு முடிக்காணிக்கை, உண்டியல் ஆகியவைகளே பிரதான வருமானங்களாகும். ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய 1 இலட்சம் மொட்டைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இக் கோயிலின் சராசரி ஆண்டு வருமானம் இரண்டரை இலட்சம் ரூபாய் ஆகும்.

அனைவரும் அருள்மிகு மாரியம்மனின் அருள் பெற்றுய்ய வேண்டி விழைகிறோம்.

செயல் அலுவலர்,
**அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்,**
இருக்கன்குடி,


158612

# இல்லங்களைப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம் — காதி கிராப்ட்

கோடைக்கேற்ற கதர் பருத்தி வகைகள்
கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பட்டு
தினுசுகள், தாகம் தணிக்க பதநீர், சுவை
மிகுந்த தேன், அக்மார்க் செய்யப்பட்ட
செக்கெண்ணெய், உடலுக்கு உறுதி
அளிக்கும் பனைவெல்லம், மணமும், அழகும்
பெருக்கும் குறிஞ்சி வாசனை சோப்பு,
வெள்ளை வெளேர் சலவைக்குக் கோபுரம்
சோப்பு, சிறந்த முறையில் செய்யப்பட்ட
காலணிகள், தோல் பொருட்கள்,
வேலைப்பாடு மிக்க மண்பாண்டங்கள்,
இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச்
சாமான்கள், பிரம்பு, மூங்கிலிலான
பொருட்கள் மலிவு விலை தீப்பெட்டிகள்,
அழைப்பிதழ் அச்சிட கைக்காகிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180
**காதி கிராப்ட்** களிலும்
மலிவு விலையில் கிடைக்கும்.
வாங்கிப் பயன் பெறுவீர்!
கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிப்பீர்!



வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்!

- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள் !
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது !
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து !
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

## இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-60



நெடுங்கல் மன்றம்



எழுநிலை மாடம்

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.